# கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

# KARKATHAR OPPURAVU


| | | | | |
|---|---|---|---|---|
| மலர்–17, இதழ் – 8<br>Volume - 17, Issue - 8 | ஆடித் திங்கள்<br>July 2026 | விலை ரூ. 25/–<br>Price Rs. 25/- | ஆண்டு சந்தா ரூ. 300/–<br>Annual Subscription Rs. 300/- | தமிழ் மாத இதழ்<br>Tamil Monthly |




"Delivered by India Post"

www.indiapost.gov.in

THE KNEE INSTITUTE
RESTORING MOVEMENT
By
Parvathy Hospitals

# சிகிச்சைக்குப் பிறகும் முழங்கால் வலி கவலையா?

“என் முழங்கால் இப்போது முன்பு போல் நன்றாக உள்ளது.”



கவலை வேண்டாம்...
வலி இனி இல்லை!

**KINEMATICALLY ALIGNED KNEE REPLACEMENT**
மூலம் சிறந்த தீர்வு.

- அதே நாளில் டிஸ்சார்ஜ்
- அறுவை சிகிச்சைக்குப் பின் (பிசியோதெரபி) தேவையில்லை

## எங்கள் சிகிச்சையின் சிறப்புகள்

- சர்வதேச அளவில் பயிற்சி பெற்ற அறுவை சிகிச்சை மருத்துவர்கள்
- அடுத்த நாளிலிருந்து குளிக்கலாம் – இயல்பான வாழ்க்கை தொடரலாம்
- குறைந்த வலி – சிறந்த சிகிச்சை முறை
- ஸ்டேபிள்ஸ் / தையல் அகற்றம் இல்லாத சிகிச்சை

**எங்களிடம் சிகிச்சை பெறும் நோயாளர்களில் 95% பேர் 10 முதல் 30 மணி நேரத்திற்குள் நலம் பெற்று வீடு திரும்புகின்றனர்.**

மேலும் தகவல்களுக்கு: பார்வதி ஆர்த்தோ மருத்துவமனை பிரைவேட் லிமிடெட்

தொலைபேசி: 044 2238 2248 இணையதளம்: www.parvathyhospital.com/knee-institute

241, GST சாலை (MIT மேம்பாலம் பாலம் அருகில்), குரோம்பேட்டை, சென்னை – 600044

# திருச்சி கார்காத்த வேளாளர் சங்கம்

பதிவு எண் : SRG / Trichy / 132 / 2024

## 23வது ஆண்டு மங்கல சந்திப்பு விழா

வணக்கம். திருச்சி கார்காத்தார் சங்கம் இதுவரை நடத்திய 22 மங்கல சந்திப்புகளின் மூலம் **1000**க்கும் மேற்பட்ட திருமணங்கள் நடந்துள்ளன. எங்களது ராசியான 23வது மங்கல சந்திப்பு இந்த ஆண்டும் சிறப்பாக நடைபெற உள்ளது.

**23வது ஆண்டு மங்கல சந்திப்பின் சிறப்புகள் :**

1. மங்கல சந்திப்பிற்கு வருபவர்களுக்கு காலை தேநீர், மதிய உணவு வழங்கப்படும்.
2. பெற்றோர் தங்களது வரனை அவர்களே அறிமுகம் செய்யலாம், அப்போது வரன்களை நவீன முறையில் LED திரை மூலம் ஒளிப்பரப்பப்படும்.
3. வரன்களை பற்றிய முழு புத்தகமும், வண்ண புத்தகமாக வரனின் படத்துடன் ( Full Book in Multi Color with Profile Photo) அச்சிடப்பட உள்ளது.

நாள் : **15.08.2026 சனிக்கிழமை**

நேரம் : காலை 9.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

இடம் : **ஹோட்டல் அருண், சுமங்கலி மஹால் A/C,**
ஜங்சன் அருகில், திருச்சி – 620 001.

**பதிவு கட்டணம் : ரூ.900/-** (புத்தகம் மற்றும் தபால் செலவு உட்பட).
A/c Name : Trichy Karkatha Velalar Sangam, Indian Bank, Ponnagar Branch, Trichy-1. A/c No. **7947445069**
IFSC : IDIB000P105 என்ற வங்கி கணக்கிற்கு NEFT, Cheque, DD, Bank Transfer அல்லது QR Code மூலம் பணம் அனுப்ப வேண்டுகிறோம்.

**முக்கிய குறிப்புகள் :**

1. பணம் செலுத்திய ரசீது நகலை விண்ணப்பத்துடன் கட்டாயம் இணைத்து அனுப்ப வேண்டும்.
2. கண்டிப்பாக பாஸ்போர்ட் **Size** கலர் போட்டோ ஒன்று இணைக்க வேண்டும்.
3. இணைக்கப்பட்டுள்ள படிவத்தை மட்டும் முறையாக எல்லா காலங்களையும் விடுதல் இன்றி தமிழில் தெளிவாக பூர்த்தி செய்து பதிவு தபால் அல்லது கொரியர் மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
4. அரங்கில் நேரடி பதிவு கிடையாது **(No Spot Registration)**
5. மங்கல சந்திப்பு அன்று வரனின் **Biodata** நகலும், ஜாதக நகலும், **Photos-2** எடுத்து வரவும்.
6. பதிவு செய்தவர்களுக்கு மட்டுமே புத்தகம் வழங்கப்படும்.

**விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி :**

**மணி பிரிண்டர்ஸ்,** C15/1, 5வது மெயின் ரோடு, இராமலிங்கநகர், உறையூர், திருச்சி – 620 003. **Cell : 98424 75125**

**பதிவுக்கு கடைசி நாள் : 31.07.2026**

வாட்ஸ்அப் -ல் அனுப்பப்படும் பயோடேட்டா எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்பட மாட்டாது.

நவிலு. **N.B. பாலசுப்ரமணியன்**
அமைப்பாளர் / திருமண மையம்

**C.சபாபதி**
இணை அமைப்பாளர் **94459 17361**

**G.சிவகுருநாதன்**
தலைவர் / திருச்சி கார்காத்த வேளாளர் சங்கம்
**98427 82837**

**C.சுப்ரமணியன்**
செயலாளர்
**98424 75125**

**N.பாண்டியன்**
பொருளாளர்
**94879 96520**



Kalyan Grand is a 3 Star Business Class Hotel, well equipped with modern amenities that blend comfort with functionally to provide comfortable, restful stays.

KALYAN GRAND
a business hotel

**108 Rooms & Suites | 03 Banquet Halls**

**[For Weddings & Receptions, Birthday Parties and Corporate Events]**

Ph: 044 66289999 | Mob: 7812009999
reservations@kalyangrand.com | www.kalyangrand.com




**Thiruvasantham**
PURE VEG

**A Traditional South Indian Pure Vegetarian Restaurant**

**Authentic Indian Sweets, Savouries and Outdoor Catering**

Ph: 044 22752999 | Mob: 9884092244
hotelthiruvasantham@gmail.com | www.thiruvasantham.com

No. 247, GST Road, Vandalur, Chennai, Tamil Nadu - 600048
(Adjacent to Kilambakkam New Mofussil Bus Terminus)


DAC
DREAM ASCEND CONQUER
TNRERA/35/BLG/0146/2026
DATED 25.04.2026
www.rera.tn.gov.in
LAUNCHING
THE LORD'S
by DAC
3 & 4 BHK BRITISH-STYLED
VILLAS
STARTING FROM
₹1.65Cr.
SIRUSERI, OMR
NEAR SIPCOT IT PARK
LOCATION
Member CREDAI
www.dacdevelopers.com
93003 93003
ADVERTISEMENT

# CHIDAMBARAM SPIRITUAL STAY

**146/18A, KANAGASABAI NAGAR, CHIDAMBARAM**

சிதம்பரம் நடராஜர் திருவருளால் சிதம்பரம் கனகசபை நகரில் ஆன்மீக சுற்றுலா பயணியர் மற்றும் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கு குழுவாக வருபவர்களுக்கும் மேலும் குடும்பத்துடன் வருகைபுரியும் அன்பர்களுக்கும் குளிர்சாதன வசதியுடன் (A/c) தங்குவதற்கு விடுதி அமைந்துள்ளது. திருமண விசேஷங்களுக்கு மணமகன், மணமகள், வீட்டார் உறவினர்கள் ஒரே இடத்தில் 50 நபர் வரை தங்குவதற்கு சிறந்த இடம் **“Chidambaram Spiritual Stay”**

**குறிப்பு : இங்கு தங்குபவர்களுக்கு காலை & இரவு சிற்றுண்டி வழங்கப்படுகிறது.**





**மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண்.**

## 9790292444, 9790215833, 9884004550

**முன்பதிவிற்கான கட்டண விபரங்களுக்கு “Booking.com” மற்றும் Google இணைய தளத்தில் காணலாம்**

**Free Driver Accommodation Available, SPL A/c. Cottages Available**

---

## ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் சேவை மையம்

சித்திரை மாதம் 2025 தொடங்கி உங்களின் ஆதரவுடன் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**சிறப்பம்சங்கள் :**

- தனி நபர் கட்டணம் ரூ. 200/- மட்டும்
- Locker Facility உள்ளது.
- காலை வேளை மட்டும் சிற்றுண்டி வழங்கப்படும்.
- காது குத்துவது / குடும்ப சுப நிகழ்வு கொண்டாடுவோர் / குலதெய்வ வழிபாடு செய்வோர்
- தனி அறைகள் மற்றும் 20 நபர் தங்கும் வசதியுள்ள பொது இடம்.
- குறைந்த கட்டணம், நிறைவான சேவை
- 30 பேர் வரை தங்க சிறந்த இடம்

தொடர்பு 1 : **A. கோவிந்தராஜன்**
சாரதா உணவகம், அமைப்பாளர்
89731 63434

தொடர்பு 2 : **தில்லை ப. செல்வம்**
ஒருங்கிணைப்பாளர்
98403 17346

இதழின் உள்ளே....




சங்க நிகழ்வுகள்....................................................9 – 17

ஊரும் பேரும் – மணிக்கிராமம்.............................24

சங்கப்பலகை ....................................................................29

சிறுவர் பகுதி ..............................................................31–34

மணமகன் / மணமகள் தேவை........................35–39



**கார்காத்தார் ஒப்புரவு**
**கார்காத்தார் சங்கம் (சென்னை)**
64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882
Whatsapp : 82484 49204

**ஆயுள் சந்தா ரூ. 2000/-**
**ஆண்டு சந்தா ரூ. 300/-**

வெளியீட்டாளர் : **முனைவர் கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
**மீ. நடராஜன்**
**மயூர் பிரிண்டர்ஸ்**
எண். 72/88 காமராஜ் காலனி 8வது தெரு,
(பாளையகாரன் தெரு) கோடம்பாக்கம்,
சென்னை – 600 024. போன் : 4204 6533



கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.


## ஏடு இட்டோர் இயல்



கார்காத்தார் ஒப்புரவின் ஒப்பற்ற வாசகர்களுக்கு எங்களது மனமார்ந்த வணக்கங்களும், வாழ்த்துக்களும்!

கடந்த ஆனி மாதத்தில் அனைத்து சிவாலயங்களிலும் ஆனித் திருமஞ்சனம் மிக விமரிசையாக நடைபெற்றது. அதை வீட்டில் அமர்ந்தபடியே YouTubeல் காணமுடிந்தது. அது நேரில் தரிசிக்க இயலாதவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகவே அமைந்ததெனில் அது மிகையன்று.

ஜூலை 17 வெள்ளியன்று பிறக்கும் ஆடி மாதத்தில் தான் தமிழரின் ஆன்மீகமும், பண்பாடும் மிகவும் சிறப்பாக துவங்குகிறது. இம்மாதத்தில் அனைத்து அம்மன் கோவில்களிலும் கூழ் வார்த்தலும், பூக்குழி இறங்குதலும் (தீமிதி விழா), ஆராதனைகளும் விசேஷமாக நடைபெறும். நமது குலத்திற்குச் சிறப்பான ஆடிப் பெருக்கு விழாவும் ஆடி மாதம் 18ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. ஆடித் தள்ளுபடிகளும், சிறப்பு பரிசுகளும் அளித்து வியாபாரிகளும், மக்களும் மகிழும் காலமிது. பருவ மழை துவங்கி, 'ஆடிப்பட்டம் தேடி விதை' எனும் பழமொழிக்கேற்ப, விவசாயிகளின் வசந்தகாலம் ஆரம்பிப்பதும் இம்மாதத்தில் தான்.

சீன அரசு, சீனாவில் தம்பதியரை மூன்றாவது குழந்தையைப் பெற்றுக்கொள்ள ஊக்குவிக்கும் முயற்சியாக, ஊக்கத்தொகை, விரிவுபடுத்தப்பட்ட முன்பள்ளி வசதிகள் மற்றும் 2026ல் பிரசவத்திற்கான மருத்துவமனைச் செலவுகளை முழுமையாக ஏற்பது போன்ற நடவடிக்கைகளை அறிவித்திருந்தாலும், மக்களின் வரவேற்பு மந்தமாகவே உள்ளது. இதற்கான முக்கியத் தடை, கொள்கை சார்ந்ததாக இல்லாமல் பொருளாதாரம் சார்ந்ததாக விளங்கலாம் எனத் தோன்றுகிறது.

இம்மாதத்தில் தமிழ் திரைப்பட உலகின் இலக்கணத்தையே மாற்றியமைத்த இரு ஜாம்பவான்களின் இழப்பைத் திரை உலகம் மிகுந்த துயரத்துடன் எதிர்கொண்டுள்ளது. 'இயக்குநர் இமயம்' என போற்றப்பட்ட இயக்குநர் பாரதிராஜா ஜூன் 10ஆம் தேதி தனது 84ஆம் வயதில் வயது மூப்பு காரணமாக காலமானார். 1977ல் வெளியான '16 வயதினிலே' திரைப்படத்தைத் தொடர்ந்து, பல விருதுகளைப் பெற்ற கிராமியப் படங்கள் மூலம் ஸ்டூடியோ கட்டமைப்பிலிருந்து, இயற்கை கொலுவிருக்கும் கிராமப்புற களங்களுக்குத் திரைப்பட

உருவாக்கத்தை மாற்றி அமைத்தவர். இவரது உடல் அரசு மரியாதையுடன், அவரது பிறந்த ஊரான தேனியில் எரியூட்டப்பட்டது.

அவர் இறந்து 17 தினங்களில், அவரது பிரதம சிஷ்யரும், உணர்வுபூர்வமான வசனங்களையும், திரைக்கதையையும் எழுதி வெற்றி பெற்றவருமான இயக்குநர் பாக்யராஜ் அவர்களும் தனது 73ஆம் வயதில் மாரடைப்பால் திடீரென காலமானது ரசிகர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. அவரது உடலும் அரசு மரியாதையுடன் பெசன்ட்நகர் மின் மயானத்தில் எரியூட்டப்பட்டது. ஏறக்குறைய ஒரே மாதத்தில் நிகழ்ந்த அவர்களின் மறைவு தமிழ் சினிமாவிற்கும், அதன் ரசிகர்களுக்கும் ஒரு மாபெரும் இழப்பு! இருவரின் ஆன்மாக்களும் சாந்தியடைய பிரார்த்திப்போம்.

முதலமைச்சர் விஜய் அவர்களின் ஆட்சி, மக்கள் நலனே பிரதானமாகக் கொண்டு, தமிழகத்தில் குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள் போதைப் பழக்கத்துக்கு அடிமையாகாமல் தடுத்து, தமிழகம் ஒரு அமைதிப் பூங்காவாக திகழ, நன்முறையில் நடக்கவேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

ஜூலை 1ஆம் தேதி முதல் இங்கிலாந்து இந்தியா இடையேயான T20 போட்டி இங்கிலாந்தில் துவங்குகிறது. தமிழக வீரர் வருண் சக்கரவர்த்தி இந்திய கிரிக்கெட் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார் என்பது நமக்கு பெருமையே! இந்திய அணி வெற்றி பெற வாழ்த்துவோம்!

நன்றி! வணக்கம்!

## * முக்கிய அறிவிப்பு *

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள், கட்டுரைகள், ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25–ஆம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் அனுப்பும் போது கட்டாயமாக சங்கத்தின் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

- ❖ செய்திகள், கட்டுரைகள், கட்டாயமாக 1½ பக்கம் முதல் 2 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இதற்கு மேல் வரும் செய்திகள், கட்டுரைகள் மற்றும் கதைகளை குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
- ❖ சங்க நிகழ்வுகள், விழாக்கள் பற்றிய செய்திகளை 3 முதல் 4 பாராக்கள் வரை மட்டுமே எழுதி அனுப்பபட வேண்டும். மேலும் செய்திகள் சுருக்கமாகவும், மிகவும் தெளிவாகவும், முக்கிய கருத்துகளை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்களின் கையொப்பத்துடனும் அனுப்பப்பட வேண்டும்.
- ❖ E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.
- ❖ **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பட வேண்டும்.**

**Online fund Transfer** Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

**இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்**

**தொகை செலுத்தியபின் Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு" Whatsapp No. 8248449204க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள் update செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

- ❖ செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

***அனைத்து தபால்களையும் கார்காத்தார் ஒப்புரவு,***
***எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.***
***என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.***

***- கார்காத்தார் ஒப்புரவு***

# சங்க நிகழ்வுகள்

## சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் சுமார் 150 க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் தங்களது சிறப்பான செயல்பாடுகளை சங்க செய்திகளாக அனுப்பி வருவதை வெளியிட்டு வருகிறோம். அதற்கு உதவும் வகையில், சங்கச் செய்திகளை அனுப்புபவர்கள் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் சுருக்கமாக மூன்று பாராக்களுக்கு மிகாமல் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். அதிகமான பாராக்களுடன் வரும் செய்திகள், சுருக்கி கொடுக்கவோ அல்லது நிராகரிக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

### பெருங்களத்தூர்:

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 20.06.2026 அன்று திரு. R. கார்த்திகேயன் தலைமையில் அனைவரும் இறைவணக்கம் பாட சிவாலி ஹாலில் நடைபெற்றது.

81 அகவை காணும் கார்குல வள்ளல், ஏழைகளின் கல்வி கடவுள் மதிப்பிற்குரிய திரு. S. வெங்கடேசன் பிள்ளை (தலைவர், சென்னை ராதா இன்ஜினியரிங் நிறுவனங்கள்) அவர்களை சங்கத்தின் சார்பாக செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் மகிழ்ந்து வணங்கி அவர்களுக்கு எல்லாம்வல்ல இறைவன், எல்லா நலன்களையும் வளங்களையும் நல்கிட வேண்டினர்.

சங்கத்தின் பொதுக்குழு மற்றும் ஆண்டு விழா சிறப்பாக நடைபெற உதவிய சிவாலி கன்ஸ்டிரக்ஷன்ஸ் நிறுவனர் திரு. S. முத்துகுமார், தன்னார்வலர் பண்ணபட்டு திரு. R. முருகேசன், செயற்குழு உறுப்பினர்கள் திருமதி. R. சுமதி, திரு. A. பட்டாபிராமன் ஆகியோர் பாராட்டப்பட்டு பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்கள்.

36 ஆண்டுகள் ஒரே நிறுவனத்தில் (Postal Circle Co-operative Bank, Chennai) பணிபுரிந்து அதே நிறுவனத்தில் காரியதரிசியாக பதவி உயர்வு பெற்று, பணி நிறைவு பெற்ற நெய்தவாசல் திரு. G. சிவக்குமார், தற்சமயம் வண்டலூரில் வசித்து வரும் அவர்களை பாராட்டி பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்கள். கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு நமது பகுதியில் இந்த ஆண்டு (2026), 10ஆம் வகுப்பு மற்றும் +2 தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவ செல்வங்களான அதிதீ (த/பெ. திரு. ஆனந்த சடேஷ்), நவீன் பாலாஜி, (த/பெ. திரு. தியாகராஜன்), புவனாஸ்ரீ (த/பெ. திரு. சம்பத்குமார்) ஆகியோரை பாராட்டி பொன்னாடை அணிவித்து வாழ்த்துக்கள் தெரிவித்து மகிழ்விக்கப்பட்டனர்.

மார்ச் முதல் இன்றைய தேதி வரையிலான வரவு செலவு படிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. துணைத் தலைவர் திரு. S. சீனிவாசன் அவர்கள் நன்றி நவில அனைவரும் இணைந்து தேசிய கீதம் பாட கூட்டம் இனிதே நிறைவுற்றது.

கோ. இராஜகோபாலன்
செயலாளர்

### செந்துறை:

சங்க கூட்டம் 14.06.2026 அன்று திருஞானசம்பந்தர் மடாலயத்தில் மண்டலத் தலைவர் திரு. R. ரவீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

சங்கப் பொருளாளர் திரு. அ. மணி கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார்.

11.05.2026 அன்று செந்துறை திரு. தி. முருகேசன் ஆசிரியர் (ஓய்வு) – திருமதி. மு. அமுதவள்ளி தம்பதியின் மணிவிழா சிறப்பாக நடைபெற்றது. மணிவிழா தம்பதியர் இருவரும், அவர்தம் குடும்பத்தாரும் சீரும் சிறப்புமாக பல்லாண்டு வாழ்க என செந்துறை கார்காத்தார் சங்கத்தின் சார்பாக வாழ்த்துகிறோம்.

13.05.2026 அன்று திருச்சியில் வசிக்கும் செந்துறை திரு. R. சிவராமகிருஷ்ணன் திருமதி. S. சித்ரா தம்பதியரின் அன்பு மகள் R.S. அருணா பிரியங்கா மற்றும் திருப்பூர் திரு. G. பாஸ்கர் – திருமதி. சாந்தி தம்பதியரின் அன்பு மகன் B. நவீன் பாலாஜி இவர்களின் திருமணம் திருச்சியில் நடைபெற்றது. மணமக்கள் இருவரும் அவர்தம் குடும்பத்தாரும் சீரும் சிறப்புமாக பல்லாண்டு வாழ்க என செந்துறை கார்காத்தார் சங்கத்தின் சார்பில் வாழ்த்துகிறோம்.

29.05.2026 அன்று செந்துறை திரு. தி. சண்முகசுந்தரம் – திருமதி ச. விஜயகல்யாணி

தம்பதியரின் அன்பு மகள் ச. நித்யா மற்றும் பெண்ணாடம் திரு. வெ. காமராஜ் – திருமதி. கா. தங்கமணி தம்பதியரின் அன்பு மகன் கா. தர்மராஜ் இவர்களின் திருமணம் பெண்ணாடத்தில் சிறப்பாக நடைபெற்றது. மணமக்கள் இருவரும், அவர்தம் குடும்பத்தாரும் சீரும் சிறப்புமாக பல்லாண்டு வாழ்க என செந்துறை கார்காத்தார் சங்கம் வாழ்த்துகிறது.

04.06.2026 அன்று செங்காட்டுப்பட்டியில் வசிக்கும் செந்துறை திரு. ஆ. பாலசுப்ரமணியன் – திருமதி. சுமதி தம்பதியரின் அன்பு மகன் பா. அருண் மற்றும் தாடிக்கொம்பு, திண்டுக்கல் திரு. அ. முத்துமணிகண்டன் – திருமதி. முத்துலட்சுமி தம்பதியரின் அன்பு மகள் மு. தாரிணி இவர்களின் திருமணம் துறையூரில் நடைபெற்றது. மணமக்கள் இருவரும், அவர்தம் குடும்பத்தாரும் சீரும் சிறப்புமாக பல்லாண்டு வாழ்க என்று செந்துறை கார்காத்தார் சங்கம் வாழ்த்துகிறது.

இந்த ஆண்டு +2 மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் வெற்றி பெற்ற மாணவ – மாணவியர்களை செந்துறை கார்காத்தார் சங்கம் வாழ்த்துகிறது.

இறுதியாகதுணைத்தலைவர்சு.பன்னீர்செல்வம் நன்றி கூறினார்.

சா. ஜெயராமன், செயலாளர்

## காட்டுமன்னார்கோயில்

சங்க செயற்குழுக் கூட்டம் 05.06.2026 அன்று செயலாளர் திரு. V.R. ஞானம் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. சிதம்பரம் மண்டலத் தலைவர் திரு. R. பத்மநாபன் பிள்ளை தலைமை ஏற்றார். செயலர் திரு. V.R. ஞானம் பிள்ளை அனைவரையும் வரவேற்றார். தலைவர் தமது தலைமை உரையில் ஒவ்வொரு மாதமும் செயற்குழுக் கூட்டம் நடத்த வேண்டும் என வலியுறுத்தினார். பொருளாளர் திரு. V. ராமகிருஷ்ணன் 2025–26 ஆண்டுக்கான வரவு செலவு அறிக்கையை தாக்கல் செய்தார். 20.06.26–ல் 82ஆம் பிறந்தநாள் காணும் கார்குல வள்ளல், சென்னை இராதா இஞ்சினியரிங் ஒர்க்ஸ் பி லிட் நிறுவனர் திரு. S. வெங்கடேசம் பிள்ளை அவர்கட்கு வணக்கங்களும், வாழ்த்துக்களும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆண்டு விழா 02.08.2026 ஞாயிறன்று லலிதா மஹால் திருமண மண்டபத்தில் சிறப்பாக நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது. துணைத்தலைவர் திரு. S. ஜெயசீலன், இளைஞர் அணித்தலைவர் திரு. S. மோகன்குமார் ஆகியோரின் ஆலோசனைக்கிணங்க சிறப்பு விருந்தினர்களை அழைத்து, விழாவை சீரும் சிறப்புமாக நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது. இணைச் செயலர் திரு. K. ராஜு நன்றி கூறினார். செயலர் திரு. V.R. ஞானம் அவர்கள் சிறப்பான சிற்றுண்டி வழங்கினார். சுமார் 8 மணி அளவில் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– V.R. ஞானம், செயலர்

## சீர்காழி:

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 6.06.26 அன்று சங்கக் கட்டிடத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தலைவர் திரு. C. அகோரம் பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார். திரு. S. ரவிச்சந்திரன் பிள்ளை செயலாளர் அவர்கள் வரவேற்புரை கூறினார். பின்னர் தலைவர் அவர்கள் இம்மாதம் 28.06.26 ஞாயிறு அன்று நடைபெறும் மங்கல சந்திப்பு சிறப்பாக நடைபெற அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று கூறினார். இறுதியாக திரு. L. செந்தில்குமார் பிள்ளை, பொருளாளர் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவடைந்தது.

– சே. ரவிச்சந்திரன், செயலாளர்

## இளந்தோப்பு:

சங்க கூட்டம் 14.06.2026 சிவன் கோயில் வளாகத்தில் நடைபெற்றது. தலைமை திரு. S.S.R. பிள்ளை, முன்னிலை R. ஞானசேகரன் பிள்ளை. 04.07.2026 பிள்ளையார் கோயில் வருஷாந்தி (எட்டாம் ஆண்டு) ஹோமம் & அபிஷேகம் & அன்னதானம் என்று சிறப்பாக செய்ய முடிவு செய்யப்பட்டது. செயலாளர் V. குருநாதன் பிள்ளை நன்றியுரை கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

பின்னர்இரங்கல்தீர்மானம்கொண்டுவந்துசங்க உறுப்பினர்கள் தாயார் மற்றும் உறுப்பினர் தந்தையார் மற்றும் ஒரு உறுப்பினர் சகோதரி மூவருக்கும் 2 நிமிடம் மௌன அஞ்சலி தெரிவிக்கப்பட்டது.

திரு. சிவப்பிரகாசம் பிள்ளை துணைவியாரும் திரு. குலோத்துங்கன் பிள்ளை (Red. SBI) தாயாருமான S. சரோஜா அம்மாள்

திரு. முத்தையா பிள்ளை மகனும், திரு. முத்துக்குமரசாமி அவர்களின் தகப்பனார் M. சீனிவாசன் பிள்ளை (Red. TNCSC)

திரு. அருணாசலம் பிள்ளை மகளும், A. மோகன் பிள்ளை, A. குமார் பிள்ளை சகோதரி A. ஜெயந்தி அவர்களுக்கும் இரங்கள் தெரிவிக்கப்பட்டது.

V. குருநாத, செயலாளர்

## மணிக்கிராமம்:

சங்கக் கூட்டம் 28.5.2026 அன்று மணிக்கிராமம் சிவன்கோவிலில் சங்க தலைவர் திரு. G. அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. இறைவணக்கத்திற்கு பிறகு சங்க கௌரவ தலைவர் திரு. M. சிங்காரவேலன் சிவபுராணம் வாசிக்கவும், செயலாளர் திரு. T. கபிலன் அறிக்கையை படிக்கவும், பொருளாளர் திரு. S. பரமநாதன் வரவு செலவு கணக்குகளை படிக்கவும் சங்கம் அதை ஏற்றுக்கொண்டது. சங்க உறுப்பினர்களின் மாணவ–மாணவிகள் கல்லூரி படிப்பை துவங்குவதற்கு நிதி வசதி இல்லாதவர்கள் CREW அறக்கட்டளை மூலம் கல்வி உதவி தொகை பெறலாம் என ஆலோசனை வழங்கப்பட்டது. அனைத்து உறுப்பினர்களும் கார்காத்தார் ஒப்புரவு படிப்பதன் அவசியத்தை எடுத்து கூறி கார்காத்தார் ஒப்புரவு புத்தகம் வாங்க வேண்டி வலியுறுத்தப்பட்டது. இறுதியாக செயலர் நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே முடிந்தது.

– G. அன்பழகன்,
தலைவர்

## செம்பொன்னார்கோவில்:

சங்க கூட்டமைப்பு ஜூன் மாத கூட்டம் **06.06.2026** அன்று திருமுருகன் – ஆனந்தி முருகன் இல்லத்தில், சங்க மூத்த உறுப்பினர் திரு. சபா. வரதராஜன் பிள்ளை தலைமையில் திரு. கமலா வரதராஜன் இறைவணக்கம் பாடிட மே மாத கூட்டறிக்கை மற்றும் வரவு–செலவு கணக்கை சங்க பொருளர் திரு. M.L. செல்வராஜ் பிள்ளை அவர்கள் சமர்ப்பிக்க கூட்டம் இனிதே தொடங்கியது.

திரு. முருகன் – ஆனந்தி முருகன் அவர்களின் மூத்த மகள் விஷ்ணுபிரியா – துபாஷ்ராஜா மணவிழா **04.06.2026** நெல்லை மாநகரத்தில் நடைபெற்றதை முன்னிட்டு மணமக்களை, திரு. கணபதிநடனம் பிள்ளை, திரு. M.C. செல்வராஜ் அவர்கள், திரு. A.M. சேகர் அவர்கள், திருமதி. தாமரைச் செல்வி ஆகியோர் வாழ்த்தினார்கள்.

திரு. M. மதியழகன் – நகைச்சுவை கூறி அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்கள்.

திருமதி. ரெத்தினாவதி அவர்களும் மணமக்களை வாழ்த்தினார்கள். திரு. வாசன் அவர்கள் மணமக்களுக்கு நினைவு பரிசு வழங்கி வாழ்த்தினார்கள்.

கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவரும் இல்லத்தாரால் அளிக்கப்பட்ட இரவு விருந்தில் கலந்துகொண்டார்கள்.

திருமதி கமலா சண்முகம் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

– கி. இராமநாதன்,
தலைவர்

## பரசலூர்:

7.6.2026 அன்று சங்கக் கூட்டம் கண்ணதாசன் தெரு சித்தி விநாயகர் நகர் பரசலூர் திரு. M. சரவணன் பிள்ளை இல்லத்தில் நடைபெற்றது.

செல்வி S. சுவாதிகா இறைவணக்கம் பாட திரு. M. சரவணன் பிள்ளை வரவேற்றார்கள். தலைவர் திரு. க. கோவிந்தராஜன் பிள்ளை தலைமையில் கூட்டம் இனிதே துவங்கியது.

செயலர் S. செந்தில்குமார், பொருளர் V. சிவக்குமார் அறிக்கைகளை வாசிக்க, மு.அ. நிதிய அறிக்கையை தலைவர் அவர்கள் சமர்ப்பித்தார்கள். நிதிய பதிவேடுகள், வரவு செலவு மற்றும் அவசர கால நிதி உறுப்பினர்களின் பார்வைக்கு விடப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. கூட்டத்தில் கலந்துகொண்ட கார்குல சொந்தங்களுக்கு இல்லத்தார் இனிய முகத்துடன் இனிப்பு காரம் தேநீர் வழங்கி இன்புற்றார்கள்.

அதிர்ஷ்ட குலுக்கலில் ஆண்களுக்கான பரிசு தலைவர் திரு. க. கோவிந்தராஜன் அவர்களுக்கும், பெண்களுக்கான பரிசு தலைவி பானுமதி அவர்களுக்கும் வழங்கப்பட்டது.

நிறைவாக திருமதி. S. ரேணுகாதேவி அவர்கள் நன்றியுரை கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

– செந்தில்குமார்,
செயலாளர்

## இலையமதுகூடம்:

சங்க கூட்டமைப்புக் கூட்டம் செயலர் திரு. G. சுப்பிரமணியன் இல்லத்தில் **13.06.2026** அன்று இறைவணக்கத்துடன் தொடங்கியது.

சங்க வரவு செலவு கணக்குகள் பொருளர் திரு. சிவகடாட்சம் பிள்ளை அவர்களால் படிக்கப்பட்டு ஏற்பளிக்கப்பட்டது.

கார்குல கல்வி தந்தை திருமிகு ராதா இஞ்சினியரிங் உரிமையாளர் அவர்களுக்கு எதிர்வரும் **20.6.2026** அன்று **81**வது பிறந்த நாளை முன்னிட்டு வாழ்த்துகள் தெரிவித்தனர்.

நம் கார்குல குழந்தைகள் ரெத்தினவேல் சுப்பிரமணியன் மகள் பத்தாம் வகுப்பில் அபிநிலா 497/500, திரு. பாண்டியன் மேலையூர் இளைஞரணி சங்கத்தலைவர்மகள்சாருமதி495/500மதிப்பெண்கள் பெற்றமைக்கு ராதாநல்லூர் சங்கம் சார்பில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. தலைவர் நன்றி கூறவும், தேநீர் அளித்தமைக்கும் நன்றி தெரிவித்து தேசிய கீதத்துடன் கூட்டம் நிறைவேறியது. நன்றி.

– A. நடனம்,
தலைவர்

## 80 இராதாநல்லூர்:

சங்ககூட்டம்மற்றும்10ம்வகுப்புபொதுத்தேர்வில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டு விழா 14.6.2026 ஞாயிறு தலைவர் இல்லத்தில் செம்பை ஒன்றியம் மேலப் பெரும்பள்ளம் B. லட்சுமணன் அவர்கள் முன்னிலை வகிக்க சங்க கௌரவத் தலைவர் K. இராமசுப்ரமணியன் அவர்கள் தலைமையில் சங்க தலைவர் T. முத்துக்குமரசாமி அவர்கள் வரவேற்க விழா தொடங்கியது. நமது சங்க உறுப்பினர் R. ரெத்தினவேல் சுப்ரமணியன் – சுகன்யா அவர்களின் மகள் R. அபிநிலா (R. Abinila) 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் 497/500 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் 2ஆம் இடத்தையும் மயிலாடுதுறை மாவட்ட அளவில் முதல் இடத்தையும் பெற்றமைக்கும், மேலையூர் கார்காத்தார் சங்க தலைவர் N. பாண்டியன் – சங்கரி ஆகியோரின் மகள் P. சாருமதி 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் 495/500 மதிப்பெண்கள் பெற்று பள்ளியில் 2ம் இடத்தையும் மாவட்ட அளவில் 3ம் இடத்தையும் பெற்றமைக்கும் நமது சங்க செயற்குழு உறுப்பினர் N. நாகராஜன் – அமலா ஆகியோரின் மகன் N. யோகேஷ்வரன் 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் 389/500 மதிப்பெண்கள் பெற்றமைக்கும் பாராட்டி பரிசு அளித்து சால்வை அணிவித்து சிறப்பிக்கப்பட்டது. விழாவிற்கு வருகைபுரிந்த மேலையூர், மணிக்கிராமம், திருவெண்காடு, இலையமதுகூடம் சங்க பொறுப்பாளர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் அனைவரும் இராதாநல்லூர் சங்கம் சார்பாக சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். மேற்படி 3 மாணவ, மாணவியர்கள்ஏற்புரையில்தங்களைபாராட்டி,வாழ்த்தி சிறப்புற பெருமை செய்தமைக்கு நன்றி தெரிவித்தனர். சங்க பொருளாளர் M. சீனிவாசன் நன்றி கூற தேனீர் விருந்துடன் விழா இனிதே முடிவுற்றது.

– T. முத்துக்குமரசாமி,
தலைவர்

## பூம்புகார் - மேலையூர்:

சங்கத்தின் கூட்டம் 7.6.2026 அன்று உறுப்பினர் திரு. பரணிதரன் இல்லத்தில் சிறப்பாக நடைபெற்றது. கூட்டத்திற்கு வருகைபுரிந்த அனைவரையும் பொருளாளர் திரு. R. வெங்கடேசன் அவர்கள் வரவேற்று பேசினார். கூட்டத்தில் சங்கத்தின் வளர்ச்சி பணிகள் மற்றும் எதிர்கால வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் பற்றி விவாதிக்கப்பட்டது. நமது கார்குலத்தை சேர்ந்த பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள் R. நந்தினி, P. சாருமதி, S. தியா, S. நித்தியஸ்ரீ ஆகியோருக்கு சங்கம் சார்பாக வாழ்த்துக்களும், பாராட்டுகளும் தெரிவிக்கப்பட்டது. கூட்டத்தில் கலந்துகொண்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் வெள்ளையனிருப்பு திரு. R. சோமு ஆசிரியர் அவர்கள் தேனீர் விருந்து அளித்தார். இறுதியில் தலைவர் திரு. N. பாண்டியன் அவர்கள் நன்றியுரை கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

– G. விஜயராகவன், செயலாளர்

99946 35306

## நெடுங்காடு:

காரை மாவட்ட சங்கத்தின் 48ஆம் ஆண்டு சித்திரை நிறைமதி நாள் விழா மற்றும் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு 30.4.2026 வெள்ளிக்கிழமை அன்று மாலை 6 மணிக்கு வரிச்சிக்குடி மெயின் ரோடு, திரு. C. பன்னீர்செல்வம் அவர்கள் இல்லத்தில் தலைவர் திரு. மோகன் தாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

செல்வி. B. நிரஞ்சனா மற்றும் B. லோகமித்ரா ஆகியோர் இறைவணக்கம் பாடினர். சங்கத்தின் தலைவர் திரு. K. மோகன்தாஸ் அவர்கள் தலைமையுரை ஆற்றினார்.

முனைவர் திரு. T. பிரபு அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். ஆண்டறிக்கையினை சங்கத்தின் செயலாளர் திரு. எஸ். ரங்கநாதன் வழங்கினார். சங்க நிதி அறிக்கையினை பொருளாளர் திரு. மு. கந்தன் அவர்களும், கார் நிதிய அறிக்கையினை கார் நிதியச் செயலர் திரு. சு. சந்திரசேகரன் அவர்களும், கல்வி நிதி அறிக்கையினை திரு. M. முத்துக்குமரன் அவர்களும் வழங்கினார்கள்.

காரை மாவட்ட கார்காத்த வேளாளர் சங்க உறுப்பினர்களின் முகவரி கையேடு இந்த சித்திரை

நிறைமதி நாள் விழாவில் வெளியிடப்பட்டது. மாநில சங்கத்தின் அமைப்புச் செயலாளர் திரு. சீனி. பழமலைபிள்ளை அவர்கள் முகவரி கையேட்டினை வெளியிட புதுச்சேரி – காரைக்கால் பகுதி மண்டலத் தலைவர் திரு. J. ராஜன்பாபு அவர்கள் கையேட்டினை பெற்றுக்கொண்டார்கள்.

தொடர்ந்து 48 ஆண்டுகளாக காரை மாவட்ட கார்காத்த வேளாளர் சங்கத்தின் பொறுப்பாளர்களை தேர்வு செய்து வரும் செம்பனார்கோயில் திரு. கணபதி நடனம் பிள்ளை அவர்கள் புதிய பொறுப்பாளர்களை தேர்வு செய்து வாழ்த்துரை வழங்கினார்கள்.

விழாவின் முடிவில் புதுச்சேரி – காரைக்கால் பகுதி மண்டலச் செயலாளர் திரு. G. முத்துக்குமரசாமி அவர்கள் நன்றி தெரிவித்தார்கள். விழா நிகழ்வுகளை சங்க முன்னோடி வரிச்சிக்குடி திரு. K.S. கணபதி சுப்ரமணியன் அவர்கள் தொகுத்து வழங்கினார்கள். நிலா விருந்துடன் விழா இனிதே நிறைவுற்றது.

ஸ்ரீ பராபவ ஆண்டின் புதிய பொறுப்பாளர்கள்

தலைவர்: நெடுங்காடு திரு. S. ராஜமாணிக்கம். 94862 78272, துணைத்தலைவர்: நெடுங்காடு முனைவர் திரு. T. பிரபு. 94426 88371, செயலாளர்: வரிச்சிக்குடி திரு. C. நமச்சிவாயம். 98432 74743, துணைச்செயலாளர்: வரிச்சிக்குடி திரு. C. அன்பழகன். 75984 65329, பொருளாளர்: அன்னவாசல் திரு. U. ராகவன். 99656 08360, இளைஞர் அணி செயலாளர்: வரிச்சிக்குடி செல்வன். R. பாலாஜி. 82484 81048, மகளிர் அணி செயலாளர்: நெடுங்காடு செல்வி அ. அல்லி. 94421 61195

- G. முத்துக்குமரசாமி,
98426 33663
மாநில சங்க மண்டலச் செயலாளர்

## நெடுங்காடு:

சங்க கூட்டம் தலைவர் S. இராஜமாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. கடந்த இரண்டு ஆண்டுகள் சங்கத்தின் வளர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் பெரிதும் பாடுபட்ட சங்க நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. மேலும் வருகிற ஆண்டிற்கு புதிதாக பொறுப்பேற்ற சங்க நிர்வாகிகளுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

நமது சங்க உறுப்பினர்களின் கையேடு ஆண்டு விழாவில் வெளியிடப்பட்டது. நமது சங்க உறுப்பினர் பழையூர் பாஸ்கரன் அவர்களின் புதல்வன் B. சேஷாத்திரி Athletics தமிழ்நாடு லெவலில் முதலாவதாக வெற்றி பெற்றதற்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

நமது சங்க கல்வி நிதி அறக்கட்டளைக்கு நமது சங்க முன்னாள் செயலாளர் திரு. G. செல்வக்குமார் ரூ. 5,000/– (ஐந்து ஆயிரம்) நிதி வழங்கியதற்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

நமது சங்க பொன்விழாவை முன்னிட்டு சங்கத்திற்கு ரூ. ஒரு லட்சம் (1,00,000/–) மற்றும் சங்க கட்டிடம் கட்ட இடம் வாங்குவதற்கு ஐம்பதாயிரம் (50,000/–) மொத்தம் 1,50,000 வல்லம் திரு. கணபதி நடனம் அவர்கள் சங்க சித்திரை நிறைமதி நாள் கூட்டத்தில் நமது சங்கத்திற்கு வழங்குவதாக கூறினார்கள். அதற்கு இந்த கூட்டத்தில் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நமது சங்கத்தின் முன்னாள் தலைவர் மறைந்த திரு. முத்துகுமரசாமி அவர்கள் மனைவி திருமதி. சுமதி முத்துகுமரசாமி அவர்கள் நமது சங்க கட்டிட நிதியாக ரூ. 50,000/– (ஐம்பதாயிரம்) வழங்கியதற்கு இந்த கூட்டத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

– C. நமச்சிவாயம்,
செயலாளர்.

## திருவாரூர்:

சங்க கூட்டம் 10.5.26 அன்று சிறப்புடன் நடைபெற்றது. திரு. கண்ணபிரான் பிள்ளை தலைமை வகித்தும் திரு. தண்டபாணி பிள்ளை திருசெங்காட்டாங்குடி அவர்கள் முன்னின்றும் கூட்டத்தை நடத்தி வைத்தார்கள். கலந்துகொண்ட உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து திருமுறை பாராயணம் கடவுள் வாழ்த்தாக பாடினார்கள்.

செயலாளர் சோமசுந்தரம் அவர்கள் சென்ற கூட்ட அறிக்கையையும் திரு. முத்துக்குமார் அவர்கள் நிதிநிலை அறிக்கையும் வாசித்தார்கள். திரு. பாலசுப்ரமணியன் திருமருகல் அவர்கள் ஆன்மீக உரையாக பொன்னனையாள் வரலாற்றை சிறப்புடன் எடுத்து கூறினார்கள். கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் சங்கம் சார்பில் சிற்றுண்டி தேநீர் வழங்கப்பட்டது. துணைத்தலைவர் திரு. ரவி பிள்ளை நன்றி கூறி கூட்டத்தை நிறைவு செய்தார்கள்.

– அ. சோமசுந்தரம்,
திருவாரூர்

## குத்தாலம்:

2026ஆம் ஆண்டுக்கான குடும்ப சங்கம விழா 30.6.2026 அன்று M.R. சாமு இல்லம் இராமச்சந்திரன் நினைவரங்கில்விளையாட்டுபோட்டிகள்நடைபெற்றன. 31.5.2026 காலை 7.00 மணிக்கு குத்தாலம் A.K.P. மகாலில் விழா துவங்கியது. மாநில தலைவர் முனைவர் K.K.R. சுரேஷ் பிள்ளை, மாநில பொதுச்செயலாளர் முனைவர் கைலை. சண்முகம் பிள்ளை, மாநில பொருளாளர் G. ராமநாதன் பிள்ளை, மா.து.தலைவர் S. சண்முகம் பிள்ளை, மண்டல செயலாளர் S. சீனிவாசன் பிள்ளை ஆகியோர் அருகில் உள்ள பிள்ளையார் கோயிலில் இருந்து வாணவேடிக்கையுடனும், பூர்ண கும்ப மரியாதை அளித்தும் அழைத்து வரப்பட்டனர். திருமண மண்டபத்தின் வாயிலில் K.K.R. சுரேஷ் பிள்ளை சங்க கொடியை ஏற்றி வைத்தார்.

அடுத்துமகளிர்அணியினர்குத்துவிளக்குஏற்றி விழாவை தொடங்கி வைத்தனர். கார்குல செல்வங்கள் இறைவணக்கத்துடன் கூட்டம் தொடங்கியது. V. சடையப்பன் B.Lit.,M.A.,B.Ed. வரவேற்புரை நிகழ்த்தினார். P. நாகராஜன் பிள்ளை, Rtn A. நடராஜன், G. கணபதி முன்னிலை வகித்தனர். சங்க தலைவர் R. சுவாமிநாதன் B.A., Ex. M.C. தலைமையேற்று உரை நிகழ்த்தினார். சங்க செயலாளர் M. கண்ணன் அவர்கள் 2025–2026ம் ஆண்டுக்கான அறிக்கையை வாசித்தார். பொருளாளர் Ln. M.R. பலராமன் 2025ம் ஆண்டுக்கான வரவு–செலவை வாசித்தார். திருவிளக்கேற்று திருமண விழா, கையேட்டை Ln. M.R. பலராமன் வெளியிட மாநில தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர், மா.து.தலைவர், மண்டல செயலாளர் பெற்றுக்கொண்டனர்.இதனை தொடர்ந்து மா.து.தலைவர் S. சண்முகம் பிள்ளை, மண்டல செயலாளர் S. சீனிவாசன் பிள்ளை, மாநில பொருளாளர் G. இராமநாதன் பிள்ளை, மாநில பொதுச்செயலாளர் முனைவர் கைலை. சண்முகம் பிள்ளை அவர்களும் வாழ்த்துரை வழங்கி, இறுதியாக மாநில தலைவர் முனைவர் K.K.R. சுரேஷ் (எ) இராஜசுந்தரம் பிள்ளை சிறப்புரை ஆற்றி, AKP மண்டப உரிமையாளர் வெங்கடாசலம் பிள்ளை அவர்களை பாராட்டி நினைவு பரிசு வழங்கப்பட்டது. அடுத்து 10 மற்றும் 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவ செல்வங்களுக்கு நினைவு பரிசை J. வேதநாயகம்பிள்ளை அவர்களும், புத்தகம் G. மணிகண்டன் பேராசிரியர் அவர்களும் வழங்க பொன்னாடை போர்த்தி மாநில பொறுப்பாளர்கள் வழங்கினார்கள். விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற முதல் மற்றும் இரண்டாம் பரிசை மாநில பொறுப்பாளர்கள் பொன்னாடை போர்த்தி வழங்கினார்கள். போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் சிறப்பு பரிசு வழங்கப்பட்டது. இறுதியாக மகளிரணி தலைவி பர்வதம் தமிழ்செல்வன் நன்றியுரை ஆற்றினார். அறுசுவை உணவுடன் விழா இனிதே நடைபெற்றது. திருமண மண்டபம் வழங்கிய உரிமையாளர் வெங்கடாஜலம் பிள்ளை அவர்களுக்கு குத்தாலம் சங்கத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

– R. சுவாமிநாதன்,
தலைவர்

## கும்பகோணம்:

சங்கம் மாதாந்திர கூட்டம் 15.06.2026 அன்று காலை 10 மணி அளவில் கே.பி.ஆர். நகர் பி. ராஜசேகர் அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தலைவர் ஏ.எஸ். பழனி அவர்கள் தலைமை தாங்கினார்கள். துணைத்தலைவர் கே.பி. ராஜசேகர், செயலாளர் எஸ். விஜயகுமார், இணைச்செயலாளர் சாமிநாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இறைவணக்கம் திரு. ஆனந்தன் பாட, பி. ராஜசேகர் அனைவரையும் வரவேற்றார்கள். தலைவரின் தலைமை உரைக்குப்பின் செயலாளர் எஸ். விஜயகுமார் அவர்கள் மாதாந்திர அறிக்கை சமர்ப்பித்தார்கள். பொருளாளர் அறிக்கை தலைவர் A.S. பழனி அவர்களால் வாசிக்கப்பட்டு அனைவராலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆடி மாதம் விளக்கு பூஜை ஏற்பாட்டினை தலைவர் தலைமையில் மகளிர் அணியினர் இணைந்து செய்வது என தீர்மானிக்கப்பட்டது.

2025–26 கல்வி ஆண்டில் 10ஆம் வகுப்பு மற்றும் பிளஸ் டு தேர்வில் தேர்ச்சி பெற்ற கும்பகோணம் மண்டல கார்காத்தார் சமூக நல சங்கம் உறுப்பினர்கள் இல்ல செல்வங்களை வரும் மாதங்களில் கௌரவிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

நமது சங்கத்தின் முன்னாள் துணைத்தலைவர் தெய்வத்திரு கிருஷ்ணமூர்த்தி அவர்களின் மனைவி கமலா கிருஷ்ணமூர்த்தி அவர்களின் மறைவை ஒட்டி மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திரு. ராஜேஸ்வரன் அவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றியுரை கூறினார்கள்.

– எஸ். விஜயகுமார்,
செயலாளர்

## தஞ்சை:

சங்க கூட்டம் 03.06.26 கௌரவ தலைவர் திரு. S. ராஜசேகர் அவர்களது இல்லத்தில் நடைபெற்றது. கௌரவ தலைவர் வரவேற்புரையாற்றினார்கள்.

சங்க தலைவர் திரு. S. ஜெயச்சந்திரன் தலைமையுரையாற்ற, சங்க செயலாளர் திரு. S. மதியழகன் சென்ற கூட்ட நடவடிக்கைகள் வாசித்தார்கள். சங்கப் பொருளாளர் திரு. R. சண்முகம் 31.03.26 முடிய வரவு செலவு அறிக்கை வாசித்தார்கள். அறிக்கை ஏகமனதாக அங்கீகாரம் செய்யப்பட்டது.

சங்க உறுப்பினர் திரு. ஞா. கார்த்திகேயன் – திருமதி. ச. சிவகாமசுந்தரி இவர்களது புதல்வி கா.சி. சோனா – செல்வன் M. கௌதம் சீனிவாஸ் இவர்களது திருமணம் தஞ்சையில் நடைபெற்றது. சங்க நிர்வாகிகள் கலந்துகொண்டு வாழ்த்தினோம்.

சங்க உறுப்பினர்கள் திருவாளர்கள் S. அழகேசன் மற்றும் S. கார்த்திகேயன் இவர்களது தாயார் திருமதி. சகுந்தலா மறைவிற்கு சங்க நிர்வாகிகள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினோம்.

கும்பகோணத்தில் நடைபெற்ற தஞ்சை மண்டல தலைவர் திரு. N. முத்துக்குமாரவேலு – திருமதி M. மீனாட்சி இவர்களது புதல்வன் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் சங்க நிர்வாகிகள் கலந்துகொண்டு வாழ்த்தினோம்.

கூட்டத்திற்கு சிற்றுண்டி வழங்கிய திரு. S. ராஜசேகர் – திருமதி. லதா ராஜசேகர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. திரு. D. சுகுமார் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

S. ஜெயச்சந்திரன்,
தலைவர்

## திருச்சி:

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 15.06.2026 அன்று மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள ஹோட்டல் அருண் மினி ஹாலில் நடைபெற்றது.

திருச்சி கார்காத்தார் மேட்ரிமோனியில் பதிவு செய்துள்ள அனைத்து வரன்களையும், சங்க செயற்குழு உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் (தலா 100 வரன்கள் வீதம்) அலைபேசியில் தொடர்பு கொண்டு மங்கல சந்திப்பு விழாவில் பதிவு செய்வது பற்றி பேசலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

கார்காத்தார் வெல்பர் சர்வீஸ் டிரஸ்ட் மூலமாக ஸ்ரீ மெய்கண்டார் வழிபாட்டு மன்றத்திற்கு (பெண்ணாடம்) புதிய மண்டபம் கட்டுவதற்காக ரூ. 25,000/– நன்கொடையாக வழங்கலாம் என்று ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அனைத்து செயற்குழு உறுப்பினர்களும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்தார்கள்.

C. சுப்ரமணியன்,
செயலாளர்

## திருச்சி:

சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் இன்று 28.6.2026 தில்லைநகர் ஹோட்டல் கௌரிகிருஷ்ணாவில் நடைபெற்றது.

கூட்டத்தில் மேனாள் மாநிலத்தலைவர் திரு. கேப்டன் ஜெகதீசன் பிள்ளை, திரு. டாக்டர் பொன்னையா, நவிலு. திரு. பாலசுப்பிரமணியன் மற்றும் செயற்குழு உறுப்பினர்களும், சங்கத்தின் உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள். சங்கத்தின் செயலாளர் திரு. C. சுப்ரமணியன் வரவேற்புரை நிகழ்த்தி, ஆண்டறிக்கை வாசித்தார். பொருளாளர் திரு. N. பாண்டியன் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்தார். சங்கத்தின் உறுப்பினர்கள் ஒப்புதல் ஏகமனதாக பெறப்பட்டது.

மண்டலசெயலாளர் திரு. V. குணசேகர் அவர்கள் திண்டுக்கல்லில் நடைபெற்ற மாநில செயற்குழு கூட்டத்தில் நடைபெற்ற தீர்மானங்களை கூறினார். திரு. கேப்டன் ஜெகதீசன் பிள்ளை அவர்கள் ஒரு சில அறிவுரைகளை உறுப்பினர்களிடம் தெரிவித்தார். சங்கத்தின் தலைவர் திரு. G. சிவகுருநாதன் அவர்கள் சங்கத்தின் வளர்ச்சி பற்றியும், 15.8.2026 அன்று நடைபெறவுள்ள மங்கல சந்திப்பு, ஆண்டுவிழா சிறப்பாக நடைபெற உள்ளதையும், அனைவரும் ஒத்துழைப்பு தருமாறும் கேட்டு கொண்டார். துணைத்தலைவர் திரு. S. நடராஜன் அவர்கள் வந்திருந்த சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்தார். அனைவருக்கும் மதிய உணவு விருந்தளிக்கப்பட்டது. கூட்டம் இனிதே நிறைவுற்றது.

C. சுப்ரமணியன், செயலாளர்

## ஈரோடு:

21.06.2026 அன்று, ஈரோடு, பூந்துறைரோடு, N.R. மஹாலில், ஈரோடு கார்காத்த வேளாளர் சங்கத்தின் 7வது ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

இறைவணக்கம் செல்வி R. மஹிபாஸ்ரீ அவர்கள் பாடினார். திரு. A. தேவேந்திரன் (தலைவர்) தலைமையில்

திரு. E.S. கேசவானந்தம் (கௌரவத்தலைவர்), திரு. V.M. ஜெயபாலன் (துணைத்தலைவர்), திரு. S. பூபதி (ஈரோடு மண்டல செயலாளர்) ஆகியோர் முன்னிலை வகிக்க, திரு. S. பால்ராஜ் (செயலாளர்) ஆண்டு அறிக்கை வாசிக்க, திரு. R. ராம்குமார் (பொருளாளர்) 2025–26ஆம் ஆண்டுக்கான சங்க வரவு செலவு அறிக்கையை வாசித்தார்.

இந்த விழாவிற்கு திரு. Dr. KKR சுரேஷ் (மாநிலத்தலைவர்), திரு. Dr. கைலை. சண்முகம் பிள்ளை (பொதுச் செயலாளர்), திரு. சீனி. பழமலை பிள்ளை (அமைப்பு செயலாளர்), திரு. S. சண்முகம் பிள்ளை (மண்டலத் தலைவர், மயிலாடுதுறை மண்டலம்) ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். திரு. Dr. விஜேஷ் Ph.D. அவர்கள் கலந்துக்கொண்டு சிறப்புரை வழங்கினார்.

நம்முடைய கார்குலப் பள்ளி குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை, மருத்துவ உதவிதொகை, ஆகியவை வழங்கப்பட்டன. நம்முடைய சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களின் குழந்தைகள், பெண்கள், பெரியவர்களுக்கு வேடிக்கை விநோத விளையாட்டு போட்டிகள் நடத்தி, போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

திரு. E.A. சுதாகரன் (இணைச் செயலாளர்) நன்றியுரை நிகழ்த்திய பிறகு விழா இனிதே நிறைவுற்றது.

பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள்.

பெரும்பான்மையான உறுப்பினர்களால் செயலாளராக திரு. S. பால்ராஜ் அவர்கள், இணைச்செயலாளராக திரு. E.A. சுதாகரன் அவர்கள், ஒருங்கிணைப்பாளராக திரு. S. கனிமொழி அரசு அவர்கள் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு ஒப்புதல் பெறப்பட்டது.

சங்க நிர்வாக குழு உறுப்பினராக திரு. S. மீனாட்சி சுந்தரம், திரு. V.S. ராகவன் மற்றும் திரு. S. வெங்கடேஸ்வரன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு ஒப்புதல் பெறப்பட்டது.

CREW அறக்கட்டளை கார்குல கர்ணன் ஐயா திரு. வெங்கடேசம் பிள்ளை அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

– S. பால்ராஜ்,
செயலாளர்

## DISTRACTION
## கவனச் சிதறல்

முன்பெல்லாம் கவனச் சிதறல் நம்மை சுற்றி இருப்பவர்களினால் அல்லது அவர்கள் செய்யும் செயல்களினால் பெரும்பாலும் ஏற்படக் கூடும். ஆனால், இன்றைக்கு அவை நம் கையிலிருக்கும் அலைபேசியினால் தான் பெரிதும் ஏற்படுகிறது. இதனை Digital Distraction என்பார்கள்.

வீட்டிலோ, அலுவலகத்திலோ நாம் ஏதேனும் ஒரு காரியத்தில் ஈடுபட்டிருக்கும் போது அலைபேசியிலிருந்து வரும் ஒரு Notification ஒலி எளிதில் நம் கவனத்தை ஈர்க்கிறது. ஒரு நிமிடம் அது என்ன என்பதை பார்த்துவிடலாம் என்று நாம் கையில் எடுக்கும் அலைபேசி கீழிறங்க குறைந்தது மூன்று நிமிடங்கள் ஆகிறது.

இப்படிப்பட்ட இடைவேளைக்குப் பின்னர் மீண்டும் நம் பழைய காரியத்திற்கு (வேலைக்கு) வரும் போது நம் மூளை முன்பைப் போல இயங்குவதில்லை. பிடிமானம் கிடைக்க சற்று நேரம் பிடிக்கிறது. இத்தகைய கவனச் சிதறல் நமது செயல்திறனை குறைக்கக் கூடும். இதனால் உற்பத்தி திறன் (Productivity) குறையும். நம் வேலையின் தரத்தில் இதன் விளைவு பிரதிபலிக்கும்.

பெரும்பாலும் ஏதேனும் ஒரு பணியை முடிக்கும் தறுவாயில் தான் – "அதான் கிட்டத்தட்ட முடித்து விட்டோமே, இன்னும் கொஞ்சம் தானே இருக்கிறது" என்ற சிந்தனையில் நாம் கவனத்தை சிதற விடுகிறோம்.

இதை பெரும்பாலானவர்கள் – முக்கியமாக இளைய தலைமுறையினர் உணர்வதில்லை. பணிக்கு நடுவே/படிப்பிற்கு நடுவே அலைபேசி பயன்படுத்துவதை தவிர்த்தால் அவர்களின் செயல்திறனில் மாற்றம் ஏற்படும்.

இதனை உணர்ந்த Apple நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைவருமான STEVE JOBS அவரது பிள்ளைகள் எந்தவித மின்னனு சாதனங்களையும் (Electronic Gadgets) வீட்டில் பயன்படுத்த அனுமதித்ததில்லை. இதனை அவரே ஒரு நேர்காணலில் கூறியுள்ளார். IPhone, IPad போன்ற சாதனங்களை உருவாக்கிய நிறுவனத்தின் தலைவர் வீட்டிலேயே அவற்றை பயன்படுத்த கட்டுப்பாடு இருந்திருக்கிறது. ஆனால் நம் வீட்டில்... ?

இன்றைய காலகட்டத்தில் நேர மேலாண்மையை விட கவன மேலாண்மையே அதிகம் தேவைப்படுகிறது.

"STOP MANAGING YOUR TIME,
START MANAGING YOUR FOCUS".

– இரா. சோமசுந்தரம், சென்னை (ஆரலூர்)
86087 14913

# திருச்சி கார்காத்த வேளாளர் சங்கம்
# மங்கல சந்திப்பு - 2026

## விண்ணப்பப் படிவம்

பெயர் :

பிறந்த தேதி :

நட்சத்திரம் :

ராசி :

கோத்திரம் :

உயரம் :

எடை :

நிறம் :

கல்வித் தகுதி :

பணி விபரம் :

பணிபுரியும் நிறுவனம்:

பணிபுரியும் ஊர் :

வருட வருமானம் :

தந்தையார் பெயர் :

தந்தையார் பணி :

தந்தையார் பூர்வீகம் :

தாயார் பெயர் :

தாயார் பணி :

தாயார் பூர்வீகம் :

சகோதரர்கள் விபரம் :

சகோதரிகள் விபரம் :

தொடர்பு முகவரி :

அலைபேசி எண் :

வாட்ஸ்அப் எண் :

# பெருங்களத்தூர் வட்டார கார்காத்த வேளாளர் சங்கம்

சென்னை - 600 063.



மதிப்பிற்குரிய ஐயா, 81 அகவை காணும் கார்குல வள்ளல், ஏழைகளின் கல்வி கடவுள் மதிப்பிற்குரியதிரு. S. **வெங்கடேசன் பிள்ளை** அவர்கள் (தலைவர், சென்னை ராதா இன்ஜினியரிங் நிறுவனங்கள்) - திருமதி. V. **ஞானாம்பிகை வெங்கடேசன்** அவர்களை சங்கத்தின் சார்பாக செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் மகிழ்ந்து வணங்கி அவர்களுக்கு எல்லாம்வல்ல இறைவன், எல்லா நலன்களையும் வளங்களையும் நல்கிட வேண்டி கேட்டுக் கொண்டோம்.

மேலும் எங்கள் சங்க வளர்ச்சிக்கு பேருதவி செய்து வருவதற்கு இத்தருணத்தில் மிகுந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

தலைவர் **R. கார்த்திகேயன்** செயலாளர் **G. ராஜகோபாலன்** பொருளாளர் **R. சாந்தி**

துணைத்தலைவர்கள்

**S. சீனிவாசன் K. நெடுஞ்செழியன்**

இணைச்செயலாளர்கள்

**V. சேகர் V. பாலசுப்ரமணியன்**

துணை பொருளாளர்

**K. நாகலிங்கம்**

செயற்குழு உறுப்பினர்கள்

**G. முத்துகுமாரசாமி R. சுமதி B. பாபு**

**V. பரணி K. சங்கரி S. ரவீந்திரன்**

**A. பட்டாபிராமன் B. கார்த்திகேயன்**

**திரு. S. வெங்கடேசன் பிள்ளை**

**தன்னம்பிக்கை** தொடர் – 1

அளிப்பவர்: S. நடராஜ்

## உடையாத கோப்பை

'ஒரு கோப்பை காபியின் ஊடாகப் பல விஷயங்கள் நிகழலாம்' என்பதை உணர்த்தும் ஒரு தன்னம்பிக்கை நிகழ்வு. 1996ஆம் வருடம் பெங்களூரின் பிரிகேட் சாலையில் (Brigade Road) ஒரு காபி கடையைத் தொடங்கிய வி.ஜி. சித்தார்த் எனும் இளைஞர், அதனை ஒரு தொடர்ச் சங்கிலியாக, 'கஃபே காபி டே' (Cafe Coffee Day) என்னும் ஒரு மாபெரும் நிறுவனமாக வளர்த்தார். இந்தியாவின் சிறு நகரங்கள், தேசிய நெடுஞ்சாலைகள், மாநகரங்கள் என நம் பாரதம் முழுதும் கிளைகளைப் பரப்பியதுடன், பிராக் (Prague), கோலாலம்பூர் என சுமார் 1750க்கும் மேற்பட்ட கிளைகளை உருவாக்கி, நமது தென்னிந்திய பானத்தை உலகம் முழுதும் கொண்டு சென்றார்.

ஆனால் 2019ஆம் ஆண்டு அந்நிறுவனம் சுமார் 7000 கோடி ரூபாய் நஷ்டமடைந்து, கடனாளியாகியது. வருமான வரிச் சோதனைகள், கடன் கொடுத்தவர்களின் அழுத்தம் மற்றும் பெருகி வரும் நஷ்டம் சித்தார்த்தாவின் மன உறுதியை தவிடுபொடியாக்கியது. அந்நிலையின் தீவிரத்தை அவருக்கு நெருக்கமானவர்கள் மட்டுமே புரிந்துகொள்ள முடிந்தது. அந்த ஆண்டு ஜூலை மாதம், அவர் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டார். தான் செய்த தவறுகளுக்குப் பொறுப்பேற்றுக் கொண்ட அவர், நிலையான ஒரு வணிகத்தை உருவாக்க தவறியதற்காக மன்னிப்பு கோரும் கடிதம் ஒன்றையும் விட்டுச் சென்றார்.

அதன்பின் நடந்தவைகளே இத்தொடரின் முக்கிய பகுதியாகும். அவரின் மனைவி மாளவிகா ஹெக்டே பொறியியல் படித்தவர். அவரிடம் வணிக மேலாண்மைப் பட்டமோ அல்லது நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பில் அதிகாரப்பூர்வமான பதவியில் இருந்த அனுபவமோ இல்லாதவர். நிறுவனத்தின் வளர்ச்சிப் பயணத்தில் அவர் சித்தார்த்துடன் பயணித்தவர். ஆனால் பொறுப்பாளராக அல்ல; ஒரு பார்வையாளராகவே இருந்துள்ளார். சித்தார்த்தாவின் துர்மரணத்திற்குப் பின்னர், அவரது சாம்ராஜ்யமும் அழிந்துவிடும் என்று பலரும் நினைத்தனர். ஆனால் திருமதி. மாளவிகா அந்தப் பொதுவான கணிப்பில் தன்னைத் தொலைத்து விடாமல் பீனிக்ஸ் பறவைபோல் மீண்டும் நிறுவனத்தை உயிர்த்தெழ செய்தார். டிசம்பர் 2020ல் அவர் "காபி டே என்டர்பிரைசஸ்" நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாகப் பொறுப்பேற்றார். அப்போது அவர் இரு குழந்தைகளுக்குத் தாயாகவும், நெருக்கடியில் சிக்குண்டிருந்த ஒரு நிறுவனத்தையும் நிர்வகிக்கும் தைரியமும் கொண்டார். அவரது தாங்கொணாத் துயரத்தினிடையே, நிறுவனத்தின் செயல்பாடுகளையும் கவனித்து, கற்றறிந்தார்.

தன்னிடம் இல்லாத தன்னம்பிக்கையை அவர் வெளிப்படுத்த முயற்சிக்கவில்லை. உணர்வுபூர்வமான அணுகுமுறையால் மட்டுமே கடன் பிரச்னை தீர்ந்துவிடும் என்ற பாவனையும் செய்யவில்லை. அதற்குப் பதிலாக, அவர் மிகவும் உறுதியான மற்றும் நடைமுறைக்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டார். நிறுவனத்தின் வணிகத்திற்கு அவசியமற்ற சொத்துக்களை விற்றார். கடன் கொடுத்தவர்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டு, ஒரு காலத்தில் மாற்றவே முடியாதவை என கருதப்பட்ட கடன் விதிமுறைகளை மறுசீரமைத்தார். நிறுவனத்தின் நிதியை மெல்ல, மெல்லக் கரைத்துக்கொண்டிருந்த வணிக முயற்சிகளை மூடினார். அவர் நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த 25,000 ஊழியர்களுக்கும் நேரடியாக கடிதம் எழுதினார். அக்கடிதத்தில் கடன்சுமை சமாளிக்கக் கூடிய நிலைக்கு குறைக்கப்படுமெனவும், அவர்களின் வேலைக்கும், அவர்கள் பணியாற்றும் அந்நிறுவனத்தின் பிராண்டிற்கும் (Brand) ஒரு சிறந்த காலம் இருப்பதாகவும், அதற்காக நாம் போராடுவோம் எனவும் தெளிவாக குறிப்பிட்டிருந்தார்.

இவை அனைத்தும் ஒரே நாளில் நிகழ்ந்துவிடவில்லை. பல ஆண்டுகளாக, ஒன்றன் பின் ஒன்றாக எடுக்கப்பட்ட சரியான முடிவுகளின் தொகுப்பாகவே சாத்தியமானது. ஒரு காலத்தில் தனது கணவர், சித்தார்த் உருவாக்கிய அனைத்தையும் அழித்துவிடும் என்று அச்சுறுத்திய கடன்சுமை மெல்ல, மெல்ல குறையத் தொடங்கியது. வருவாய் மீண்டும் graph-ல் ஏறத் தொடங்கியது. 'ஒரு கோப்பை காபியின் ஊடாகப் பல விஷயங்கள் நிகழக்கூடும்' எனும் வாசகத்திற்கேற்ப, அந்த காபி நிலையங்கள் தொடர்ந்து இயங்கின.

மாளவிகா ஹெக்டேவின் கதை என்பது வெறும் ஒரு காபி நிறுவனத்தின் வரவு செலவு கணக்கு பற்றியது மட்டுமல்ல; விலகிச் செல்வதற்குப் போதுமான நியாயமான காரணங்கள் இருந்த போதிலும், மனம் தளராமல் அடுத்தடுத்து தேவையான திறமைகளை வளர்த்துக்கொண்டு, ஒரு நபர் முன்னேறுவது என்பதே தன்னம்பிக்கையின் வெற்றியாகும். அவரின் இம்முயற்சி இல்லையெனில், அவரது கணவர் வாழ்நாள் முழுதும் உருவாக்கிய ஒரு நிறுவனம் அவருடன் சேர்ந்து மறைந்திருக்கும். மீண்டெழும் மன உறுதியைச் சோதிக்கும் மிக நெருக்கடியான தருணம் என்பதுடன், உலகமே உங்களை உற்று நோக்கிக் கொண்டிருக்க, அந்நிலையை மாற்றியது மாளவிகாவின் தன்னம்பிக்கையும், துணிச்சலுமே ஆகும்.

## தக்கன பிழைத்து வாழும்

முனைவர் V. கிருஷ்ணகுமாரி

சிவகாமி ஒரு ஓய்வு பெற்ற அரசு அதிகாரி, அவர்கள் தன் மகனுடன் சிறிது நாள் இருக்கலாமென ஆசையாக அமெரிக்கா சென்றார்கள். அதுவும் எப்போது ? டிசம்பர் மாதம், அவ்வளவுதான் எத்தனை உடைகள் போட்டாலும் அவர்களுக்கு குளிர் தாங்கவில்லை. சளியுடன் வெகு சீக்கிரம் சென்னை வந்து சேர்ந்தார்கள். ஆசையுடன் போனார்கள்; அவதியோடு திரும்பி வந்தார்கள். ஏன் இந்நிலை ? அந்த சூழ்நிலை அவர்களுக்கு ஒத்து வரவில்லை. ஆனால் அங்கே நிலையாக இருக்கும் அவள் குடும்பத்தினர் ?

அவர்கள் முன்னேற அந்த சூழ்நிலைக்கு தன்னை தயார்படுத்திக்கொண்டு வாழ ஆரம்பித்து விட்டனர். அதுதான் தக்கன பிழைத்து வாழும். ஒவ்வொரு நிலையிலும் இயற்கை நாம் வாழும் சூழ்நிலையில் நிறைய மாற்றங்களை விதைக்கிறது. அந்தந்த சூழ்நிலைக்கு தக்கவாறு தன்னை மாற்றிக்கொள்ளும் கலை தெரிந்தால் மட்டுமே நம் வாழ்க்கைப் பயணத்தில் பயணிப்பது சுலபமாக இருக்கும். இப்படி நம்மை நாமே மாற்றிக்கொள்வது நம் தன்மானத்திற்கு, வைராக்கியத்துக்கு இழுக்கு என்ற எண்ணம் விடுத்து, நாம் மாறினால், நம் வாழ்வு சுகமாக இருக்கும். ஒரு சிறிய உதாரணம்; வலியதாக இருந்த டைனோசர் இருந்த இடம் தெரியவில்லை. வலுவில்லா கரப்பான்பூச்சி உலகின் எல்லா மூலைகளிலும் இன்றும் வலம் வருகிறது. ஏன் ? வலியன வேறு, தக்கன வேறு. இத்தியரியை (கோட்பாட்டினை) சற்று நம் வாழ்வோடு பொருத்தி பார்ப்போமா ?

முதலில் வியாபாரத்தைக் காண்போம். வியாபாரத்தில், நுகர்வோர் தேவை அறிந்து, அவர்களின் வாங்கும் திறன் அறிந்து, தொழில்நுட்பம் புரிந்துகொண்டு வியாபாரம் செய்யின், லாபம் பெறலாம். அவர் விற்கும் பொருளின் நிலைகளை உடனுக்குடன் தெரிந்து, மக்கள் ரசனைக்கேற்ப பொருளில், வியாபார யுத்தியில் மாற்றம் செய்துகொண்டே வரவேண்டும். இல்லாவிட்டால் தொழிலில் முன்னேறுவது என்பது சிரமம்தான்.

கம்ப்யூட்டர் வந்தது; டைப்ரைட்டரைக் காணவில்லை. வண்ணத் தொலைக்காட்சி வந்தது; நமக்கு ஒரு காலத்தில் பிடித்த கருப்பு வெள்ளை தொலைக்காட்சி காணோம். ஆனால் இன்றளவும் கோடாலி தைலமும், தென்னமரக்குடி எண்ணெயும் சந்தையில் நிலைத்துள்ளது. இப்போது குடும்பத்துக்கு வருவோம். நம் வாழ்வுக்கு ஆணிவேர் அவரவர் குடும்பம்தான். அது கட்டுக்கோப்புடன் நன்றாக இருப்பதுதான் வாழ்வின் அர்த்தம். அங்கேயும் சூழ்நிலை உணர்ந்து, அடங்கிப் போக வேண்டிய இடத்தில் அடங்கி, எகிற வேண்டிய இடத்தில் எகிறி, வெட்ட வேண்டியதை வெட்டி, ஒட்ட வேண்டியதை ஒட்டி, இத்தனையையும் சமயோசிதமாக, கச்சிதமாக செய்தால் வாழ்க்கை எந்தவித கசப்புமின்றி, இனிமையாக இருக்கும். சூழ்நிலைக்குத் தக்க நம்மை நாமே மாற்றி அமைத்துக் கொண்டால்தான் நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் ஆகும்.

அடுத்து மிக முக்கியம் நமது உடல்நலம், இதையும் நாம் சிறந்த முறையில் பேணுவது அவசியம். நல்ல சிந்தனைகள், நல்லவர்கள் நட்பு, குடும்பத்தில் அமைதி, நேர்மறை எண்ணங்கள், இனிய சொற்கள் இவை மனதிற்கும்; சரிவிகித உணவு, தேவையான புரதம், தண்ணீர் வேண்டிய அளவு பருகுதல், தீய பழக்கங்கள் பக்கம் போகாது இருத்தல், நிம்மதியான எட்டு மணி நேர உறக்கம் இவை உடலுக்கும் நன்மை பயக்கும். இங்ஙனம் நம்மை நாமே தகவமைத்து கொள்ளவேண்டும். மாறி வரும் இவ்வுலகில் வாழ, சூழ்நிலைக்கேற்ப தகுதியானது எதுவோ அது மட்டுமே நிலைத்து வாழும். அதற்காக நாம் என்ன பச்சோந்தியா ? என்று எண்ண வேண்டாம். அது தந்திரம், நாம் சொல்வது எதார்த்தம். இயற்கை நமக்கு தந்துள்ள பொக்கிஷங்களை சரியாக, முறையாக பயன்படுத்திகொள்ள வேண்டும். உதாரணமாக புலி, மானை வேட்டையாடும்; அது இயற்கை. ஆனால் மானுக்கு அபாயம் அருகில் உள்ளதென்ற விழிப்புணர்வும், வேகமாக ஓடக்கூடிய திறனும் மானைத் தப்பிக்க வைக்கும். இதுவே தக்கன வாழும் முறை. நாமும் நம்மை வாழும் சூழ்நிலைக்கேற்ப நம்மை தக அமைத்துக் கொண்டு, வாழ்க்கையை சுமுகமாக, சுலபமாக, அன்பாக, அமைதியாக, நிம்மதியாக வாழ முயற்சிப்போம். வாழ்வது ஒருமுறை; முறையாக, மகிழ்ச்சியாக வாழ்வோம்!!

# மனமது செம்மையானால்

– நிர்மலா ராஜவேல்

இக்காலக்கட்டத்தில் அனைவருக்குள்ளும் ஓடிக்கொண்டிருக்க வேண்டிய ஒரு அழகான வாக்கியம், 'மனமது செம்மையானால் மந்திரங்கள் செபிக்க வேண்டாம்' மிகப் பிரபலமான இவ்வாக்கியம் அகத்தியர் அருளிய ஞானப்பாடலின் அற்புதமான வரிகள் ஆகும். நம்முடைய மனமானது தூய்மையானதாகவும், நேர்மையானதாகவும் இருந்தாலே போதும், வேறு எந்த மந்திரங்களையும் நாம் உச்சரிக்கத் தேவையில்லை என்பதை இப்பாடல் மிக அழகாக விளக்குகிறது.

நமது மனம் தூய்மையாகி, செம்மை அடைந்து விட்டால் அதாவது பேராசை, கோபம், பொறாமை, ஆற்றாமை போன்ற தீய குணங்கள் நீங்கி மனம் அமைதியானால், புறத்தே நாம் கூறும் மந்திரங்கள் தேவையற்றதாகி விடும் என உரைத்துள்ளாரெனினும், இவ்வாக்கியத்தைப் படிக்கும் போது என்னுள் எழுந்த எண்ணம் என்னவெனில் மனமதனைத் தூய்மையாக வைத்திருப்பின், எந்த மந்திரங்களையும் உரைக்க வேண்டியதில்லை என்பதைக் காட்டிலும், தினமும் ஏதேனும் ஒரு இறைநாமத்தை அடிக்கடி உச்சரித்துக் கொண்டேயிருப்பின், அது நமக்குள் பழக்கமாகி, வழக்கமாகி நம்மையுமறியாமல் நம் மனதில் அந்நாமம் ஒலித்துக்கொண்டே இருக்கும். அதனால் நம்மால் மனதால் கூட எவருக்கும் எந்த தீங்கும் நினைக்கக் கூட முடியாது. நம்முடைய புற உடலை நீரால் கழுவி தூய்மைப்படுத்துவது போல அகத்தூய்மைக்கு இறைநாமமும், இறைவழிபாடும் மட்டுமே அகத்தை தூய்மைப்படுத்தும்.

நம்முடைய ஆன்றோர்களும் சான்றோர்களும் அறிந்து அனுபவித்துச் சொன்ன ஒவ்வொரு வார்த்தைக்குள்ளும் ஆயிரம் அர்த்தங்கள் பொதிந்து கிடக்கின்றது. நமக்கு தளர்ச்சியான முதுமைக் காலம் என்பது நிச்சயமாக அனுபவித்தே தீரவேண்டிய காலக்கட்டமாகும். அச்சமயத்தில் நம்மைக் காப்பாற்றிக்கொள்ள சிலரைச் சார்ந்து வாழ வேண்டியிருப்பது உலகத்தின் இயல்புதான் எனினும், அந்தக்காலம்வருவதற்குள்நமக்கொருகடமைஉள்ளது எனக் கூறுகிறார் பெரியாழ்வார். அக்கடமையானது, 'பெருமாளே! நான் தகுதியற்றவனாயினும் உன்னையே சரணமென்றடைந்தேன்'. ஏன் தெரியுமா? 'ஆதிமூலமே!' என்று ஓலமிட்ட யானையை உடனே காத்த கதையினை உலகமே அறியும். அதுபோல நானும் முதுமையில் நோய் வந்து தாக்கி, நான் நலிவுறும் காலத்தில் உன்னை நினைக்கவும் சக்தியற்றவனாகி விடுவேன். எனவே, அப்போதைக்குப் பதிலாக இப்போதே சொல்லி வைத்துவிட்டேன். ஸ்ரீரங்கத்தில் கண்வளரும் பெருமாளே! அடியேனுடைய விண்ணப்பத்தை மறவாது, நான் இறக்கும் காலத்தே வந்து எனக்கு அருள்புரிவீராக! என்று பெரியாழ்வார் பாடியுள்ளார். நிலையற்ற செல்வத்தையும், உலக இன்பங்களையும் நம்பி வாழாமல், இறைவனின் திருவடிகளைப் பற்றிக் கொள்ள வேண்டும். இதனையே பட்டினத்தார், "காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே" என்று தெள்ளத்தெளிவாக உரைத்துள்ளார்.

நாம் ஈட்டுகின்ற எந்த பொருளும் நமது மரணத்திற்குப் பிறகு நம்முடன் வருவதில்லை என்பதனை அழகுற உணர்த்துகிறார். அது மட்டுமல்ல மனைவி, மக்கள், சுற்றம், செல்வம் அனைத்தும் இந்த உலக வாழ்வோடு முடிந்துபோகும்; நம் இறப்பிற்குப் பிறகு சுடுகாடு வரை மட்டுமே அவை வரும் என்பதை, தற்காலத்தில் அமரகவி கண்ணதாசன் அவர்கள்

"வீடு வரை உறவு; வீதி வரை மனைவி
காடு வரை பிள்ளை; கடைசி வரை யாரோ"

என அற்புதமாக கூறிச் சென்றுள்ளார். நம்முடைய கர்ம வினைகள் அதாவது பாவ, புண்ணியங்களே நமக்கு துணையாக நம்முடன் வரும். பட்டினத்தார் இவற்றை இன்னமும் அழகுற ஆறு தத்துவங்களாக உபதேசிக்கிறார்.

1. பிறந்தன இறக்கும்; இறந்தன பிறக்கும்.
2. தோன்றின மறையும்; மறைந்தன தோன்றும்.
3. பெருத்தன சிறுக்கும்; சிறுத்தன பெருக்கும்.
4. உணர்ந்தன மறக்கும்; மறந்தன உணரும்.
5. புணர்ந்தன பிரியும்; பிரிந்தன புணரும்.
6. உவப்பன வெறுப்பாகும்; வெறுப்பன உவப்பாகும்.

பிறந்தன இறக்கும்; இறந்தன பிறக்கும் அதாவது உலகம் என்பது நிலையில்லாதது. நாளுக்கு நாள் மாறிக்கொண்டே இருப்பது. அதில் வாழும் உயிர்களும் பரிணாம வளர்ச்சியின் மாற்றத்திற்குட்பட்டு இறந்தும், பிறந்துமாய் உலகில் சமநிலையை உண்டாக்கிக்கொண்டு வரும். எவ்வுயிர்க்கும் நித்தியத்துவம்என்பதுஇல்லை.பிறக்கும்எல்லா உயிரும் ஒருநாள் இறந்தே ஆக வேண்டும். இந்நியதியிலிருந்து எந்த ஒரு உயிரும் தப்ப இயலாது. சரி, பிறந்தன இறந்து விடின், அந்த உயிர் முற்றுப்புள்ளியாகி விட்டதா? என்றால் அதுதான் இல்லை. அப்படிப் பிறந்து இறந்த உயிர் தனது பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப மறுபடியும் ஜனனமெடுக்கும்.

தோன்றின மறையும்; மறைந்தன தோன்றும். அதாவது உலகின் எல்லா நிகழ்ச்சிகளுக்கும்

தோற்றமும், மறைவும் உண்டு. காலையில் தோன்றும் ஆதவன்மாலையில்மறைகிறான்.மறுபடியும்காலையில் உதயமாகிறான். இது சூரியனுக்கு மட்டுமல்ல; எல்லா உலக இயக்கங்களுக்கும் பொருந்தும்.

பெருத்தன சிறுக்கும்; சிறுத்தன பெருக்கும். அதாவது சந்திரோதயம் பூரண நிலவாய் பௌர்ணமி அன்று அடிவானில் தோன்றி, மறுநாள் முதல் சிறுத்துக்கொண்டே வந்து அமாவாசை அன்று மொத்தமாக தோன்றவே தோன்றாது. அடுத்த நாளிலிருந்து பிறையாகத் தோன்றி, வளர்ந்து திரும்பவும் பௌர்ணமியன்று பூரண நிலவாக காட்சியளிக்கும். நிலவு தேய்வதும், வளர்வதும் இயற்கை நிகழ்வே! உணர்ந்தன மறக்கும்; மறந்தன உணரும். அதாவது மனிதனுக்கு மட்டும் மறந்துவிடும் ஆற்றல் இல்லையெனின், அவன் இந்நேரம் பைத்தியம் பிடித்து அலைந்து கொண்டிருப்பான். சிறு வயது சம்பவங்கள் சிறுக, சிறுக மறந்துகொண்டே வர சில முக்கிய சம்பவங்கள் மட்டுமே கல்லின் மேல் செதுக்கிய எழுத்துக்களாக நிலைத்து நிற்கின்றன. உணர்ந்தவை எல்லாம் வயதாகும் போது மறந்திருந்தாலும், அவ்வப்போது நினைவுக்கு வருவதும் உண்டு. அதுவும் கடைசிக் காலத்தில் நிகழ்கால சம்பவங்கள் மறந்து கடந்தகால நினைவுகள் மட்டுமே நமக்குள் இருப்பதும் உண்டு. புணர்ந்தன பிரியும்; பிரிந்தன புணரும் அதாவது ஒரு ஆணும், பெண்ணும் புணர்ந்து ஒரு குழந்தை உருவாகிறது. அவர்கள் தந்தை, தாயாகிறார்கள். அவர்களிடமிருந்து ஒரு கட்டத்தில் பிரிந்து சென்ற அக்குழந்தையும் ஒரு வயதில் அப்பாவாகவோ, அம்மாவாகவோ ஆகிறது. இது ஒரு வட்டச் சுழற்சியே! உவப்பன வெறுப்பாகும்; வெறுப்பன உவப்பாகும். அதாவது விரும்பிப் போனால் விலகிப் போகும்; விலகிப் போனால் விரும்பி வரும் என்ற முதுமொழி இப்படி உருமாறி நிற்கின்றது.

பட்டினத்தார் இந்த ஆறு உபதேச மொழிகளையும் கோயில் திருஅகவலில் மனதிற்கு உபதேசமாகச் சொல்கிறார். இது மட்டுமல்ல; ஒரு தனிமனிதனின் ஒழுக்கம், சிந்தனை செம்மையாகும் பொழுது, அது அவனது குடும்பத்தை மட்டுமன்றி, சமுதாயத்தையும் உயர்த்துகிறது. நேர்மையான சிந்தனை கொண்ட தலைவர்கள், குடி மக்கள் நிறைந்த சமுதாயம் எவ்வித குற்றங்களும் இன்றி அமைதியாக, வாழ்வதற்கு இனிய உலகமாக இருக்கும் என்பதில் எந்த ஐயமுமில்லை. இன்றைய சூழலில் உடற்பிணியால் உழல்வோரை விடவும் மனப்பிணியால் வாடுவோரே அதிகம். இதனைத் தடுக்க, நமது முன்னோர்கள் உபதேசித்த மந்திரச் சொற்களைக் கடைப்பிடித்துச் செம்மைபட செகத்தினில் வாழ்ந்திடுவோம். மனமது செம்மையானால் மந்திரங்கள் செபிக்க வேண்டாம் என்பது சரிதானே!


LIC HFL

LIC HOUSING FINANCE LTD

**வீடு கட்டுவோர் மற்றும் வீடு வாங்குவோர் கவனத்திற்கு**

சென்னை அனைத்து பகுதி, திருவள்ளுவர் மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் தமிழகம் முழுவதும் உள்ள கார்குல மக்கள், தாங்கள் இருக்கும் பகுதி அருகில் உள்ள LIC HFL வட்டார அலுவலகம் மூலம் அனைத்து விதமான வீட்டுக்கடன், கல்வி மற்றும் திருமணத்திற்கு வீட்டு அடமான கடன், வர்த்தக கடன் எளிய முறையில் துரிதமாக எந்தவிதமான சேவை கட்டணம் இல்லாமல் பெற அணுகவும்.



**30 ஆண்டுகள் அனுபவம் பெற்ற**

**V. அமிர்தகடேசன்**

(Authorised Top selling partner)

செல்: 9443220893

உங்கள் இராசியான மயிலாடுதுறையில்
நீங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும்

# கார்குல மங்கல சந்திப்பு

மயிலாடுதுறை நகர கார்காத்த வேளாளர் சங்கத்தின் சார்பில் நடத்தப்படும் மங்கல சந்திப்பு நிகழ்வு **மயிலாடுதுறை , மகாதானத்தெரு, ஸ்ரீ விமலாம்பிகை திருமண மஹாலில் 09.08.2026 ஞாயிற்றுக்கிழமை** காலை 9.00 மணியளவில் தொடங்கி நடைபெற உள்ளது.

கார்குல சொந்தங்கள் இந்நிகழ்வினில் கலந்து கொண்டு பயன்பெறவேண்டுகிறோம். பதிவுக்கட்டணம் ரூ.600/-ஐ பதிவு விவரங்களுடன் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ **01.8.2026** க்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிட அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பதிவுக்கட்டணத்தை கீழ்க்கண்ட முகவரிக்கு **M.O** மூலமாகவும் **G-pay ( 9443507301-T.Panneerselvam )** மூலமாகவும், அனுப்பிவைக்கலாம்.

---

தபால் / **M.O** அனுப்பவேண்டிய முகவரி
**T. பன்னீர்செல்வம்** (கம்பன் பிரிண்டர்ஸ்)
(மங்கல சந்திப்பு ஒருங்கிணைப்பாளர்)
32, பூக்கடைத்தெரு, மயிலாடுதுறை- 609 001.
Whatsapp No. 9443507301, Cell No. 6380141270

---

தபாலில் புத்தகம் பெற விரும்புவோர் ரூ.650/-ம் பதிவு இல்லாமல் தனிப்பிரதி வேண்டுவோர் ரூ.700/-ம் செலுத்த வேண்டும்.

குறிப்பு : விவரங்களை **kambankala@gmail.com** என்ற மின்னஞ்சலிலும் அனுப்பலாம். விண்ணப்பப் படிவத்தைத் தனித்தனி எழுத்துகளில் நிரப்ப வேண்டும். இணையதள முகவரி மற்றும் தொலைபேசி எண்ணைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.

**T. ரவிகுமார்** தலைவர்,(பொறுப்பு)
**S. தில்லைநாயகம்** செயலாளர், **N. முத்துக்குமரசாமி** பொருளாளர்,
மற்றும் நகர சங்கப் பொறுப்பாளர்கள்.

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | |
| பிறந்த நாள் | : | |
| நட்சத்திரம் | : | |
| உயரம் | : | |
| நிறம் | : | |
| கோத்திரம் | : | |
| படிப்பு | : | |
| பணி விபரம் | : | |
| | | |
| | | |
| ஊதியம் | : | |
| தந்தை பெயர் | : | |
| பணி விபரம் | : | |
| பூர்வீகம் | : | |
| தாயார் பெயர் | : | |
| பணி விபரம் | : | |
| பூர்வீகம் | : | |
| தொடர்பு முகவரி | : | |
| | | |
| | | |
| | | |
| உடன் பிறப்பு | : | ஆண் ☐ பெண் ☐ |
| திருமணம்ஆனவர் | : | ஆண் ☐ பெண் ☐ |
| திருமணம்ஆகாதவர் | : | ஆண் ☐ பெண் ☐ |
| விருப்பம் | : | |
| இதர தகவல் | | |
| | | |
| தொலைபேசி | : | |
| செல் | : | |
| **E.mail** | : | |

## ஊரும் பேறும் - மணிக்கிராமம்

ஜூன் 2026 ஒப்புரவு மாத இதழில், கார்குல மக்கள் வாழும் ''நமது கிராமங்கள் குறித்து இளைய தலைமுறைக்கு தெரிவிக்க வேண்டும்'' என்ற நல்ல எண்ணத்தில், நம் முன்னோர்கள் வாழ்ந்த கிராமங்கள் குறித்த கட்டுரைகள் கோரப்பட்டிருந்தன. கார்குல மக்களில் குழவிட/குழவிடையான் கோத்திர குடும்பத்தினரின் குலதெய்வம் பொறையான் எனப்படும் பிறைவீரன். கடந்த 2025 ஜனவரி மாதத்தில் ''அருள்மிகு பிறைவீரன் ஆலய வரலாறு'' என்ற கையடக்க நூல் ஒன்றை எழுதி வெளியிடும் பெரும்பேறு எனக்குக் கிடைத்தது. அந்நூலின் உள்ளடக்கத்தில் 2ஆவது தலைப்பு ''மணிக்கிராமம் – ஊரும் பேறும்'' என்பதாகும். அதனை மட்டும் சுருக்கமாக இவண் குறிப்பிட்டுள்ளேன்.

**ஊர் அமைவிடம்:**

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், திருவெண்காடு மற்றும் பூம்புகாருக்கு இடைப்பட்ட கிராமம் மணிக்கிராமம். இச்சிற்றூர், சீர்காழியிலிருந்து 17 கிலோ மீட்டர் தெற்கில், மயிலாடுதுறையிலிருந்து 20 கிலோமீட்டர் கிழக்கில், பூம்புகார், மேலையூரிலிருந்து 2 கிலோ மீட்டர் வடக்கில் பேருந்து வழித்தடத்தில் உள்ளது. சீர்காழி வட்டாரத்திலேயே கார்குல மக்கள் அதிகமாக குடியிருந்த ஊர் மணிக்கிராமம். இவ்வூரைச் சுற்றி மேலையூர் ராதாநல்லூர், இளையமதுகூடம், திருவெண்காடு, பெருந்தோட்டம், நாங்கூர், தலைச்சங்காடு, நெய்தவாசல் போன்ற கிராமங்கள் இருப்பினும், அவற்றுள் கார்குல மக்களின் குடியிருப்புகள் குறைவு. மணிக்கிராமத்தில் மட்டுமே தெற்குத் தெரு, கீழத்தெரு, மேலத்தெரு ஆகியவற்றில் 1975ல் சுமார் 65 வீடுகள் இருந்தன. அவை அனைத்தும் ஓட்டு வில்லை வீடுகள். அவற்றுள் சில வீடுகளில் 2க்கு மேற்பட்ட குடும்பங்கள் இருந்ததால், 1980ஆம் ஆண்டில், இவ்வூரில் சுமார் 80க்கு மேற்பட்ட குடும்பங்கள் இருந்தன. கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த ராதாநல்லூர் புலவர் எனும் ரெங்கநாதம் பிள்ளை ''படை பெருத்த மணிக்கிராமம்'' என்ற அடைமொழியுடன் இவ்வூரைக் குறிப்பிட்டுள்ளார். அவ்வீடுகளில் பல வீடுகள் சிதிலமடைந்து, தற்போது 30க்கு மேற்பட்ட கான்கிரீட் வீடுகளாக மாறிவிட்டன. எஞ்சியவை பழமையின் அடையாளச் சின்னங்களாக உள்ளன.

**ஊரின் சிறப்பு:**

முத்து, பவளம், வைரம், வைடூரியம், கோமேதகம், நீலம், நித்திலம், மரகதம், மாணிக்கம் என நவரத்தினங்கள் ஒன்பது. இவற்றுள் மாணிக்கம் போல் புகழ்பெற்றுத் திகழும் ஊர் மணிக்கிராமம், பூம்புகாரில் பிறந்த கற்புக்கரசி கண்ணகி, தன் காற்சிலம்பிலிருந்த மாணிக்கப் பரல்களை உடைத்தெறிந்து, பாண்டிய மன்னனிடம் நீதியை நிலைநாட்டினாள். அம்மாதரசிக்கு மாணிக்கப்பரல்களை வழங்கிய ஊர் மணிக்கிராமம். அணி வணிகர் பலர் இவ்வூரில் வாழ்ந்ததன் அடையாளமாக, இவ்வூரின் கீழ்ப்பகுதியிலுள்ள ''கிளார் வெளியில்'' சிதைந்த கற்குவியல்கள் நிறைந்துள்ளதைக் காணலாம். கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னர் வரை, கொல்லர், தச்சர், பத்தர், பூசாரி, குயவர், முடிதிருத்துவோர், உழவர்களுக்கென தனித்தனி குடியிருப்புகள் இருந்தன.

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் நடத்திய அறவழிப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்றவர் தில்லையாடி வள்ளியம்மை. 1956ஆம் ஆண்டு, பாரதப் பிரதமராக இருந்த பண்டித நேரு அவர்கள், தில்லையாடி கிராமத்தில் அமைக்கப்பட்ட சிலை திறப்பு விழாவில் கலந்துகொண்டு, அன்று மாலை செம்பொனார்கோயில் மேலமுக்கூட்டில், தமிழக முதல்வர் காமராஜர் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார். அப்போது, ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில், நீர்வளம், நிலவளம், கட்டமைப்பு, சமய ஒற்றுமைக்கு சிறப்பாக அமைந்த கிராமத்திற்குரிய நற்சான்றிதழ் நேருவின் கரங்களால் மணிக்கிராமத்திற்கு வழங்கப்பட்டது. அந்த நற்சான்றிதழும், புகைப்படமும், மறைந்த மணியக்காரர் குஞ்சிதபாதம் பிள்ளை வீட்டில் நெடுநாட்கள் இருந்தன. எனது பள்ளிப் பருவத்தில், சாதிச்சான்று மற்றும் வருவாய்ச் சான்றுகள் பெற அவரது இல்லத்திற்கு செல்லும் போதெல்லாம் அதனைக் கண்டு மகிழ்ந்துள்ளேன்.

**சமய ஒற்றுமை:**

இவ்வூரின் வடக்கே முஸ்லிம்களுக்கான தனித்தெரு ஒன்று உள்ளது. அத்தெருவின் மேற்கே, தொழுகைக்கான பள்ளிவாசல் உள்ளது. ஊரின் தெற்கே TELC தொடக்கப்பள்ளியுடன் கூடிய கிறிஸ்துவ தேவாலயம் உள்ளது. கிழக்குப் பகுதியில் இந்துக்களுக்கான திருமேனி அழகர் சிவன்கோயில் உள்ளது. கார்குல மக்களின் கட்டுப்பாட்டில் இருந்த இக்கோயில், தற்போது இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகையில் உள்ளது. கார்காத்தார் சங்க மாதாந்திர கூட்டங்கள் இவ்வாலயத்தில்தான் நடைபெறுகிறது. ஊரின் மையப் பகுதியில் மாரியம்மன் மற்றும் விநாயகர் ஆலயங்கள் உள்ளன. மற்றும் பிறைவீரன் ஆலயம், உத்ராபதியார் கோயில், ஐயனார் கோயில் ஆகியன உள்ளன. பல மதத்தினர் வாழும் இவ்வூரில் சமயப் பூசல்கள் எழுந்ததில்லை. அவரவர் வழிபாட்டுத் தலங்களை மதித்து வாழ்ந்து வருகின்றனர்.

வைகாசி மாதத்தில் ஒவ்வொரு ஆண்டும் 10 நாட்கள் நடைபெறும் மாரியம்மன் திருவிழா இவ்வூரின் சிறப்பு நிகழ்ச்சி. காப்பு கட்டும் முதல் நாள் முதல், தீமிதித் திருநாள் வரை, இவ்வூரில் உள்ள 10 கோத்திரதாரர்களின் குடும்பத்தினர், ஒரு

நாளைக்கு ஒரு கோத்திரம் என குலுக்கல் முறையில் தேர்வு செய்து விழா எடுக்கின்றனர். 10 நாட்களும் சிறப்பு அலங்காரத்தில் அம்மன், 3 தெருக்களுக்கும் வீதி உலா வருவது கண்கொள்ளாக் காட்சியாகும். வாழ்வாதாரத்திற்காக வெளியூர்களுக்கு குடிபெயர்ந்தவர்களும், அவ்விழா நாட்களின் குடும்பத்தாரோடு வருகை புரிந்து வழிபாடு நடத்துகின்றனர்.

**பிறைவீரன் ஆலயம்:**

இவ்வூரின் மேலத் தெருவில் அமைந்துள்ளது இவ்வாலயம். கார்காத்தார் இனமக்களில் குழவிட எனும் குழவிடையான் கோத்திரதாரர்களின் குலதெய்வம் பொறையான் எனும் பிறைவீரனாகும். தலை மட்டுமே உள்ள, மிகப் பெரிய இச்சிலை, கடந்த நூற்றாண்டில், மேலத்தெரு இராமநாதம் பிள்ளை என்பவரின் நிலத்தில், நில சீர்திருத்தம் செய்யும்போது, பூமிக்கடியிலிருந்து கண்டறியப்பட்டது. 'அசரீரியாக' தன்னை பிறைவீரன் என வெளிப்படுத்தியதையும், அச்சிலை குழவிட கோத்திரதாரர்களின் குலதெய்வம் என அறிந்து அப்போதைய கர்ணம் பிள்ளையான ஆறுமுகம் பிள்ளையிடம் ஒப்படைத்துள்ளார். ஆறுமுகம் பிள்ளையின் குலதெய்வம் பொறையான். எனவே இராமநாதம் பிள்ளையிடமிருந்து, தானமாகப் பெற்ற அவ்விடத்திலேயே, குலதெய்வக்காரர்கள் துணையுடன், சிறு கோயிலாகக் கட்டி பிறைவீரனை பிரதிஷ்டை செய்துள்ளனர். அடுத்தடுத்த தலைமுறையினரால், அவ்வாலயம் இரண்டுமுறை குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. தற்போது, ஒவ்வொரு ஆண்டும் மே 15 அன்று, பிறைவீரனுக்கு சிறப்பு பூசைகள் செய்து நூற்றுக்கணக்கானவர்களுக்கு அன்னதானம் வழங்கி வழிபடுகின்றனர். அந்நாளில் வெளியூர்களிலிருந்தும் குலதெய்வக்காரர்கள் வருகை புரிந்து விழா எடுப்பது இவ்வூரின் சிறப்புகளில் ஒன்றாகும்.

**நீர்வளமும் நிலவளமும்:**

காவிரி ஆற்றின் கடையணை மேலையூரில் உள்ளது. அவ்வணையில் தேக்கப்படும் தண்ணீர், 4 வாய்க்கால்கள் வழியே இவ்வூர் நீர்ப்பாசனம் பெறுகிறது. மேலையூர் வாய்க்கால் இவ்வூரில் தெற்கெல்லையாகவும், நெய்தவாசல் வாய்க்கால் வடக்கு எல்லையாகவும் உள்ளது. கன்னி வாய்க்கால் மற்றும் பெரிய வாய்க்கால் ஆகியன, இவ்வூரின் நடுவே பாசன வசதி அளிக்கின்றன. இவ்வூரிலுள்ள 8 பெரிய குளங்களும், 25க்கு மேற்பட்ட குட்டைகளும் உள்ளன. ஆடி மாதம், வாய்க்கால்களில் தண்ணீர் வரத்தொடங்கும். முதலில் தலையாரிகள் எனும் காவலர்கள் மூலம், நீர் நிலைகளை நிரப்பி விடுவார்கள். பின்னரே, பாசன வயல்களுக்குப் பயன்படுத்துவார்கள். ஆடி மாதம் தொடங்கி பங்குனி மாதம் வரை தண்ணீர், தேக்கப்படுவதால், 20 அடி ஆழம் முதல் நிலத்தடி நீர் கிடைக்கிறது. 100க்கு மேற்பட்ட மின்மோட்டார்கள் உள்ளன. அவற்றின் மூலம் நெல், கரும்பு, வாழை, மா, தென்னை, புளி, பனை, எள், கடலை ஆகிய உணவு தானியங்கள் விளைவிக்கப்படுகின்றன. ஆடு மாடுகள், மனிதர்கள் வரை குடிப்பதற்கும் குளிப்பதற்கும் நீர்நிலைகள் பயன்படுகின்றன. ஆடிப்பெருக்கு இவ்வூரின் சிறப்பு நிகழ்ச்சி, தெருவுக்குத் தெரு, சப்பரங்கள் எனும் சிறுதேர்களைத் தயாரித்து அந்நாளில் காவிரியில் கரைப்பதும், நீர் நிலைகளில் நீந்தி, விளையாடுவதும் வழக்கம். பெண்கள் காவிரி அம்மனுக்கு பொங்கலிட்டு படைப்பதும், மங்கலகரமான மஞ்சள் நூலை தாங்கள் அணிந்து கொள்வதும், பிறருக்கு அணிவித்து மகிழ்வதும் வழக்கமாக இருந்தன.

மாட்டுப் பொங்கல் மறப்பதற்கு அரியது. இவ்வூரில் மாட்டுப் பொங்கலன்று, பசு, கன்றுகள் காளைகளை, இடையர் எனும் மாடு பாதுகாவலர்கள். அனைத்து வீடுகளிலிருந்தும் ஓட்டிச் சென்று, அவற்றைக் குளிப்பாட்டி, மாலை அணிவித்து, அன்று மாலை தாரை, தப்பட்டைகள் முழங்க வீடுகளுக்கு அழைத்து வரும் நிகழ்ச்சி நீண்ட காலம் தொடர்ந்தது. தற்போது காலச் சூழலால் அருகிவிட்டது.

**நிறைவாக:**

இவ்வூரில் பிறந்து, கல்வி பயின்று, வெளியூர்களிலும் வெளிநாடுகளிலும் பணிபுரியும் பொறியாளர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், பல்துறைப் பணியாளர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள் கணக்கிலடங்கா. சென்னை, பெங்களூர், மைசூர், டெல்லி, மும்பை போன்ற பெரு நகரங்களிலும், சிங்கப்பூர், துபாய், அரேபியா, லண்டன், பாரிஸ், கனடா, அமெரிக்கா போன்ற வெளிநாடுகளிலும், பணி நிமித்தம் சென்று பின்னர் அவ்விடங்களில் குடியுரிமைப் பெற்று, குடும்பத்துடன் நிலையாக தங்கியவர்கள் நூற்றுக்கணக்கில் உள்ளனர். அவர்கள் இவ்வூரின் சொந்த, பந்தங்களைத் தொடர்பு கொண்டு விசேட நாட்களில் வந்து செல்கின்றனர். இளமைக் காலத்தில் வைக்கோல் திரிகளை மரக்கிளைகளில் கட்டி ஊஞ்சலாடுதல், குளங்களில் டைவ் அடித்தல், புத்தக மூட்டைகளை சுமந்து செல்லுதல், மார்கழி மாத பஜனைகளில் கலந்துகொண்டு ஊர் சுற்றி வந்து சுண்டல் உண்ணுதல் போன்ற இனிய நிகழ்ச்சிகளை எழுத இடமில்லை. எனவே ஒரு சில இளமைக்கால இனிய நிகழ்ச்சிகளுடன் முடித்துக் கொள்ளும் இக்கட்டுரையாளனின் வயது 84. வாழ்க வளமுடன்!

– ச. இராமலிங்கம்,

சீர்காழி

94431 87719

## சைக்கிள் ஓட்டுவதால் ஏற்படும் நன்மைகள்

சைக்கிள் ஓட்டுவது உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கான சிறந்த வழியாகும். 1817ஆம் ஆண்டு மிதிவண்டியைக் கண்டுபிடித்தவர், ஜெர்மனியைச் சேர்ந்த பரோன் கார்ல் வான் டிரைஸ் (Baron Karl Von Drais) என்பவர் ஆவார். 1860ல் ஃபிரான்ஸைச் சேர்ந்த பியர் மைக்காக்ஸ் (Pierre Michaux) மற்றும் பியர்லால்மெண்ட் (Pierre Lallement) சிறிது மாற்றங்களைக் கொண்டுவர, 1885ல் ஜான் கெம்ப் ஸ்டார்லி (John Kemp Starley) என்பவர் தற்போது உபயோகத்திலிருக்கும் மிதிவண்டியை வடிவமைத்தார். அதன் பிறகு குறிப்பிடும்படி பெரும் மாற்றங்கள் ஏதும் நிகழவில்லை. முதன்முதலாக ஐரோப்பாவில் 19ஆம் நூற்றாண்டில் மிதிவண்டிகள் அறிமுகமாகின. குறிப்பாக சீனாவிலும், நெதர்லாந்திலும் போக்குவரத்திற்கான முதன்மையான வண்டியாக மிதிவண்டி திகழ்கிறது. 1910ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டிலுள்ள ஆஸ்டன் நகரில் ஹெர்குலீஸ் என்ற மிதிவண்டி நிறுவனம் தொடங்கப்பட்டு உலகம் முழுதும் பரவியது.

சில வருடங்களுக்கு முன்புவரை நம் வாழ்க்கையில் இரண்டறக் கலந்திருந்த ஒரு பொருள் சைக்கிள். கிராமம், நகரம் வேறுபாடுகளின்றி, எல்லோரும் தினமும் சைக்கிளில்தான் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். சைக்கிள் பயணம் செலவில்லாதது என்பது ஒருபுறம் இருக்க, மிகச்சிறந்த உடற்பயிற்சியாகவும் அது இருந்தது. வயது முதிர்ந்த மனிதர்கள்கூட நெடுந்தூரம் சைக்கிளை மிதித்துக்கொண்டு சென்று வருவார்கள். பைக், காரெல்லாம் வரத் தொடங்கியபிறகு சைக்கிள் உபயோகமற்றதாக மாறிவிட்டது. கிராமங்களில் கூட, சைக்கிள் பயன்பாடு வெகுவாகக் குறைந்துவிட்டது.

இப்போது மீண்டும் சைக்கிள் மீது இளம் தலைமுறையின் கவனம் திரும்பியிருக்கிறது. உடற்பயிற்சியே இல்லாத வாழ்க்கைமுறை, உணவுப் பழக்கத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக உடல், நோய்களின் கூடாரமாக மாறிவருகிறது. போதாக்குறைக்கு தற்போது பெட்ரோல், டீசல் விலையேற்றம் வேறு வதைக்க, பலர் சைக்கிளில் வேலைக்குச் செல்லத் தொடங்கியிருக்கிறார்கள்.

'தினம் ஒரு மணி நேரம் உடற்பயிற்சி செய்வது நல்லது' என்று மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர். ஆனால் எந்தப் பயிற்சியை முதலில் தொடங்குவது என்ற சந்தேகம் பலருக்கும் வருவது இயல்பு. அப்படிப்பட்டவர்கள் முதல் பயிற்சியாக சைக்கிளை ஓட்டத் தொடங்கலாம். 20 வருடங்களுக்கு முன்பு வரை தமிழகத்தில் உள்ள அனைத்து வீடுகளிலும் குறைந்தது ஒரு சைக்கிளாவது இருக்கும். காலப்போக்கில் இரண்டு சக்கர மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்ல செல்ல வீட்டுக்கு இரண்டு மோட்டார் வாகனங்கள் என்ற நிலை உருவாகிவிட்டது.

**சரி, சைக்கிள் ஓட்டுவதால் என்ன நன்மை?**

சைக்கிள் பயன்படுத்துவது, 'சுற்றுச்சூழலைக் காக்கும் என்பது ஒருபுறம் இருக்க, அதனால் உடலுக்கு பல்வேறு நன்மைகள் கிடைக்கும்' என்கிறார்கள் மருத்துவர்கள். சைக்கிள் ஓட்டுவதால் ஏற்படும் நன்மைகளை இப்போது பார்ப்போம்.

1. சைக்கிள் ஓட்டும்போது, இதய துடிப்பு சீராகும். வயது முதிர்வு காரணமாக ஏற்படும் இதய வலுவிழப்பு, இதய அடைப்பு போன்ற பிரச்சனைகள் தடுக்கப்படும்.
2. டைப்–1, டைப்–2 சர்க்கரை நோயாளிகளுக்கு சர்க்கரையின் அளவு கட்டுக்குள் இருக்கும்.
3. தினமும் அரை மணி நேரம் சைக்கிள் ஓட்டினால், மூளையின் செயல்பாடுகள் அதிகரித்துச் சுறுசுறுப்பு உண்டாகும்.
4. சைக்கிள் ஓட்டுவதால் கால்தசைகள், தொடைப்பகுதி தசைகள், எலும்புப் பகுதிகள், முதுகுத் தண்டுவடம், இடுப்புப்பகுதி போன்றவை வலிமைபெறும்.
5. ரத்த அழுத்தம் தொடர்பான பிரச்னைகள் வராது.
6. உடல் எடையைக் குறைக்க உதவும்.
7. சைக்கிள் ஓட்டுபவர்களது மூளையின் செயல்திறன் அதிகரிக்கும்.
8. மனதளவில் புத்துணர்ச்சி கிடைக்கும்.
9. அதிக அளவில் வியர்வை வெளிப்படுவதால், உடலிலுள்ள கெட்ட கொழுப்புகள் குறையும்.
10. மார்பகப் புற்றுநோய், கர்ப்பப்பை வாய் புற்றுநோய் போன்றவற்றுக்கான முக்கியமான காரணி, உடல்பருமன். சைக்கிள் ஓட்டுவதன்மூலம் உடல்பருமன் தடுக்கப்படுவதுடன் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் குறைகிறது. ஸ்காட்லாந்தில் உள்ள க்ளாஸ்கௌவ் பல்கலைக்கழகம் (University of Glasgow) நடத்திய ஆய்வில், தினமும் சைக்கிளில் செல்பவர்களுக்கு 45 சதவிகிதம் புற்றுநோய் வராமல் தடுக்கப்படுவதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு:**

* சைக்கிள் ஓட்டுபவர்கள், எடுத்தவுடன் வெகுதூரம் பயணம் செய்ய வேண்டாம். 15 நிமிடத்தில் தொடங்கி, கொஞ்சம் கொஞ்சமாக வேகத்தையும், தூரத்தையும் அதிகப்படுத்துங்கள்.
* தாங்க முடியாத மூட்டுவலி, அதிக உடல் எடை, இதயக் கோளாறு போன்ற பிரச்னை உள்ளவர்கள் மருத்துவ ஆலோசனை பெற்று சைக்கிள் ஓட்டவும்.
* வயது மற்றும் உடல்நிலையைப் பொறுத்தே, சைக்கிள் ஓட்டும் நேரமும் வேகமும் அமைய வேண்டும்.

– அர்ச்சனா சுவேதாரண்யம்
பெசன்ட் நகர், சென்னை–90.
9943702054

## திருமந்திரம் உணர்த்தும் திறன் மேன்பாடு (SOFT SKILLS)

- A. Rajarethinam, Porur,
Chennai. Ph. 9444224366

திருமூலர் இயற்றிய திருமந்திரம் அள்ளி அள்ளிப் பருகினாலும் ஆசை தீராத அமுதம். திருமந்திரத்தின் அனைத்துப் பாடல்களுமே அருமையான முத்துக்கள். மனிதன் எப்படி வாழவேண்டும் என்பதைப் பற்றியும், மதம், கடவுள், பக்தி, ஞானம், குரு, முத்தி போன்ற ஆன்மிகம் சார்ந்த துறைகளைக் குறித்தும் பல பாடல்கள் திருமந்திரத்தில் அளிக்கப்பட்டுள்ளன.

திருமந்திரம் ஒரு பக்தி இலக்கியம் மட்டுமன்று. இது மனித வாழ்க்கையை விவரமாக விளக்கும் நூல். அதில் கூறப்பட்டிருக்கும் பல விஞ்ஞான செய்திகளைத் தொடர்ந்து வாசித்தால் நமக்கு அது ஒரு விஞ்ஞான நூலா ? மெய்ஞ்ஞான நூலா ? என்று சந்தேகம் எழும். உண்மையிலேயே திருமந்திரம் ஒரு விஞ்ஞானம் கலந்த மெய்ஞ்ஞான நூல். இதுதான் அதன் தனிச் சிறப்பு.

குருபக்தி என்பது ஒழுக்கம், அடக்கம், பொய் கூறாமை, பணிவு, இன்சொல் பேசுதல் போன்ற முறைகளைக் கடைப்பிடிப்பதே ஆகும். இந்த அருமையான குணங்கள்தான் மனிதனுக்கு திறன் மேன்பாட்டை (Soft Skills) அளிக்கிறது. சிறு வயதில் இருந்தே கல்வி பல நிலைகளில் வளர்ச்சி பெறுகின்றது. உடல், உள்ளம், மனவெழுச்சி இவற்றின் உயிரோட்டத்தை வெளிக்கொணரும் மெய்ப்பாடே கல்வியியல் என்பதைத் திருமந்திரம் உணர்த்துகிறது.

மனிதன் எப்படி வாழவேண்டும் என்பதை நீதிநூல்கள் பலவாறு எடுத்துரைத்து உள்ளன. அவ்வகையில் திருமூலர் வழிநின்று தனக்காக மட்டும் வாழாமல் அனைத்து உயிர்களுக்கும் உதவும் வகையில் அன்பு வாழ்க்கை வாழவேண்டும்.

“எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியோம் பராபரமே” என்பது தாயுமானவர் வாக்கு. இன்பமும் துன்பமும் நிறைந்த மனித வாழ்க்கையை இன்பமாகவே வாழமுடியும் என்று திருமந்திரம் உறுதியாக கூறுகின்றது.

திருமூலர் மனித வாழ்க்கை மேம்படுவதற்காக வாழும் முறைகளைப் பற்றி பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பே எழுதியிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் அறிந்து வாழ்க்கை தத்துவங்களை புரிந்துகொண்டு இந்த காலத்தில் திறன்பட வாழலாம். 2020ம் ஆண்டு “திருமந்திரமும் திறன் மேன்பாடும்” என்ற நூலை தமிழக அரசின் ஒரு அங்கமான உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்காக நான் எழுதினேன். அதன் முதல் பகுதியை சுருக்கமாக இங்கே எழுதியிருக்கிறேன். இனி வரும் சில மாதங்களில் இந்த நூலின் மற்ற பகுதிகளையும் கொஞ்சம் கொஞ்சமாக எழுத இருக்கிறேன். படித்து பலன் அடையவும். திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் எல்லா காலங்களுக்கும் பொருந்தும் என்பதை எல்லோரும் உணர்வார்கள். திருமூலர் எழுதிய திருமந்திரம் அதற்கு முன், அதாவது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது. அதில் கூறப்பட்டுள்ள பல வாழ்க்கை தத்துவங்கள் இந்த காலத்துக்கும் பொருந்தும். மேலும் பல விவரங்களை பின்வரும் இதழ்களில் காணலாம்.

---

## தமிழ் இலக்கியம்

– செல்வி மணிவாசகம், மும்பை

கனியிடை ஏறிய சுளையும் – முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் – காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் – தென்னை
நல்கிய குளிர் இளநீரும்
இனியன என்பேன் எனினும் – தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்

என்றார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

தமிழ் இனமானது இராமாயணம், மகாபாரதம் போன்ற புராணங்களை முன்னெடுப்பது போல, இவ்வுலகின் மொழிகளுக்கெல்லாம் முன்னத்தி ஏராகத் திகழும் தமிழ்மொழியையோ, ஒல்காப் புகழ் பெற்ற தொல்காப்பியம் மற்றும் வளம்சார் இலக்கண, இலக்கிய நூல்களையோ முன்னெடுத்து செல்வதில்லை. இலக்கியம் என்பது மனிதனின் எண்ணங்கள், உணர்வுகள், அனுபவங்கள் எழுத்து அல்லது வாய்மொழி வடிவில் வெளிப்படும் ஒரு கலை வடிவமாகும். இது ஒரு சமுதாயத்தின் நாகரீகம், பண்பாடு மற்றும் வாழ்க்கை முறையைப் பிரதிபலிக்கிறது. இலக்கு + இயம் = இலக்கியம். குறிக்கோளைக் கூறுவது. செய்யுள், கவிதை, நாடகம் மற்றும் உரைநடை போன்ற பல வடிவங்களில் படைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தாயின் கருவறையில் உருவான அனைத்து நூல்களையும் பட்டியல் இடுவது என்பது எளிதானதல்ல. அது ஒரு சமுத்திரம். கடந்த பல நூற்றாண்டுகளில் அகத்தியர் முதல் அப்துல் ரகுமான் வரை நம் மொழியின் சுவை அறிந்து பல்வேறு வடிவங்களிலும் (கல்வெட்டுகள், சொலவடைகள், பழமொழிகள்) தமிழர்களின் நெஞ்சில் செந்தமிழ் கோலோச்சுகிறது. இப்போது நாம் சங்ககால இலக்கியங்களைப் பார்ப்போம்.

சங்க காலத்திற்கு முந்தைய காலம் (கி.மு. 7ஆம் நூற்றாண்டுக்கு முன்) அகத்தியம் எனும் இலக்கண நூல், முதுகுருகு, முதுநாரை, ஊசிமுறி என பல நூல்கள் தென்படினும், அகத்தியத்தின் சில பகுதிகள் தவிர்த்து, எதுவும் கிடைக்கவில்லை. கடைச் சங்க

காலம் (கி.மு. 7ஆம் நூற்றாண்டு முதல் கி.மு. 50 வரை) தொல்காப்பியம் மற்றும் பதினென் மேற்கணக்கு, போன்றவை.

சங்கம் மருவிய காலம் (கி.மு. 50 முதல் கி.பி. 550 வரை) நூல்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினென் கீழ்க்கணக்கு, ஐம்பெருங்காப்பியங்கள், இலக்கண நூல்கள் போன்றவை பாசுர காலம்: கி.பி. 550 முதல் கி.பி. 900 வரை. நால்வர் பாசுரங்கள், நாலாயிர திவ்ய பிரபந்தம், இறையனார் களவியல் உரை போன்ற நூல்கள் தோன்றின. பிற்கால சோழர் காலம் கி.பி. 900 முதல் 1200 வரை.

சீவக சிந்தாமணி, சூளாமணி போன்ற காப்பியங்கள், கம்பராமாயணம், பெரியபுராணம், திருவினசப்பா போன்றவை. அதன் பின் திருப்புகழ், திருவிளையாடல் புராணம், வில்லிபுத்தூரார் பாரதம் போன்றவைகளும் தோன்றின. உலகின் எந்த மொழியிலும் இதுபோன்ற தொடர்ச்சியை காண முடியாது. ஆனால் ஒவ்வொரு நூற்றாண்டிலும் பெருகிய இலக்கியங்கள் ஏராளம். தமிழும் நாமும் வேறல்ல; ஒன்றோடு ஒன்று பிணைந்திருக்கிறோம்; பிணைந்திருப்போம்!

நன்றி! தொடரும்...

## கனக தண்ணீரில் வாழும் எங்கள் கார்மாங்குடி கிராமம்

கடலூர் மாவட்டம், ஸ்ரீ முஷ்ணம் வட்டம், விருத்தாசலம் என்னும் காசியினும் வீசம் அதிகமான அருள்மிகு. பழமலைநாதர் உடனுறை விருத்தாம்பிகை அம்மன் அருள்பாலிக்கும் நகரின் தென்கிழக்காய் 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது இயற்கை சூழ்ந்த இனிமையான, அழகான அன்பான மக்களை கொண்ட ஆன்மிகம் நிறைந்த கார்மாங்குடி கிராமம்.

கார்காலத்தில் மாங்காய்கள் காய்த்ததால் ‘‘கார்மாங்குடி’’ என்றும் ராஜேந்திர சோழ மன்னனால் தன் மகனுக்கு மாறுகால், மாறுகை வெட்ட தண்டனை அளிக்கப்பட்டு தண்டனை நிறைவேற்றப்பட்டு கால் வெட்டப்பட்ட இடம் என்பதால் கால்வாங்குடி என்ற பெயர் ஏற்பட்டு பின்னாளில் மருவி கார்மாங்குடி என அழைக்கப்படுவதை மெய்ப்பிக்கும் வகையில் கார்மாங்குடியிலிருந்து வடபுறம் செல்லும் வடகரையில் அருள்பாலித்து வரும் ஸ்ரீ பிரம்மபுரீஸ்வரர் உடனுறை அன்னபூரணி கோயில் உள்ளது.

கால் வெட்டப்பட்ட இளவரசன் தவழ்ந்து சென்று கோயிலை அடைந்து ஸ்ரீ பிரம்மபுரீஸ்வரர் அருளால் கால்கூடியது. அப்படி கால் கூடியதால் கால்கூடல் என்ற பெயருடன் அழைக்கப்பட்டு காலப்போக்கில் ‘‘கார்குடல்’’ என மருவி அழைக்கப்பட்டு வருகிறது.

இன்றும் கார்குடல் தெற்கு ஆற்றின் கரையோரம் கை, கால்கள் செயல் இழந்தவர்களுக்கு சிறந்த பரிகாரத் தலமாக விளங்கி வருவதைப் பார்க்கும் போது ஊரின் பெயர் மெய்ப்படுகிறது.

தீப்பாய்ந்த நாச்சியாரின் வாழ்த்து பெற்று இன்றுவரை வாழும் ஊர்

பெண்ணின் நடத்தையில் சந்தேகம் கொண்டவரால் பல ஊர் பஞ்சாயத்து கூட்டப்பட்டது. அப்பஞ்சாயத்தில் அப்பெண்ணிற்கு சாதகமாக சில ஊர்களும், பாதகமாக பல ஊர்கள் பேசியதால் உண்மையை உணர்த்த வேண்டி அக்னி பிரவேசம் மூலம் நிரூபிக்கத் தயாராகும் முன் சாதகமாக பேசிய ஊர்களுக்கு வாழ்த்துக்களும், பாதகமாக பேசிய ஊர்களுக்கு சாபத்தையும் வழங்கியதாகவும் அப்படி அப்பெண்ணால் வாழ்த்துப் பெற்ற ஊர்களில் ‘‘கார்மாங்குடி கனக தண்ணீரில் வாழ்க’’ எனவும் வாழ்த்திவிட்டு தீயில் இறங்கியதால் தீப்பாய்ந்த நாச்சியாராக இன்றளவும் மக்களால் வணங்கப்பட்டு வருகிறாள். வாழ்த்துப் பெற்ற, சாபம் பெற்ற ஊர்கள் இன்றளவும் அதை மெய்ப்பிப்பதை போலவே (விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டும் மாற்றமின்றி உள்ளன.

இன்றளவும் கார்மாங்குடி கிராமம் தண்ணீர் பஞ்சத்தில் தவித்ததாக வரலாறு இல்லை.

முப்போகமும் விளையும் இறைவைப் பாசனம் கொண்ட நன்செய், புன்செய் நிறைந்த ஊர்.

திண்ணைகள் உள்ள வீடுகள் எல்லாம் கான்கிரீட் வீடுகளாய் மாறிவிட்டாலும் அன்பான, பாசம் கொண்ட மக்கள் நிறைந்த கிராமம்.

கோயில்கள்

ஊரைக் காக்கும் அய்யனார் கோவில் ஊரின் முகப்பில் கிழக்கு நோக்கி ஊரைப் பார்த்தவண்ணம் அருள்பாலிக்கிறார். ஊரின் நடுவில் மாரியம்மன் மக்களை நோய், நொடியிலிருந்து காத்து வருகிறார். காக்கும் கடவுளான பெருமாளும் கோயில் கொண்டு அருள்பாலிக்கிறார். விநாயகர், முருகன், சிவன் கோயில்களும் உள்ளன.

தாமரை தடாகங்கள் இருந்த இடம் குடியிருப்புக்களாய் மாறியுள்ளன!

கால்நடைகளுக்கான குட்டையும் இல்லை. கால்நடைகளும் குறைந்துவிட்டது.

காலமாற்றம் கார்மாங்குடியையும் மாற்றிவிட்டது!

மூன்றுதலைமுறைகளைகடந்துவந்திருப்பதால் உறவுகளையும், ஊரின் பெருமையையும் எடுத்துச் சொல்லி நான்காவது தலைமுறையான என் பிள்ளைகளை அவ்வப்போது அழைத்துச் சென்று பூர்வீக கிராமத்தின் வாழ்ந்த, வாழும் உறவுகளோடு எதிர்காலத்தில் வாழ, எதிர்கால எதார்த்தத்தையும் என் பிள்ளைகளுக்கும், ஏனைய குழந்தைகளுக்கும் எடுத்துரைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

– கார்மாங்குடி கார்த்திகேயன்
83008 48826

## சங்கப்பலகை

**பங்கேற்போர்:** வசுமதி, ஆண்டாள், மீரா, சித்ரா, பிரியா, மீனா, கௌரி, தீபிகா, கோமதி.

**இடம்:** நுங்கம்பாக்கம் பிரியாவின் இல்லம்.

தோழிகள் அனைவரும் மாலை சுமார் 4 மணிக்கு கூடுகின்றனர்.

பிரியா: வாங்க! வாங்க! எல்லாரும் வாங்க! வெயில்ல வந்திருக்கீங்க. ஏன் இந்த மாசம் 4 மணிக்கே மீட்டிங் போட்டீங்க?

மீரா: நுங்கம்பாக்கம் வந்து, போறதுக்கு Traffic Jamலே மாட்டணும். 4 மணிக்கு ஆரம்பிச்சு, 5.15க்குள் முடிச்சோம்னா, வீடு போறது easyயாக இருக்குமேன்னு தான் இந்த timeஐ முடிவு செஞ்சோம்.

பிரியா: அது சரிதான்க்கா! சரி! எல்லோரும் உட்காருங்க. Watermelon juice கொண்டுவரேன். Coffee போகும் போது எடுத்துக்கலாம்.

வசுமதி: ஆண்டாளக்கா! ஆரம்பிங்கக்கா!

ஆண்டாள்: ஆடி மாதம் வழிபாட்டிற்கான மாதம். பண்டிகைகள் தொடங்கும் மாதம். இந்த மாசத்தை, அம்மன்மாசம்என்பார்கள்.கோயில்களில்விழாக்களும், வீடுகளில் விரத வழிபாடுகளும் களை கட்டும். ஆடி செவ்வாய், வெள்ளி, ஞாயிறு மிகவும் விசேஷமானவை. பூமிதேவி பூமியில் அம்மனாக அவதரித்த மாதம். பார்வதியின் தவத்தை மெச்சிய, சிவபெருமான் ஆடி மாதம் அம்மன் மாதமாக இருக்க வரம் கொடுத்தார் என்பர். சிவனுடைய சக்தியை விட அம்மனுடைய சக்தி ஆடி மாசத்தில் அதிகமாக இருக்குமென்பதும், சிவன் சக்திக்குள் அடக்கமென்பதும் ஐதீகம். குலதெய்வ வழிபாடு, கிராம தேவதை வழிபாடு என அனைத்து தெய்வங்களையும் வழிபடுவதற்கேற்ற மாதம் ஆகும்.

மீரா: பெண் மாதமான ஆடி மாதத்தை, கற்கடக மாசம் என்று கூறுவர். ஆடி முதல் மார்கழி வரை தட்சணாயனபுண்யகாலம்என்பர்.இக்காலக்கட்டத்தில் புனித நதிகளில் நீராடுவது மிகவும் விசேஷமாக கருதப்படுகிறது. மக்களின் ஜீவநாடியாக விளங்கும் நதிகளில் புது நீர் வருவதைக் கொண்டாடுவது பல நூற்றாண்டுகளாக தமிழர்களின் மரபாகும். ஆடிப் பூரத்தன்று ஆண்டாள் பிறந்தாள். ஆடி மாதம் அம்மனுக்கு சாற்றப்படும் வளையல்கள் பிரசாதமாக அளிக்கப்படும்.

கௌரி: ஆடி மாசத்தை 'பீடை மாதம்'ன்னு சொல்றாங்களே! அதனால தானே அந்த மாதம் திருமணங்கள் நடைபெறுவதில்லை.

கோமதி: அது 'பீடை மாசம்' அல்ல; 'பீட மாதம்' அதாவது மனமாகிய பீடத்தில் இறைவனை வைத்து வழிபட வேண்டிய மாதம் என்பதே பொருள். சரி! அடுத்த topic-க்கு போவோம்பா!

சித்ரா: வியட்நாம் இந்துக் கோவில்களைப் பற்றி பார்ப்போம். யாங்போ இனுநகர் என்பது வியட்நாமில் நாதிராங் நகரில் உள்ள பழமையான இந்து கோவில். யாங் – தெய்வம், போ – தலைவி, இனு – தாய், நகர் – நாடு. ஆக நாட்டிற்கு அன்னையாக இருக்கும் தெய்வம். இங்குள்ள பெண் தெய்வம் பகவதி அல்லது துர்க்கை என கூறப்படுகிறது. இக்கோவில்களை எழுப்பியவர்கள் சம்பா (Champa) மன்னர்கள். 13ஆம் நூற்றாண்டு வரை இந்து மதம் இந்நாட்டில் இருந்துள்ளது. 781ல் சத்யவர்மன் என்ற சம்பா மன்னன் இக்கோவிலைப் புதுப்பித்துள்ளான். முதலாம் ஹரிவர்மன் (802–817) காலத்தில் முக்கிய கட்டுமானப் பணிகள் நடைபெற்றுள்ளன. கம்போடியாவின் கெமர் மன்னர்கள் கோயிலின் தங்கச் சிலையை எடுத்துச் சென்றதால் கருங்கற் சிலையும், பொன்முலாம் பூசிய சிலையும் நிறுவப்பட்டன.

பிரியா: இன்னொரு முக்கிய இந்தியக் கோயிலின் குழுமம் டாநாங் (Danang) அருகில் உள்ள மைசன் கோயில் (Myson Sanctuary). பத்ரவர்மன் எனும் சம்பா மன்னனின் பெயரால், இங்குள்ள சிவன் கோவில் பத்ரேஸ்வரர் கோவில் என அழைக்கப்பட்டது. தமிழகத்தின் பல்லவர்கள், சோழர்களின் கட்டிடக் கலை பாணி பின்பற்றப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் உள்ள இந்திய பாரம்பரிய சின்னங்களைப் பாதுகாக்க இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. மைசன் கோவிலின் ஆய்வில், 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மணல் கல்லாலான பெரிய சிவலிங்கம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

வசுமதி: உலகின் மிக நீளமான கடல் நடைபாலம் (1 – 2 கி.மீ) பின்லாந்தின் ஹெல்சின்கியின் தீவுகளையும், நகர மையப் பகுதியையும் இணைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

மீனா: நீ கடற்பாலம்னு சொன்னதும், நமது தமிழக கடற்கரைகள் ஞாபகத்துக்கு வருது. தமிழகத்தின் நீல ரத்ன கடற்கரை தனுஷ்கோடி; தொல்பொருள் கடற்கரை – மகாபலிபுரம்; பல வண்ண மணல்கள் கடற்கரை – கன்னியாகுமரி; சாகச விளையாட்டு கடற்கரை – தர்கார்லி என கூறப்படுகிறது.

வசுமதி: பி.ஆர்.ஓ. எனப்படும் எல்லை சாலை அமைப்பு

சார்பில், லடாக்கில் மிக்லாபாஸ் பகுதியில் கடல் மட்டத்தில் இருந்து 19,400 அடி உயரத்தில் உலகின் உயரமான சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், உத்தரகாண்டில் சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள திபெத் எல்லை வரை செல்லும் நீலாபானி முலிஸ்லா இடையே 16,000 அடி உயரத்தில் 32 கி.மீ. தூரத்திற்கு ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த மலைச்சாலை அமைக்கப்பட உள்ளது. நாமும் இதுபோன்ற கட்டுமான விஷயத்தில் வளர்ந்து வரோம்கிறது சந்தோஷமா இருக்கு.

கௌரி: நான் வான்வெளிக்குப் போறேம்பா! பூமியில் இருந்து 1300 ஒளி ஆண்டுகள் தொலைவில் இருப்பது V883 ஒரியானிஸ் நட்சத்திரம். இதைச் சுற்றி இருக்கும் வளையத்தில் தண்ணீர் இருப்பதை அடகாமா பாலைவனத்தில் உள்ள தொலைநோக்கி உதவியுடன் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

சித்ரா: என்.ஜி.சி. 6000 எனும் Galaxy பூமியில் இருந்து 10.2 கோடி ஒளியாண்டுகள் தொலைவில் விருச்சிக ராசி மண்டலத்தில் உள்ளது. சமீபத்தில் ஹப்பிள் தொலைநோக்கி இதனை மிக அழகாகப் படமெடுத்துள்ளது.

கௌரி: பூமியிலிருந்து 403 ஒளியாண்டுகள் தொலைவில் WASP-132 எனும் இளஞ்சிவப்பு நட்சத்திரம் உள்ளது. சமீபத்தில் விஞ்ஞானிகள் இதைச் சுற்றி வரும் இரண்டு கோள்களைக் கண்டுபிடித்து உள்ளனர். அவற்றில் WASP-132c நட்சத்திரத்தைச் சுற்ற 24 மணி நேரமும், WASP-132d நட்சத்திரத்தைச் சுற்ற 5 ஆண்டுகளும் எடுத்துக்கொள்கிறது என கூறி உள்ளனர்.

தீபிகா: இன்னைக்கு Fullஆ விண்வெளியைப் பற்றியே பேசலாம் போல இருக்கு. HD20794d என்பது நமது பூமியைப் போல 6 மடங்கு நிறையை உடைய கோள். 2011ஆம் ஆண்டு இந்த கோள் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் இதைப் பற்றிய தகவல்கள் இப்போதுதான் வெளிவருகின்றன. இந்த கோளில் உயிர்கள் வாழ்வதற்குச் சாதகமான சூழல் இருப்பதாக விஞ்ஞானிகள் யூகிக்கிறார்கள்.

சித்ரா: பூமியைத் தாக்கும் என அஞ்சப்பட்ட விண்கல் 2024YR4. ஆனால் இது 2032–ல் நிலவைத் தாக்கக்கூடும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

தீபிகா: க்ளைசி 251 நட்சத்திரம் பூமியிலிருந்து 18 ஒளியாண்டுகள் தொலைவில் மிதுனராசி மண்டலத்தில் அமைந்துள்ளது. பூமியைப் போன்ற இரண்டு கிரகங்கள் இதைச் சுற்றி வருவதாக கண்டுபிடித்துள்ளனர்.

கௌரி: சரிப்பா! இதுதான் last. வேற்று கிரகங்களில் உயிரினங்களை கண்டறிய நாம் அங்கு போகாமலே அவற்றின் வளிமண்டலங்களை ஆராய்ந்தாலே போதும் என்று கனெடிய விண்ணியற்பியலாளர் சாராசீகர் என்பவர் கண்டறிந்துள்ளார்.

மீனா: ஜூன் 24ஆம் தேதி வெனிசுலாவின் சான்பெலிப் அருகே ரிக்டார் அளவில் 7.2 அளவுள்ள முன் அதிர்வைத் தொடர்ந்து, சில வினாடிகளில் 7.5 ரிக்டர் அளவுள்ள ஒரு பிரதான அதிர்வுஏற்பட்டு, கராகஸ் மற்றும் லாகுவைரா நகரங்களைச் சிதைத்துள்ளது. இறப்பு எண்ணிக்கை ஏற்கெனவே 900ஐத் தாண்டி அதிகரித்து வருவதோடு, பல்லாயிரக்கணக்கானோர் காணவில்லை என கூறப்படுகிறது. துருக்கி, மெக்சிகோ, சிலி, எல்சால்வடார் நாடுகளின் சர்வதேச மீட்புக் குழுக்களும், அமெரிக்க இராணுவ உதவியும் தேசத்தில் குவிந்துள்ளன. அந்நாட்டின் மக்கள் இப்பேரழிவிலிருந்து மீண்டுவர நாம் பிரார்த்திப்போம்பா!

மீரா: கொசோவன் பிரிஷ்டினா நகரில் நடந்த டேபிள் டென்னிஸ் போட்டியில் 15 வயது திவ்யான்ஷி பெண்கள் ஒற்றையர் பிரிவிலும், இரட்டையர் பிரிவிலும் தங்கம் வென்றுள்ளார். அவருக்கு நம் பாராட்டுக்கள்.

மீனா: ஆசிய மல்யுத்தத்தில் (17 வயதுக்குட்பட்ட) ஆண்களுக்கான பிரீ ஸ்டைல் 92 கிலோ பிரிவில் தீபான்ஷு தாஹிபா தங்கம் வென்றதுடன், 110 கிலோ பிரிவில் ஆருஷ்ராணா தங்கம் வென்றுள்ளார். 65 கிலோ, 80 கிலோ பிரிவுகளில் நம் இந்திய வீரர்கள் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளனர். மொத்தத்தில் இந்திய அணி 7 பதக்கங்கள் வென்று மூன்றாவது இடம் பிடித்து வெண்கலம் கைப்பற்றியது. அனைவரையும் நாம் பாராட்டுவோம்.

ஆண்டாள்: நிறைய பேசிட்டோம். மறைந்த புகழ் பெற்ற இயக்குநர்கள் பாரதிராஜா, பாக்யராஜ் ஆன்மாக்கள் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம். ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம்.

ஒரு நிமிட அஞ்சலிக்குப் பின் தயிர்வடையும், கேசரியும் உண்டு, காபி குடித்து, அடுத்த மாதம் அடையாறில் உள்ள கோமதி வீடு என முடிவெடுத்து கலைகின்றனர்.

நன்றி! வணக்கம்!



# சிறுவர் பகுதி



தயாரிப்பு **தஞ்சை தியாகு**

அலைபேசி: 94437 00375

Email: thiagu1943@gmail.com

நம்பிக்கையை கைவிடாதே! அதுதான் வெற்றியின் முதல்படிக்கட்டு!

## *நிறைய படியுங்கள்! தீர்க்கமாக சிந்தியுங்கள்!*

அறியாமை என்பது மிகப்பெரிய சாபம்! முட்டாளாக இருப்பது ஒரு மிகப்பெரிய தண்டனை! இதில் விசித்திரம் என்னவென்றால் இந்த சாபத்தையும்,தண்டனையையும் நாம்தான் நமக்குக் கொடுத்துக் கொள்கின்றோம்!ஆகையால் நிறைய படியுங்கள்! தீர்க்கமாக சிந்தியுங்கள்! சளைக்காமல் வேலை செய்யுங்கள்! உங்கள் வாழ்க்கையில் பன்னிரெண்டு மாதங்களும் வசந்த காலமாக இருக்கும்.பல ஆண்டுகாலம் கல்வி பயின்றுவிட்டுத் தனது குருகுலத்திலிருந்து தனது ஊருக்குச்செல்லும் மாணவன் ஒருவனைப்பார்த்து அந்த குரு சொன்னார். நீ முறம் மாதிரி இரு ! சல்லடை மாதிரி இருக்காதே ! இதற்கு அர்த்தம் என்ன தெரியுமா ? சல்லடை நல்ல விஷயங்களையெல்லாம் கீழே தள்ளிவிட்டு ,தேவையில்லாத கசடுகளையும், கல்லையும் மண்ணையும் வைத்துக்கொள்ளும். முறமோ,பதறையும் கல்,மண்ணையும் கீழே தள்ளிவிட்டு நல்ல விஷயங்களை மட்டும் தக்க வைத்துக்கொள்ளும்! நீங்கள் யார் ? முறமா ? சல்லடையா ?

## *சாதனைப்பெண்*

சில ஆண்டுகள் முன்பாக கல்பனா சாவ்லா விருதினை மதுரை மாவட்டம் உசிலம்பட்டியைச்சேர்ந்த ராஜலெட்சுமி பெற்றிருக்கிறார்.சிறு வயதில் போலியோ நோய் தாக்கி கால்கள் நடக்க இயலாத நிலையில்,தன் உடல் உறுப்பு குறையினால் மனம் தளராது, உறுதியோடு முயன்று போராடி குண்டு எறிதல்,ஈட்டி எறிதல்,தட்டுஎறிதல் போன்ற பல போட்டிகளில் மாநில அளவில் தனது வெற்றிகளைத் துவங்கிய இவர் 2004ஆம் ஆண்டு பெல்ஜியத்தில் நடைபெற்ற பாரா ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் பெற்றார்.மலேசியாவில் நடைபெற்ற மாற்றுத்திறன் படைத்தோருக்கான போட்டியில் வெண்கலப்பதக்கம் பெற்றிருக்கின்றார்.தன் உடல் உடல் குறைபாட்டினை எண்ணி ஒடுங்கிவிடாது முயன்று வெற்றிகளைக் குவித்துவரும் ஒரு சாதனைப் பெண்தானே! நமது வாழ்த்துக்கள்.நீங்கள் செய்ய இருக்கும் சாதனை எந்தத்துறையில் வேண்டுமானாலும் இருக்கட்டுமே!



**காக்டெய்ல் புதிர் : 1.** காக்டெய்ல் செர்ரி எனும் இப் புதிர் மிகவும் பிரசித்தமானது. புத்திசாலிகளே திணறிப்போய் இதற்கு விடைகிடையாது என கைவிட்டிருக்கிறார்கள். புதிர் மிக எளிது. நான்கு தீக்குச்சிகளைப் படத்தில் உள்ளவாறு காக்டெய்ல் கோப்பை வடிவில் வைக்கவேண்டும். உள்ளே ஒரு செர்ரி, ஆப்பிள், ஆரஞ்சு ஏதாவது ஒருபழம் இருக்கும். புதிர் என்னவெனில் இரண்டே இரண்டு தீக்குச்சிகளை மட்டும் இடம் மாற்றி வைக்க வேண்டும் .பழம் வெளியே இருக்கவேண்டும்.கோப்பையும் வடிவம் மாறக்கூடாது.

**காக்டெய்ல் புதிர் : 2.** 9 என்ற எண்ணை மொத்தம் ஆறு தடவைகள் பயன்படுத்தி அவற்றை பெருக்கியோ, வகுத்தோ, கூட்டியோ, இறுதியில் மதிப்பு 100 என்று வரச் செய்ய வேண்டும். முடியுமா ?

**காக்டெய்ல் புதிர் : 3.** இரண்டையும் இரண்டையும் கூட்டினால் நான்கு. இரண்டை இரண்டால் பெருக்கினாலும் நான்கு .( 2 + 2 = 4 ,2 மு 2 = 4 ) இது மாதிரியே தன்னுடன் கூட்டினாலும் பெருக்கினாலும் ஒரே எண் வரக்கூடிய ஒற்றை எண் 2....ஆனால் இவ்வாறு விடை வரக்கூடிய ஜோடி எண்கள் நிறைய உள்ளன. அந்த ஜோடி எண்களைக் கூட்டினாலும் பெருக்கினாலும் ஒரே தொகை வரும். உங்களால் ஒரு உதாரணம் சொல்ல முடியுமா ?



**நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றுந்தன்**
**உண்மை அறிவே மிகும்.** – குறள்

ஒருவன் நுட்பமான பல நூல்களைக் கற்றாலும் ,அவனுக்குத் தனது ஊழினாலாகிய அறிவே மேம்பட்டு நிற்கும்.



**இவை தெரியுமா?**





1. யாக் என்ற (எருமை) விலங்கின் பால் ஊதா நிறமாக இருக்கும்.
2. நாய்களுக்கு வியர்ப்பது இல்லை.
3. திமிங்கிலக் குட்டியின் எடை நாள் ஒன்றுக்கு 10 கிலோ கூடும்.
4. வெட்டுக்கிளி நாள் கணக்கில் பறக்கக்கூடியது.
5. ஒட்டகச் சிவிங்கி திரும்பாமலே பின்புறம் பார்க்கக்கூடியது.
6. வண்ணத்துப்பூச்சி காலினாலேயே ருசி அறிகிறது.
7. ஈக்கு இரண்டு இறக்கைகள்.தேனீக்கு நான்கு இறக்கைகள்.
8. கரப்பான் பூச்சி எப்போதும் 16 முட்டைகளே இடும்.
9. க்வீ என்ற பறவை பூனைபோல கத்தும்,நாய்போல உறுமும்.
10. நத்தை ஒரு மைல் தூரத்தைக் கடக்க மூன்று வாரம் ஆகும்.
11. 3000 அடிக்கு அப்பால் மனிதர் இருப்பதை யானை உணரும்.
12. திரவ நிலையில் உள்ள ஒரே உலோகம் பாதரசம் மட்டுமே.
13. கடலில் கலக்காத நதி யமுனை.
14. வாடிகன் மாளிகை 1400 அறைகள் கொண்டது.
15. காற்று வீசுவது பூமி சுழல்வதால்தான்.
16. பாலில் இரும்புச் சத்து மட்டுமே இல்லை.

**தன்னம்பிக்கையில்லாது வெற்றியா ?**

வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள் யாரின் சரித்திரத்தை வேண்டுமானாலும் எடுத்துப் பாருங்கள்! படிப்பு இல்லாமல்,பணம் இல்லாமல், ஏன் கை இல்லாமல்,கால்கள் இல்லாமல் கூட வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள் உண்டு! சாதித்தவர்களும் உண்டு!ஆனால் தன்னம்பிக்கையில்லாமல் வெற்றி பெற்றவர்கள் என்று யாருமே இல்லை.ஒலிம்பிக்,ஏஷியாட் போன்ற சர்வதேச விளையாட்டுப்போட்டிகளில் சில நாடுகள் மட்டும் தங்க மெடல்களை வாரிச்செல்வதற்குப் பயிற்சி,வசதி வாய்ப்புகள் என்று எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன! ஆனால் , இவை எல்லாவற்றையும்விட முக்கியமான ஒரு காரணம் உண்டு! Sports Psychology என்று குறிப்பிடுகின்றார்கள்! இதைக் கண்டுபிடித்தது ரஷ்ய நாட்டினர்தான்.அனால் இதை அமெரிக்கர்கள் இப்போது நன்கு புரிந்துகொண்டு பல மடங்கு மேம்படுத்திவிட்டார்கள்.

விளையாட்டுப்போட்டிகளில் வெற்றிபெற உடற்பயிற்சி மட்டும் போதாது.மனப்பயிற்சியும் வேண்டும் என Sports Psychology சொல்கிறது! அதாவது ஓட்டப்பந்தயத்தில் ஒரு வீரன் ஓடிக்கொண்டிருக்கும்போது நாம் தோற்றுவிடுவோம் போலிருக்கிறதே என்று ஒரு கணம் நினைத்துவிட்டால் போதும் போட்டியில் அதன்பின் அவனால் முழுவேகத்தோடு பிரகாசிக்கமுடியாது.அதனால் ஓட்டப்பந்தயத்தில் ஓடும்போது மட்டும் அல்லாமல் பயிற்சி எடுக்கும் காலத்திலிருந்தே நாம்தான் ஜெயிக்கப்போகிறோம் என்று தனக்குத்தானே திரும்பத் திரும்ப ஆழமான நம்பிக்கையோடு அவன்சொல்லிக்கொள்ளவேண்டும்!இதையே Mental Reharsal என்கிறார்கள். வாழ்க்கையில் வெற்றிபெற கடந்த காலத்தை ஒருபோதும் அனுமதிக்காது தன்னம்பிக்கையோடு என்றும் செயல்படுங்கள். வெற்றிபெறுங்கள் !

**எதிர் நீச்சல்தான் வாழ்க்கை!**

மற்றவர்களின் உடல் பலம். பணபலத்தைக் கண்டு அஞ்சாதீர்கள். நான் வெல்லவே பிறந்திருக்கிறேன் என்ற தீர்மானத்துடன் வாழ்வில் எதிர்நீச்சல் போடுங்கள்.

புதிய முயற்சியில் ஈடுபடும்போது. கடந்தகால அனுபவம் கற்றுத்தந்த பாடத்தை மறக்காதீர்கள். எத்தனை முறை தோற்றாலும் முயற்சியைக் கைவிடாதீர்கள்.

தோல்வி என்பது தற்காலிகமான ஒன்றே. உலகம் வேண்டுமானால் ஒருவனை தோல்வி யாளனாகக் கருதலாம். ஆனால் தன்னம்பிக்கையும். விடாமுயற்சியும் இருப்பவனுக்கு வெற்றி கிடைத்தே தீரும்.

தினமும் இரவு தூங்கும் முன். அன்றைய நாளில் செய்தபணி அனைத்தையும் பட்டியலிடுங்கள். இது உங்களை நீங்களே திருத்திக்கொள்ளவும். திட்டமிடவும் தூண்டுகோலாக இருக்கும்.

வேகத்துடன். விவேகத்தையும் மனதில் வளர்த்துக்கொள்ளுங்கள். இதுவே நெருக்கடி நேரத்தில் மனிதனுக்கு தக்க பாதுகாப்பாக அமையும். எந்த வேலையையும் இன்று போகட்டும் நாளை பார்த்துக்கொள்ளலாம் என்று தள்ளிப் போடாதீர்கள். காலம் தாழ்த்தினால் நம்மை நாமே ஏமாற்றுவதாக ஆகிவிடும். அமைதியும். உறுதியும் உள்ளத்தில் இருந்தால் நீங்கள் ஒரு வெற்றி வீரரே. – யோகானந்தர்

## ஜோக்ஸ்

1. தலைவருக்கு டாக்டர் பட்டம் கொடுத்தது தப்பாப்போச்சு...ஏன் ?
   கட்சிக்கு வெற்றி வாய்ப்பு எப்படின்னு கேட்டதுக்கு எதையும் 24 மணிநேரம் கழித்துதான் சொல்லமுடியும்னு சொல்றார்.
2. தலைவருக்கு டாக்டர் பட்டம் கொடுத்ததில அப்படி என்ன ரொம்ப சந்தோஷம் ?
   இனிமே சம்மன் வந்தா .நெஞ்சு வலின்னு அவரே சர்ட்டிபிகேட் கொடுத்துக்கலாமே!
3. சர்வர் சூடா என்ன இருக்கு ?
   எதுவேண்டுமானாலும் கேளுங்கசார், சூடு பண்ணித் தர்ரேன்!
4. என்வீட்டுக்கு நேத்து ராத்திரி திருடன் வந்தானே! அதை ஏன் சந்தோஷமா சொல்றீங்க ?
   பீரோ சாவி தொலைஞ்சுபோய் அவஸ்தை பட்டுகிட்டிருந்தேன்!அவன் திறந்து போட்டுட்டுடான்!
5. நீ அவரைக் கொலை செய்யறதுக்கு முன்ன ஏன் அவரு கண்ணை துணியால கட்டுன ?
   அவர் ஐ விட்னஸ் ஆயிடக் கூடாதேன்னுதான்!
6. இந்த வீட்டை இடிச்சிட்டு வேறு வீடு கட்டலாம்னா தடங்கலா இருக்கு !இதில் என்ன தடங்கல் ?
   இந்த வீடு என்னோடதில்லை. அதான் தடங்கல்.
7. ஒரு சர்தார்ஜியும் தமிழனும் ரயிலில் ஒரே கம்பார்ட்மெண்ட்டில் பயணம் செய்து கொண்டிருந்தனர்.தமிழன் தனது கைக்கடிகாரத்தின் ஸ்டிராப்பைக் கழற்றமுடியாமல் திணறுவதைப் பார்த்த சர்தார்ஜி அவரது கையைப்பிடித்து ஓர் உதறலில் கழற்றிவிட்டு மதராசியெல்லாம் என்மாதிரி கோதுமை சாப்பிடவேண்டும்.அப்போதுதான் பலம் வரும் என்றார். தமிழனுக்குக் கோபம் வந்தது.அபாயச்சங்கிலியை தான் இழுப்பதைப்போல பாசாங்கு செய்தான்.சங்கிலியை இழுக்க முடியவில்லை.சர்தார்ஜி எழுந்து சங்கிலியை இழுத்து பார்த்தாயா ? மறுபடியும் சொல்கிறேன் மதராசிகள் எல்லாம் கோதுமை சாப்பிடவேண்டும் என்றார்.வண்டி நின்றது .கார்டும் போலீசும் வந்து விசாரித்துவிட்டு சர்தார்ஜிக்கு 500ரூபாய் அபராதம் விதித்தார்கள்.பிறகு தமிழன் சர்தார்ஜியிடம் மெல்ல உங்க மாதிரி பஞ்சாபிகளெல்லாம் எங்கமாதிரி அரிசி சாப்பிடணும் அப்பத்தான் மூளை வளரும் என்றாரே பார்க்கலாம்!

## பெரிசு! ரொம்ப பெரிசு!

| | |
|---|---|
| ரொம்பப் பெரிய பாவம் | அவதூறு பேசுவது |
| ரொம்பப் பெரிய தடை | அச்சப்படுவது |
| ரொம்பப் பெரிய தவறு | முயற்சியைக் கைவிடுவது |
| ரொம்பப் பெரிய சந்தோஷம் | கடமையைச்செய்வது |
| ரொம்பப் பெரிய பலம் | தெளிவாக சிந்திப்பது |
| ரொம்பப் பெரிய வரம் | ஆரோக்கியமாக வாழ்வது |
| ரொம்பப் பெரிய சக்தி | நல்லதையே எண்ணுவது |
| ரொம்பப் பெரியவெற்றி | தன்னையே வெல்வது |
| ரொம்பப் பெரிய இழப்பு | நம்பிக்கை இழப்பு |



## முக்கிய தல விருட்சங்கள்

விருட்சம் என்றால் மரம்.இயற்கையில் நமக்கு அளிக்கப்பட்ட அம் மரங்கள்தான் நம்மை வாழவைத்துக் கொண்டிருக்கின்றன. கீழ்க்காணும் பலன்களைத்தருவதாகவும் கூறப்படுகின்றன. மரங்களைக் காப்போம் நாமும் பலன் பெறுவோம்.

| | | |
|---|---|---|
| மதுரை மீனாட்சி அம்மன் | கடம்ப மரம் | கல்வி பெருகும் |
| குற்றாலம் குற்றால நாதர் | பலா | இனிய வாழ்வு |
| மயிலாடுதுறை மயூரநாதர் | மாமரம் | வெற்றி |
| திருநெல்வேலி நெல்லையப்பர் | மூங்கில் | இசை ஞானம் |
| தென்காசி விஸ்வநாதர் | செண்பகம் | திருமண வரம் |
| சென்னை திருவொற்றியூர் ஆதிபுரீஸ்வரர் | மகிழ மரம் | தம்பதி ஒற்றுமை |
| ஆழ்வார் திருநகரி பெருமாள் | புளிய மரம் | சகோதர பாசம் |
| வைத்தீஸ்வரன்கோவில் வைத்தியநாதர் | வேப்பமரம் | ஆரோக்கிய வாழ்வு |
| உத்தர கோசமங்கை (ராமநாத புரம்)மங்கள நாதர் | இலந்தை | தீர்க்க சுமங்கலி |
| பாபநாசம்(திருநெல்வேலி)பாபநாச நாதர் | முக்கிளா | வேதத்தில் தேர்ச்சி |

## பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுங்கள்!

சாதனையாளர்கள் சூழ்நிலைமீது குறைகூறுவது கிடையாது. வெற்றிபெற்றவர்கள் எல்லாம் தங்களுடைய தவறுகளுக்கு தாங்களே பொறுப்பு ஏற்கிறார்கள்.தவறுகளுக்கான காரணத்தை ஆராய்கின்றனர். அதனால் அவர்கள் அதனைத் திருத்திக்கொள்ள முயலுகின்றனர். திருத்திக் கொள்ளவும் முடிகின்றது.பொறுப்புள்ளவர்கள் சாதிக்கின்றனர்,போற்றப்படுகின்றனர். பொறுப்பற்றவர்கள் பாதிக்கப்படுகின்றனர்,தூற்றப்படுகின்றனர். இதுநடைமுறையில் நாம் கண்ட உண்மை.இங்கு பொறுப்புணர்வு பெரும்பங்கு வகிக்கின்றது.பொறுப்பை ஏற்காமல் சூழ்நிலைமீது பழிபோடுபவர்களும் அடுத்தவர்கள்மீது குறைசொல்பவர்களும் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கின்றனர் என்பதை மறந்து விடுகின்றனர்.பொறுப்பை உணராமல் அடுத்தவர்மீது குறைசொல்லும்போது உங்களைச் சுற்றி உள்ளவர்கள் அகன்று விடுகின்றனர். காரணம் அவர்கள் மீதும் நீங்கள் ஒருநாள் பழிபோட நேரிடுமல்லவா.உங்களது இலட்சி யத்தை நிறைவேற்ற நீங்கள் விரும்பினால் அதற்கான தகுதிகளை வளர்த்துக் கொள்கிற பொறுப்பினை நீங்கள் கட்டாயம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.அப்போதுதான் நீங்கள் விரும்பியதைச் சாதிக்கமுடியும்.

பொறுப்புணர்வு இல்லாமல் விதைக்கின்ற காலத்தில் ஊர்சுற்றிவிட்டு அறுவடை காலத்தில் வயலுக்கு அரிவாள் எடுத்துவந்தால் அறுவடை செய்ய இயலுமா?பொறுப்பினை உணர்ந்தவர்கள்.தவறுகள் செய்யத் தயங்குவர். செப்பனிட்டப்பாதையில் தவறுகள் நிகழ்வதில்லை. பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுங்கள்! போற்றப்படுவீர்கள்!

## உழைப்பே நம்மை உயர்த்த வல்லது!

ஒரு எஜமானன் தனது வேலையாட்கள் மூன்று பேரை அழைத்தான்.அவனவனுடைய திறமைக்குத் தக்கதாக ஒருவனிடத்தில் 5 பொற்காசுகளும்,இன்னொருவனிடத்தில் இரண்டு பொற்காசுகளும் மற்றொருவனிடத்தில் ஒரு பொற்காசும் கொடுத்துவிட்டு வெளியூருக்குப் போய்விட்டான்.ஐந்து பொற்காசுகள் வாங்கினவன் அவைகளைக் கொண்டு வியாபாரம் செய்து மேலும் ஐந்துகாசுகள் சம்பாதித்து வைத்திருந்தான்.இரண்டு பொற்காசுகள் வாங்கியவனும் இன்னும் இரண்டு காசுகள் சம்பாதித்திருந்தான்.ஒரு பொற்காசு வாங்கியவனோ அதை நிலத்தைத் தோண்டி புதைத்து வைத்திருந்தான்.வெகு காலமான பின்பு அந்த எஜமான் திரும்பவந்து அவர்களிடத்தில் கணக்கு கேட்டான். 5 பொற்காசுகள் வாங்கியவன் மேலும் 5 பொற்காசுகளைக் காட்டினான்.2 பொற்காசுகள் வாங்கியவனும் மேலும் 2 பொற்காசுகளைக் காட்டினான்.ஒரு பொற்காசு வாங்கியவனோ ...ஐயா நான் பயந்துபோய் பொற்காசினை நிலத்தில் பத்திரமாக புதைத்து வைத்துள்ளேன் என்றான்.

நீதி: பயமும், சோம்பேறித் தனமும்தான் அவனை முட்டாளாக்கியது.உழைப்பே நம்மை உயர்த்தக்கூடியது

## இவை தெரியுமா ?

1. இறந்தவர்ளின் செவிப்பறையை எடுத்து காது கேட்காதவர்களுக்குப் பொருத்தி வெற்றி பெற்றிருக்கிறார்கள் ஜெர்மனியில் மருத்துவ நிபுணர்கள்.
2. கருப்பையில் உருவாகும்போது குழந்தையின் இதயம்தான் முதலில் வளர்கிறது.
3. மாரடைப்பால் நின்றுபோன இதயத்தை மீண்டும் இயக்க உதவும் கருவி மார்க்விட் ரெஸ்பாண்டர்.
4. ஒரே ஒரு முறை மட்டும் மருத்துவர்கள் பயன்படுத்தும் ஊசிக்கு சோலோ ஷாட் என்று பெயர்.
5. மனிதனின் கண்கள் 17 ஆயிரம் வகையான நிறங்களை பிரித்துணர முடியும்.
6. குழந்தை பிறந்து நான்கு மாதங்களுக்குப்பிறகுதான் கண்ணீர் உற்பத்தி செய்யும் லாக்கிரீமல் சுரப்பி வேலை செய்யத் துவங்குகிறது.எனவேதான் பிறந்த குழந்தை அழும்போது கண்ணீர் வருவதில்லை
7. அஜந்தாகுகை மஹாராஷ்ட்ரா மாநிலத்தில் உள்ளது
8. இந்தியாவில் உள்ள நதிகளின்பெயர்கள்யாவும் பெண்ணின் பெயர்கள் பிரம்மபுத்திரா,ஒன்றுதவிர
9. ஆசிய விளையாட்டுப்போட்டி முதன்முதலில் நடைபெற்ற இடம் புதுடெல்லி 1951




**காக்டெயில் புதிர்விடை :1.** இரண்டு தீக்குச்சிகளை மட்டும் நகர்த்தியதில்செர்ரி பழம் வெளியே வந்து கிண்ணம் கவிழ்ந்து விட்டது. ஆனால் கோப்பை வடிவம் மாறவில்லை.

**கணக்குப்புதிர்விடை : 2.**

$$9 \times 9 = 81$$
$$9 + 9 = 18$$
$$9 \div 9 = 1$$
$$100$$

**கணக்குப்புதிர்விடை : 3.** 11/2 இந்த இரண்டையும் கூட்டுங்கள். பெருக்கியும் பாருங்கள். விடை 41/2 தான் வரும். இது போல ஆயிரக்கணக்கான ஜோடிகள் சொல்லமுடியும்.

# மணமகன் / மணமகள் தேவை

**முக்கிய குறிப்பு :** எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

| பெயர்<br>நட்சத்திரம் | பிறந்த தேதி<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| B 1/7 செல்வி **கா. ஸ்ரீபிரியா**<br>பூரட்டாதி<br>வில்வராய<br>பூர்வீகம் : நெய்வாசல் (காட்டுமன்னார்கோவில்)<br>விருப்பம் : நல்ல குணமுள்ள நல்ல பணியில் உள்ள வரன் | 27.03.98<br>166 cm | B.Sc.<br>(Mathematics) | | திருமதி. M. நிர்மலா கார்த்திகேயன்,<br>6/70, மேலத் தெரு,<br>திருக்கடையூர்.<br>Cell: 94429 02828, 80985 20359 |
| B 2/7 செல்வி **இரா. ஜோதி**<br>மிருகசீரிடம் 3ம் பாதம்<br>காருட<br>பூர்வீகம் : குறிச்சி (சீர்காழி Tk.)<br>விருப்பம் : அரசு/வங்கி/ I.T துறையில் சென்னை, பெங்களூரில் பணிபுரியும் வரன். | 01.10.99<br>165cm | B.A., MBA | | திரு. B. இராமலிங்கம்<br>79, விஸ்வநாதன் நகர்,<br>காட்டுமன்னார்கோவில் PO & Tk<br>கடலூர் மாவட்டம் – 608 301.<br>Cell: 73394 08153, 87782 26003 |
| B 3/7 செல்வி **T. Subhashini**<br>Swathi<br>Meenavaraya<br>பூர்வீகம் : திருவாரூர்<br>விருப்பம் : சென்னையில் உள்ள வரன் | 9.4.2001<br>5' - 5" | B.E.<br>(ECE) | | திரு. S. Thiyagarajan,<br>55, Dr. Koushik Enclave,<br>Nava Shakthi Nagar, Meppur,<br>Chennai - 600 123.<br>Cell : 80560 59794 |
| B 4/7 செல்வி **கவுஸல்யா சங்கரநாராயணன்**<br>மிருகசீரிடம் 4ம் பாதம்<br>வஞ்சிரமுட<br>பூர்வீகம் : சிதம்பரம்<br>விருப்பம் : அமெரிக்காவில் H1Bயுடன் வேலை செய்யும் MS படித்த or Ph.D படிக்கும் வரன் | 30.04.98 | அமெரிக்காவில்<br>M.S., | | திரு. R. சங்கரநாராயணன்,<br>D4202, Mandarina Apt.,<br>7, Lock Street, Kotturpuram,<br>Chennai - 600 085.<br>Cell : 94451 46979 (Wi/fi Indian Number)<br>968–95827225 |
| B 5/7 செல்வி **M. ஹரிணி**<br>உத்திரட்டாதி<br>விளந்துட<br>பூர்வீகம் : கொத்தங்குடி<br>விருப்பம் : இரண்டில் ராகு அல்லது கேது அமையப்பெற்ற வரன் | 28.11.98<br>5' - 2" | B.E. (CSE) | Associate Consultant<br>Accenture, Bangalore<br>Rs. 18 Lakhs P/A | திரு. K. முரளி,<br>52, இந்திரா நகர், 6வது தெரு,<br>மெடிக்கல் காலேஜ் ரோடு,<br>தஞ்சாவூர் – 613 007.<br>Cell: 95973 22061, 94431 24261 |
| B 6/7 செல்வி **R. பானுபிரியா**<br>கேட்டை 3ஆம் பாதம்<br>எரவுட<br>பூர்வீகம் : பெண்ணாடம் (முல்லையூர்) | 21.11.98<br>165cm | B.E.<br>(ECE) | Senior Software<br>Engineer,<br>Freshworks,<br>Chennai | திரு. T. Ramesh,<br>11, SNR Flats,<br>Kodambakkam, Chennai - 600 024.<br>Cell: 94445 56972, 90801 87596 |
| B 7/7 செல்வி **P. தேவதர்ஷினி**<br>விசாகம் 3ம் பாதம்<br>செஞ்சலுட<br>பூர்வீகம் : திருவிடைமருதூர் | 19.7.2002<br>175 cm | B.E. (ECE) | ZOHO Company,<br>Chennai | திரு. R. பொன்னரசன்,<br>90/A, தெற்கு வீதி, திருவிடைமருதூர்,<br>தஞ்சாவூர் மாவட்டம் – 612 104.<br>Cell : 88380 01039,<br>94428 61136 (W) |
| B 8/7 செல்வி **V. சண்முகவள்ளி**<br>ரேவதி<br>நெடுவாலுட<br>பூர்வீகம் : K.ஆடுர் | 17.11.2002<br>5' | BCA., MCA., | TUV India Pvt. Ltd.<br>(Nord Group,<br>Chennai) | திரு. S. வெங்கடாஜலம் பிள்ளை,<br>84, நடேச நகர்,<br>பரமேஸ்வர நல்லூர்,<br>சிதம்பரம் தாலுகா<br>Cell : 94428 68040, 91508 90151 |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 9/7** செல்வி **R. சுவாதிகா**<br>மூலம் – 3ம் பாதம்<br>சென்னிமலையான்<br>பூர்வீகம் : கல்லக்குடி – டால்மியாபுரம்<br>விருப்பம் : பட்டம் பயின்று நல்ல வேலையில் உள்ள மணமகன் | 17.3.2001<br>150 cm | B.E., (EEE) | | திரு. S. இராஜாராமன்,<br>5, கர்ணம் தெரு,<br>கல்லக்குடி – டால்மியாபுரம்,<br>லால்குடி Tk.,<br>திருச்சி Dt. – 621 652.<br>Cell : **99430 39473, 97877 83735** |
| **B 10/7** செல்வி **C. ரம்யா**<br>விசாகம் 1 பாதம்<br>தென்னவராய<br>பூர்வீகம் : திட்டக்குடி<br>விருப்பம் : நல்ல பணியில் உள்ள வரன் | 11.7.2000<br>163cm | B.E. | HCL | திரு. சொக்கலிங்கம்,<br>4/20, வேம்புலி அம்மன் கோவில் தெரு,<br>வண்டலூர்,<br>சென்னை – 600 048.<br>Cell: **97916 29435** |
| **B 11/7** செல்வி **S. ஜோஷிகா**<br>பூராடம்<br>குமரக்குட<br>பூர்வீகம் : சென்னை<br>விருப்பம் : அரசு வேலை அல்லது தனியார் நிறுவனத்தில் நல்ல வேலை | 27.2.2003 | B.E.<br>(ECE) | தனியார்<br>நிறுவனத்தில்<br>HR | திரு. S. சுந்தர்ராஜன்,<br>22, வைத்தியராமன் தெரு,<br>கிருஷ்ணா நிவாஸ் அபார்ட்மெண்ட்<br>D பிளாக், கிரௌண்ட் ப்ளோர் (18),<br>T. நகர், சென்னை – 600 017.<br>Cell: **90948 99755** |
| **B 12/7** செல்வி **K. சரண்யா**<br>உத்திரட்டாதி<br>தொழுவுட | 25.5.2003<br>161cm | B.E.<br>(EEE) | Control Soft<br>Engineering<br>Pvt. Ltd.,<br>Chennai<br>Rs. 35,000/PM | திரு. G. குமரேசன்,<br>14B/3, North Street, Seppakkam,<br>Veppur Taluk,<br>Cuddalore - 606 302.<br>Cell : **63824 73531, 94448 41014, 91591 97980** |
| **B 13/7** செல்வி **M. தனலட்சுமி**<br>உத்திரம் 4ம் பாதம்<br>பழுவுட<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : சமபடிப்பு | 7.5.98<br>154 cm | B.Tech. (CS) | Software<br>Professional,<br>EPSILON<br>Bangalore,<br>Rs. 12 Lakhs / PA | திரு. K. மணிகண்டன்,<br>G1, Ashok Manor, Ruby Builders,<br>5/2, Kalamegam Street,<br>East Tambaram, Chennai - 600 059.<br>Cell : **79041 97546, 99416 20355** |
| **B 14/7** செல்வி **கிருத்திகா ரவிசங்கர்**<br>சதயம்<br>பூனுட<br>பூர்வீகம் : ஊர்குடி, மயிலாடுதுறை | 16.5.2001<br>174 cm | B.Arch.,<br>M.Arch., | Murali Architects,<br>Chennai | திரு. ரவிசங்கர்<br>A3, RC Residency,<br>A6, Thiruvengadam Nagar,<br>Ambattur, Chennai - 600 053.<br>Cell : **94872 38840, 0096895348741** (Whatsapp) |
| **B 15/7** செல்வி **ல. தீபஸ்ரீ**<br>பூரட்டாதி 4ம் பாதம்<br>முனதரிய<br>பூர்வீகம் : கண்ணங்குடி (சிதம்பரம்)<br>விருப்பம் : பணியில் உள்ள வரன். | 8.5.2002<br>155 cm | M.Sc.,<br>B.Ed.,<br>(Physics) | தனியார் பள்ளி<br>ஆசிரியை | திரு. V. லட்சுமி நாராயணன்,<br>12, ராஜேஸ்வரி நகர்,<br>சிதம்பரம் – 608 001.<br>Cell : **98650 87346** |



| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 1/7** செல்வன் **ர. ராஜா மணிகண்டன்**<br>திருவாதிரை<br>கொழுமுடையான்<br>பூர்வீகம் : காட்டுமன்னார்கோயில்<br>விருப்பம் : படித்த அழகான, வேலைக்கு செல்லும், சுத்த சைவ பெண் | **17.06.96**<br>165 cm | B.E,<br>(Mechanical<br>Engineering) | Manager - Private<br>Company, Chennai<br>Rs. 7.5 Lakhs/PA | Mrs. Revathi Ravichandran,<br>F2, Sri Andal's Lilly Apts.,<br>111, Priyadharshini Nagar,<br>TNHB Colony Road,<br>Sithalapakkam, Chennai - 600 126.<br>Cell : 94456 38756 |
| **G 2/7** செல்வன் **Gangadharan Sivakumar**<br>Kettai<br>Veludayan<br>பூர்வீகம் : Virudhachalam | **10.11.99**<br>168 cm | B.Tech., | Tata Consultancy<br>Service, Chennai<br>Rs. 10 Lakhs/PA | திரு. V. Sivakumar,<br>Plot No. 50, Venba Avenue,<br>2nd Street, Sithalapakkam,<br>Chennai - 600 126.<br>Cell : **94445 08005, 94445 08001**<br>E-mail : sivasivasiva199@gmail.com |
| **G 3/7** செல்வன் **K. மணிவேல்**<br>கேட்டை<br>முதனுட<br>பூர்வீகம் : மதுராந்தகநல்லூர் (சிதம்பரம்)<br>விருப்பம் : படித்த பணியில் உள்ள வரன்/<br>பணிக்கு செல்ல விருப்பமுள்ள வரன் | **15.02.93**<br>6' - 0" | B.E.,<br>(EEE), | Asst.<br>Commercial Tax<br>Rs 50,000/PM | திரு. T. கேசவன்,<br>5/234-2, நியூ அம்பேத்கர் நகர்,<br>ஜாகீர்ரெட்டிப்பட்டி,<br>சேலம் – **636 302.**<br>Cell : **94422 59692** |
| **G 4/7** செல்வன் **S.R. பாலாஜி**<br>ரோகிணி<br>முதனுட<br>பூர்வீகம் : கோட்டவம், காட்டுமன்னார்குடி<br>விருப்பம் : சமபடிப்பு | **30.01.96**<br>180 cm | B.Tech.,<br>MBA., | Analyst -<br>Accenture, Chennai<br>Rs. 9 Lakhs/PA | திரு. S. ராமதாஸ்,<br>**17**, காமராஜ் வீதி,<br>தாகூர் நகர், இலாசுப்பேட்டை,<br>புதுச்சேரி – **605 008.**<br>Cell : 94425 80571, 86108 73478 |
| **G 5/7** செல்வன் **S. அருண்குமார்**<br>உத்திராடம்<br>சாத்தனுட<br>பூர்வீகம் : திருவிசநல்லூர்<br>விருப்பம் : இணையான படிப்பு | **27.07.99**<br>5' - 6" | B.E.<br>(CSE) | Own Startup<br>Rs. 30,000 to<br>50,000 PM | திரு. R. சரவணன்,<br>1E, ஸ்ரீ மகாலிங்கம் நகர்,<br>திருவிடைமருதூர் – **612 104.**<br>Cell : **98947 51355, 73737 32315** |
| **G 6/7** செல்வன் **ஸ்ரீ அஸ்வத்**<br>உத்திரட்டாதி<br>முதனுட<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : ராகு, கேது உள்ளது / தகுதியான வரன் | **11.11.97**<br>178 cm | B.E. (EEE) | Lead Test Engineer<br>QBurst Technologies<br>Chennai<br>Rs. 12,00,000/PA | திரு. கோ. குஞ்சிதபாதம்,<br>**20/2**, மேற்கு ரத வீதி,<br>பெண்ணாடம் – **606 105.**<br>Cell : **88705 55569** (Whatsapp)<br>**98423 57920** |
| **G 7/7** செல்வன் **J. முரளிதரன்**<br>பரணி<br>மழுவதரிய<br>பூர்வீகம் : சிதம்பரம் | **26.06.92**<br>173.5 cm | B.E.<br>(ECE) | Cloud Specialist in<br>Spacetech, Chennai<br>Rs. 5 Lakhs/PA | திரு. R. ஜவகர்,<br>102, முதல் மாடி,<br>1A, பெரியாழ்வார் தெரு,<br>சானிடோரியம், கிழக்கு தாம்பரம்,<br>சென்னை – **600 059.**<br>Cell : **94429 36710, 88257 11845** |
| **G 8/7** செல்வன் **யோகேஸ்வரன்**<br>ஆயில்யம்<br>வேளா<br>பூர்வீகம் : சாத்துக்குடல்<br>விருப்பம் : நல்ல குணமுள்ள பணியில் உள்ள வரன் | **28.06.98**<br>160 cm | MBA,<br>Shipping &<br>Logistics | Sea Horse Ship<br>Agencies<br>(P) Ltd., Chennai<br>Rs. 7 Lakhs/PA | திரு. சி. ரவி,<br>**115**, வடக்கு தெரு,<br>சாத்துக்குடல் மேல்பாதி,<br>விருத்தாசலம் வட்டம்,<br>கடலூர் மாவட்டம் – **606 110.**<br>Cell : **99656 35742, 98420 22958** |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 9/7** செல்வன் **K. வெங்கடஷ்**<br>அவிட்டம் பாதம் 1<br>செஞ்சலுட<br>பூர்வீகம் : மாப்படுகை (மயிலாடுதுறை)<br>விருப்பம் : நல்ல பணியில் உள்ள வரன்,<br>லக்னத்தில் இராகு, கேது உள்ள வரன் | 11.04.99<br>180 cm | B.E. (Civil),<br>M.E.<br>(Enviromental | SL Lumax Limited<br>Chennai<br>Rs. 6,50,000/PA<br>Engineer) | திரு. M. Kabilan,<br>7, அண்ணாமலை நகர்,<br>சித்தர்காடு, பம்பு ஹவுஸ்,<br>மயிலாடுதுறை – 609 003.<br>Cell : **94865 68597, 94882 14276** |
| **G 10/7** செல்வன் **R. குகேஷ்**<br>புனர்பூசம்<br>பல்லவராய<br>பூர்வீகம் : கீழையூர், மயிலாடுதுறை | 19.08.98<br>183 cm | B.E (CSE) | Surboard Payments<br>Chennai<br>Rs. 30 LPA | திரு. R.A. Kannahi,<br>175-1, Second Street,<br>Valampuri Nagar, Mayiladuthurai<br>Cell : **96551 72069, 75984 54775** |
| **G 11/7** செல்வன் **V. ஆதித்யன்**<br>பரணி<br>கொத்தனுட<br>பூர்வீகம் : கோழியூர், திட்டக்குடி<br>விருப்பம் : நல்ல பண்புள்ள, நல்ல பணியில் உள்ள வரன். | 19.12.99<br>183 cm | M.Tech (Civil) | Technical Executive,<br>Saasify Solutions<br>Pvt. Ltd., Chennai<br>Rs. 5.5 L/PA | திரு. சா. வைத்தியநாதன்,<br>பிளாட் எண். 22, கல்கி தெரு,<br>Guru Enclave Apts.,<br>புது பெருங்களத்தூர்,<br>சென்னை – 600 063.<br>Cell : **99627 00172, 87544 25941, 99654 33520**<br>மின் அஞ்சல் முகவரி : vaithikts@yahoo.com |
| **G 12/7** செல்வன் **அ. சரண்ராஜ்**<br>பூசம் 3ம் பாதம்<br>தொளாறுட<br>பூர்வீகம் : அரியலூர் | 05.09.91<br>168 cm | B.E.<br>(Mechanical<br>Engineer) | Emudhra Ltd.,<br>Bangalore<br>Rs. 15 L/PA | திரு. ச. அன்பரசன்,<br>11-B, பெரியார் நகர், 2வது தெரு,<br>அரியலூர் – 621 704.<br>Cell : **97500 82213, 97502 79162, 98402 83867** |
| **G 13/7** செல்வன் **R. Bhuvan Ram**<br>Uthiradam<br>Velarudai<br>பூர்வீகம் : Vridhachalam<br>விருப்பம் : Looking for working Girl | 30.3.2000<br>175 cm | B.Tech (ECE).<br>M.Sc. (AI & ML) | Business Analyst,<br>Pharmeasy<br>Bangalore<br>Rs. 15.2 lks p.a. | திரு. R. Ravichandran,<br>D1, Power Grid Township,<br>Thondamanatham Main Road,<br>Ramanathapuram,<br>Puducherry - 605 502.<br>Cell : **94441 54516, 94443 94641** |
| **G 14/7** செல்வன் **Karthik Raja**<br>மூலம் 3ம் பாதம்<br>கனகராய<br>பூர்வீகம் : பிள்ளையார் தாங்கல்<br>விருப்பம் : Working Woman | 5.8.98<br>5' - 7" | M.Com., | Sr. Associate,<br>Dexian India<br>Technologies,<br>Chennai<br>Rs. 7,20,000 PA | திரு. Balasundaram,<br>125, Vinayagar Street,<br>M.G.R. Nagar, Mudaliarpet,<br>Pondicherry - 605 004.<br>Cell : **94870 61366** |
| **G 15/7** செல்வன் **S. பால அவிநாஷ்**<br>உத்திரட்டாதி<br>பேருட<br>பூர்வீகம் : திருவிடைகழி<br>விருப்பம் : ராகு, கேது தோஷம் உள்ள பெண் | 13.06.93<br>5' - 5" | B.E.<br>Civil | Own Business<br>KSK Constructions<br>Sai Cabs | திரு. K. செல்வகுமார்,<br>27, சிவன் சன்னதி தெரு,<br>பொறையார் – 609 307,<br>மயிலாடுதுறை மாவட்டம்.<br>Cell : **80565 23136, 94435 00098** |
| **G 16/7** செல்வன் **S. மணிகண்டன்**<br>அஸ்வினி<br>குழுமுட | 17.04.96 | D.C. Tech /<br>B.Tech | QA & QC Engineer<br>Morhgah Advanced<br>Materials,<br>Abudhabi<br>Rs. 120000/PM | திரு. M . செல்வராஜ் பிள்ளை,<br>கோமாளூர் & POST,<br>ரிஷிவந்தியம் VIA,<br>திருக்கோவிலூர் TK.<br>Cell : **99432 69310** |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| G 17/7 செல்வன் **R. அபிநாஷ்**<br>ஆயில்யம் 4ம் பாதம்<br>பெண்ணாமுட<br>பூர்வீகம் : தெம்மூர் | 20.10.92<br>174 cm | B.Sc.,<br>Industrial<br>Chemistry | Store Executive @<br>Chennai Radha<br>Engieering Works<br>Pvt. Ltd.,<br>Rs. 35,000/PM<br>(Food & Accommodation Free) | திரு. V. ராஜேந்திரன் பிள்ளை,<br>வடக்கு தெரு, தெம்மூர் & அஞ்சல்,<br>காட்டுமன்னார்கோவில் வட்டம்,<br>கடலூர் மாவட்டம் – 608 302.<br>Cell : 97511 15732, 95975 04600<br>95973 49968, 95669 78512 (W) |
| G 18/7 செல்வன் **K. தீபக் குமார்**<br>விசாகம் 1ம் பாதம்<br>பங்கலதிதி<br>பூர்வீகம் : மிராலூர் | 14.4.98<br>5' - 7" | 10th Passed<br>ITI Electrical | KFG Maintenace<br>Executor,<br>Puducherry<br>Rs. 27,000/PM | திரு. R. கல்யாணசுந்தரம்,<br>58, ஔவையார் சாலை,<br>இரண்டாவது குறுக்குத் தெரு,<br>மின் நகர், சிதம்பரம் – 608 001.<br>Cell : 96292 49085, 97903 76958 |
| G 19/7 செல்வன் **R. பரத்ராஜ்**<br>உத்திராடம்<br>வில்வராய<br>பூர்வீகம் : வண்ணான்குடிகாடு (விருத்தாசலம்)<br>விருப்பம் : நல்ல குணமுள்ள பணியில் உள்ள வரன்<br>செவ்வாய் மற்றும் ராகு கேது தோஷம் உள்ளது | 21.12.98<br>165 cm | B.Com. (BM),<br>MBA<br>(Finance) | Process Associate<br>Genpact Private<br>Limited, Porur<br>Chennai | திரு. S. மைதிலி,<br>137, சுப்பரமணியன் தெரு,<br>குறிஞ்சி நகர்,<br>வெளிசெம்மண்டலம்,<br>கடலூர் – 1.<br>Cell : 94435 39979, 96009 88737 |
| G 20/7 செல்வன் **சி. சிவானந்தம்**<br>உத்திரம் 4ம் பாதம்<br>முள்ளுட<br>பூர்வீகம் : வரிச்சிக்குடி, காரைக்கால்<br>விருப்பம் : பணியில் உள்ள வரன் | 21.6.99<br>172 cm | B.Tech (ECE)<br>M.Tech (NIS) | Network Engineer<br>(RAN) LMJ<br>Innovations Amertum<br>Bangalore | திரு. குமார் (எ) சிவசிதம்பரம்,<br>1, பங்களா தெரு,<br>தேவானூர் சாலை, வரிச்சிக்குடி,<br>காரைக்கால் Dt.,<br>Cell : 97873 10010, 91509 16765 |


# வேலை வாய்ப்பு

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுகா, கொள்ளிடம் ஒன்றியத்தில் அமைந்துள்ள அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளியில் ஏற்பட்டுள்ள நிரந்தர முதுகலை ஆசிரியர் காலிப் பணியிடத்திற்கு (B.A., M.A., B.Ed. தமிழ்) தகுதிவாய்ந்த ஆண் நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

தொடர்பு முகவரி:

**R. RAMACHANDRAN**, **Asst. Head Master**
311 A/2, Main Road, Valampuri Nagar,
Poombukar Road (opp. to Employment office)
Mayiladuthurai - 609 001
**Cell: 8825543717**

## ஸ்ரீ பக்த கோராகும்பார்

– திருமதி. லலிதா வேலாயுதம்

இந்தியாவின் மராத்திய மாநிலத்தில் ஸ்ரீமந் நாராயணன் கோயில் கொண்டுள்ள பண்டரிபுரம் எனும் தெய்வீக க்ஷேத்திரத்தின் அருகில் அமைந்துள்ள தேராதோடகி எனும் அழகான கிராமத்தில், 1267ல் மண்ணை நம்பி வாழும் குயவர் குலத்தில், அன்னையா என்பவருக்கும், சத்தியவதி எனும் மங்கை நல்லாளுக்கும் பண்டரிநாதனின் பேரருளால் இரு புத்திரர்கள் பிறந்தனர். மூத்த மகனுக்கு கோரா என்றும், இளையவனுக்கு ஏற்றன்னா என்றும் நாமகரணம் செய்தனர். அன்னைய்யா புதல்வர்களைப் பயில்வதற்காக விசுவபோதகர் எனும் பரமஞானியிடம் அனுப்பினார். அவரும் குழந்தைகளுக்கு 'ஓம் நமோ நாராயணாய' எனும் அஷ்டாக்ஷர மந்திரத்தையும், அதன் மகிமையையும் எடுத்துரைத்தார். சிறுவர்களும் சிறு வயதிலேயே ஆத்மஞானத்தைப் பெற்றனர்.

மூத்தவன் கோராவிற்கு, பத்மாவதி எனும் மங்கைநல்லாளை மணம் முடித்தனர். இருவரும் கண்ணனும், ராதையும் போல் இல்லறத்தில் இணைந்திருந்தனர். கோரா பண்டரிநாதனின் நாம சங்கீர்த்தனத்திலும், அதிதிகளை ஆதரிப்பதிலும் அபரிமிதமான பக்தி செலுத்தி வந்தார். தம்பி ஏற்றன்னாவும், தர்மபத்தினி பத்மாவதியும் எல்லாவற்றிலும் அவருக்குத் துணையாக இருந்தனர். பெற்றோர் ஒருவர் பின் ஒருவராக பரமபதம் எய்திட, சகோதரர்கள் மிக்க பொறுப்புடன் தொழிலைக் கவனித்து வந்தனர். ஒருமுறை மண்பாண்டங்களை, ஏற்றன்னா சூளையில் அடுக்கி, நெருப்பை மூட்டினார். ஒரு பானையில் பூனைக்குட்டிகள் உறங்கிக் கொண்டிருக்க, அது தெரியாத ஏற்றன்னா நெருப்பு மூட்ட, பூனைக்குட்டிகள் கதறித் துடித்து தீயில் கருகின. அதன் அலறல் சப்தம் கேட்டு, தனது தவற்றினை உணர்ந்த ஏற்றன்னா, பரிகாரமாக அந்நெருப்பில் விழத் துணிந்தார். சப்தம் கேட்டு வெளியே வந்த கோராவும், அவரது மனைவியும் அவரைத் தடுத்து, தெரியாமல் செய்த தவற்றினுக்கு பிராயச்சித்தம் நிச்சயம் உண்டு என்று அவரைத் தடுத்து, காசி சென்று கங்கையில் நீராடி, தீர்த்த யாத்திரை சென்று வருமாறு பணிக்க அவரும் யாத்திரைக்குக் கிளம்பினார்.

ஏற்றன்னாவைப் பிரிந்து மிகவும் கவலைகொண்டனர். ''உலகில் மனிதன் பற்றும், பாவமும் கொள்வதால் தான், மனம் மாயையில் உழன்று வருந்துகிறது'' என்று உணர்ந்த அவர் பற்றற்றநிலையில் வாழ்வதற்கு தம்மைப் பக்குவப்படுத்திக் கொண்டார். பண்டரிநாதன் அவரின் பற்றற்ற நிலையைச் சோதிக்க, ஆண் குழந்தை ஒன்றை அவர்களுக்கு அருளினான். பத்மாவதி மிகவும் மகிழ்ச்சி அடைய, கோராவோ பற்றற்ற நிலையிலேயே இருக்க, அந்நிலை அவளுக்கு வேதனை கொடுத்தது. பானைச் செய்ய மண்ணைக் குழைக்கும் போதும், காலால் பக்குவப்படுத்தும் போதும் பாண்டுரங்கனே சிந்தனையில் இருந்தான். அவரது நாக்கு பாண்டுரங்க நாமத்திலேயே லயித்து இருந்தது. ஒரு நாள் கோராகும்பர் மண்ணைக் காலால் பக்குவப்படுத்தும் போது, தனை மறந்து கைகளால் தாளம் போட்ட வண்ணம் கீர்த்தனையைப் பாடிக் கொண்டிருக்க, குழந்தை அந்த மண்ணில் இறங்கி அவர் அருகில் வந்துவிட, பாண்டுரங்கள் ருக்மணி தேவியிடம் சுட்டிக்காட்டி, குழந்தையை மீட்டு கொண்டு வந்து, அதற்குப் பதிலாக ஒரு மாயக் குழந்தையை உருவாக்கி, அவரது கால்களிலே சிக்கி மண்ணோடு மண்ணாக போகச் செய்தார்.

வீட்டினுள்ளிருந்து பத்மாவதி வெளியே வந்து, நடந்து கொண்டிருப்பதைக் கண்டு அலறி, மயக்கமடைந்தாள். அவளின் கூக்குரல் கேட்டு நினைவு பெற்ற கோரா, ஓடி வந்து அவளின் மயக்கம் தெளிவிக்க, அவள் அவருடன் கோபத்துடன் சண்டையிட, அவளை அடிப்பதற்காக கழியை எடுக்க, அவள் ''உமது பாண்டுரங்கன் மீது ஆணை! என்னைத் தொடாதீர்கள்'' என ஆவேசத்தோடு கத்தினாள். அன்று முதல் அவரது வீடு இரு பிரிவாக, அவரே சமைத்து, எல்லா வேலைகளையும் அவரே தனியாக கவனிக்க தொடங்கினார். அது பொறுக்காத பத்மாவதி, அவளின் பெற்றோரிடம் சென்று, தங்கையை இரண்டாம்தாரமாக மணமுடிக்க வேண்ட, பெற்றோரும் கோராவின் நற்குணத்திற்காக மணமுடித்து வைத்தனர். மாமனார், ''நீங்கள் இளையவளையும், மூத்தவளை நடத்துவது போல் நடத்துவீராக!'' என்று விண்ணப்பிக்க, அவரும் இளையவளையும் தொடமாட்டேன் என்று தமக்குள் சபதம் பூண்டு, முன்பு மாதிரியே நடந்து வந்தார்.

சகோதரிகள் இருவரும் ஒரு நாள் அவரது மனதை மாற்றும் எண்ணத்தில், அவர் உறங்கும் போது அவரது அருகில் அமர்ந்து இரு கைகளையும் தங்களது கைகளில் பிடித்துக் கொண்டிருக்க, திடுக்கிட்டு எழுந்த அவர், எனது சபதம் பாழ்பட்டு விட்டது என்று கூறி, தனது இரு கைகளையும் வெட்டிக்கொண்டு மயக்கமானார். மனைவிகள் இருவரும் அதைக் கண்டு

மயக்கமுற்றனர். அதற்கு மேல் பக்தனைச் சோதிக்க விரும்பாத இறைவன், ஏற்றன்னாவாக அங்கு வந்து, பச்சிலை மூலிகைகளை வெட்டுண்ட கரங்களில் கட்ட, ரத்தம் பெருகுவது நின்றது. மனைவிகளும் நல்ல சமயத்தில் ஏற்றன்னா வந்ததில் மகிழ்ச்சி அடைந்தனர். பாண்டுரங்கன் கோராவின் குடும்பத்தில் ஒருவரானார். விண்விமானத்துடன் கூடிய ஆனந்த நிலையத்தை நீத்து, இப்பக்தனின் கூரை வீட்டில் நித்தியவாசம் புரியலானான். கோராகும்பர் ஏற்றன்னாவை 'கண்ணா' என்று செல்லமாக விளிக்க, கண்ணனோ, கோராவை 'அண்ணா' என விளித்தான். ஏற்றன்னாவாக பகவான் பக்தனுக்கு பணிவிடைகள் செய்வதும், உணவு சமைப்பதும், ஊட்டி விடுவதும், துணிமணிகளைத் துவைப்பதும், மண்பாண்டங்களைச் செய்வதும், வண்டியில் ஏற்றி விற்று வருவதுமென அனைத்துப் பணிகளையும் செய்து வந்தான்.

பண்டரிபுரத்தில் பிரம்மோற்சவம் ஆரம்பமானது. கொடியேற்றத்தன்று நாமதேவர் சிஷ்யர்களுடன் சந்திரபாகா நதியில் நீராடி, நாமசங்கீர்த்தனம் ஒலிக்க கருவறைக்குள் நுழைந்தார். புறக்கண்ணால் பாண்டுரங்கனின் விக்ரகமிருக்க, அகக்கண்ணால் இறைவன் அங்கு இல்லை என்பதை உணர்ந்து, அவர் கோராகும்பரின் இல்லத்தில் ஏற்றன்னாவாக இருப்பது அறிந்து, லட்சக்கணக்கான பக்தர்கள் உற்சவத்துக்கு வரும்போது, நீ இங்கு இல்லாமல் இருப்பது முறையா ? என வினவினார். பாண்டுரங்கனோ, கோராகும்பரின் குடும்பத்தை அழைத்துக்கொண்டு, பண்டரிபுரம் வந்து நாமதேவர் முன் நிற்க, நாமதேவர் இருவரின் காலிலும் விழுந்து வணங்கினார். பதறிய கோராவை, நாமதேவர் சாந்தப்படுத்த, பகவான் கருவறைக்குள் சென்றுவிட்டார். பத்தினிகள் இருவரும் நாமதேவரிடம் எங்கள் குழந்தையை இறைவன் திருப்பித் தரக் கூடாதா ? என்று வேண்டவும் குழந்தை உயிருடன் வந்தது. கோவிலில் பக்தர்கள் தம்புரா இசைத்தும், ஜால்ரா தட்டியும் நாமசங்கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும் இருந்தனர்.

இதனைப் பார்த்துக் கொண்டிருந்த கோராகும்பரும் மெய்ம் மறந்து, தனது இரு கைகளையும் தலைக்கு உயரே உயர்த்தி, விட்டலரின் நாமாவளிகளைப் பாடிக்கொண்டே ஆடினார். அதனைக் கண்ணுற்ற மனைவிமார்கள் மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்றுவிட்டனர். அவர்களை இணைக்க நாமதேவர், கோராவிடம், 'நீங்கள் புதுப்பிறவி எடுத்து விட்டீர்! எந்த குழந்தைக்காக சபதம் போட்டீரோ, அக்குழந்தை உயிர் பெற்ற பின் சபதத்துக்கு பொருளே இல்லை. எந்த கைகளால் தொடமாட்டேன் என்றீரோ, அந்த கைகளும் இல்லை'' என்று கூறி அவரின் மனதை மாற்றி அனுப்பிவைத்தார். அது முதல் கோராகும்பரும் தனது இரு மனைவிகளுடனும்,மகனுடனும் விட்டலரின் பெருமைகளைப் பாடிப் பரவி வாழ்ந்து வரலானார்.

வாழ்க இறைபக்தி! ஜெய ஜெய விட்டல!!

---

## தலைவிதியை மாற்றிய அஞ்சல் அட்டை

தமிழகத்தின் கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டத்தில் உள்ள பூவிழுந்தநல்லூர், சென்னைக்கு குடிநீர் வழங்கும் வீராணம் ஏரிக்கு நீர் நிரப்பும் வடவாற்றின் கரையில் உள்ள ஓர் அழகிய சிற்றூராகும். இச்சிற்றூர் பச்சைப்பசேலென நெற்கதிர்கள் தலையசைத்து வரவேற்கும் வயல்களையும், மணம் பரப்பும் மல்லிகைத் தோட்டங்களும் நிறைந்து, மனதிற்கு மகிழ்ச்சி நல்கும் ஓர் நல்கிராமமாகும். இயற்கை வளம் மட்டுமன்றி, கிராமத்திற்கே பெருமை சேர்க்கும் தனிமனிதர்களின் சாதனைகளுக்கும் பெயர் பெற்றதாகும்.

பூவிழுந்தநல்லூருக்கும், அருகிலிருக்கும் கிராமங்களுக்கும் 'பொங்கல் விழா' என்பது மறக்க இயலாததாகும். CREW குழும சேர்மன் திரு. வெங்கடேசன் பிள்ளை அவர்கள் பொங்கல் விழாவினை விளையாட்டுப்போட்டி போன்ற பல போட்டிகளுடனும், அனைவருக்கும் பரிசுப் பொருட்கள் வழங்கியும், கிராமத்து மக்களுடன், கோலாகலமாக கொண்டாடுவது வழக்கமாகும். சமீபத்திய பொங்கல் விழாவில் அவர் பல குடும்பங்களுக்கும் அவர்களின் பொருளாதார நிலை உயர நிதி உதவி செய்வதாக அறிவித்தார். அதில் முக்கியமானது, பல வருடங்களுக்கு முன் அக்கிராமத்தின் தபால்காரராக பணிபுரிந்த காலஞ்சென்ற ராயர் என்பவரின் குடும்ப வாரிசுகளை அடையாளம் கண்டு, பொருள் உதவி அவரது குடும்பத்திற்கு கிடைக்க ஆவன செய்யுமாறு கூறினார். அவரைச் சுற்றியிருந்த உறவினர்களுக்கு, பல ஆண்டுகளுக்கு முன் பணிபுரிந்த ஒரு சாதாரண அரசு ஊழியருக்கு எதற்காக இந்த முக்கியத்துவம் என புரியவில்லை.

ஆனால், அவர் கொண்டு வந்த ஒரு செய்தி எங்ஙனம் ஒரு சிறுவனின் வாழ்வையே மாற்றியது

என்பதும், கார்குலமும், சமுதாயமும் பயனடைந்தது என்பதும் வியப்புற்குரியதாகும்.

சிறு வயதில் வீட்டை விட்டுச் சென்ற ஒரு சிறுவனை, பல இடங்களிலும் தேடிய பெற்றோரும், உற்றார் உறவினரும் தேடுதலைக் கைவிட்டு, ஆனால் நம்பிக்கையுடன் காத்திருந்தனர். ஒரு நாள் அச்சிறுவனின் தந்தை, கிராமத்து மணியார் திரு. சம்பந்தம் பிள்ளை அவர்களிடம், திரு. ராயர் அவர்கள் ஓர் அஞ்சல் அட்டையைக் கொடுத்துச் சென்றார். அதில், ''உங்கள் பையன் இங்கு இருக்கிறான்; நீங்கள் உடனே வந்து அழைத்துச் செல்லவும்'' என்றிருந்தது. அவரும், சுற்றத்தாரும், அக்கிராமமும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தந்தையும், தனயனும் மகிழ்ச்சியுடன் ஒன்று சேர்ந்து ஊர் திரும்பினர்.

அச்சிறுவன் பெரியவனாகி, படித்து உழைத்து முன்னேறி, முன்னோக்கு கண்ணோட்டம், விடாமுயற்சி, தயாள குணத்துடன் சமுதாயத்திற்கு உதவும் ஒரு மாமனிதராக, மற்றவர்களுக்கோர் எடுத்துக்காட்டாக வாழ்வில் ஓர் உன்னத நிலையை அடைந்தார். அவர் வேறு யாருமல்ல! நமக்கெல்லாம் நன்கு பரிச்சயமான CREWன் சேர்மனான உயர்திரு. வெங்கடேசன் பிள்ளைதான் அச்சிறுவன். அமரர் ராயர் அவர்கள், அந்த அஞ்சல் அட்டையை திரு. சம்பந்தம் பிள்ளையிடம் சேர்த்தமையால், ஒரு வள்ளல் உருவாக காரணமானார். கார்குல கர்ணன் திரு. வெங்கடேசன் பிள்ளை அவர்கள் பல்லாண்டு உடல்நலத்துடன் வாழ, அனைவர் சார்பிலும் இறைவனை இறைஞ்சும்,

வருணிகா ஆனந்தன் M.B.B.S.
வார்விக், U.K., 9443430811

பி.கு: எனது தாத்தா திரு. M. பாலகுரு அவர்களின் மூலம், நானறிந்த தகவலை தங்களிடம் பகிர்ந்துள்ளேன். நன்றி!

## கல்யாண வரம் அருளும் 27 கருட சேவை

பெருமாளை கருட சேவையில் தரிசிப்பது கோடானு கோடி நன்மை தரும் என்பது ஐதீகம். ஒரே நேரத்தில் 27 பெருமாள்களை கருட சேவையில் தரிசிப்பது எவ்வளவு புண்ணியம்? தஞ்சாவூரில் வைகாசி மாதத்தில் ஒரே நாளில் 27 கருட சேவையும், அங்கே நடக்கும் 18 நவநீத சேவையும் அபூர்வமானதாகும். பொதுவாக கருட சேவையின் போது பக்தர்களுக்கு நேரில் வந்து காட்சி தருவதாக ஐதீகம். 18 நாட்கள் நடந்த மகாபாரதப் போர் கருட வியூக யுத்தமாக நடந்தது. இது பாண்டவர்களுக்கு வெற்றியைத் தேடி தந்தது. இப்படி கருடாருட தரிசனத்துக்கு பல சிறப்புகள் உள்ளன.

முதன்முதலில் பெருமாள் கருடன் மீதேறி வந்து கஜேந்திரன் என்ற யானையை முதலை வாயிலிருந்து காப்பாற்றி கஜேந்திர மோட்சம் அடைந்தது தான் முதல் கருட சேவையாகும். தஞ்சாவூரில் 27 கருட சேவையின் போது ஹம்ஸ வாகனத்தில் திருமங்கை ஆழ்வார்தான் முதலில் வருவதை தொடர்ந்து பெருமாள்கள் வருவர். திருமங்கை ஆழ்வார் செய்த மங்களா சாஸனத்தினால் மகிழ்ந்த பெருமாள் வைகாசி திருவோணம் நட்சத்திரம் அன்று கருட வாகனத்தில் எழுந்தருளி அவருக்கு சேவை சாதித்ததை நினைவு கூறும் வகையில் இந்த கருட சேவை நடக்கிறது. கருட சேவையின் தத்துவம் தன்னை முழுமையாக சரணடைபவர்களை எத்தகைய ஆபத்திலிருந்தும் காப்பாற்றுவார் என்பதே ஆகும்.

இந்த விழா இந்த வருடம் ஜூன் 5ந் தேதி காலை 12 மணிக்கு மேல் தஞ்சாவூர் வெண்ணாற்றங்கரையில் உள்ள 108 திவ்ய தேசங்களில் ஒன்றான நரசிம்ம பெருமாள் கோயில் சன்னதியில் திருமங்கை ஆழ்வார் மங்களா சாசனத்துடன் தொடங்குகிறது. ஜூன் 6ந் தேதி காலை 6 மணிக்கு வெண்ணாற்றங்கரை ஸ்ரீ நரசிம்மப் பெருமாள் கோயிலில் இருந்து திருமங்கை ஆழ்வார் அன்ன வாகனத்தில் எம்பெருமானை தொழுதவண்ணம் புறப்பட்டு செல்ல அவரைத் தொடர்ந்து திவ்ய தேச பெருமாள்களான தஞ்சை மாமணிக்கோயில் நீலமேகப்பெருமாள், ஸ்ரீ நரசிம்மப்பெருமாள், ஸ்ரீமணிகுன்றபெருமாள் புறப்பட கருட சேவை, தஞ்சாவூரின் பல பகுதிகளில் இருந்த பெருமாள்களும் கொடிமரத்து மூலைக்கு வந்து அங்கிருந்து தொடங்கி நான்கு ராஜவீதிகளிலும் காலை 7 மணி முதல் 12 மணி வரை சேவை சாதிப்பர்.

கருட வாகனத்தில் பெருமாள் எழுந்தருளி புறப்பாடு நடக்கும் போது விண்ணில் கருடன் மீது அமர்ந்திருக்கும் கோலத்தை நினைவுபடுத்தும். பெருமாளை சுமந்தவண்ணம் சிறகடித்து பறந்திடும் கருடனை தரிசிப்பதை போல நான்கு ராஜவீதிகளிலும் வரிசையாக கருடசேவை செல்வதை காண கண்கோடி வேண்டும். 27 நட்சத்திரத்தை குறிக்கும் வகையில் அமைந்துள்ளதால் நட்சத்திர தோஷங்கள், திருமணத் தடை நீங்கும். நீலமேகப் பெருமாள் ஆண்டாள் சமேதராக எழுந்தருளி அவரை தொடர்ந்து மற்ற ஆலய பெருமாள்கள் வலம் வருவர்.

ஒருவர்தம்வாழ்நாளில்தஞ்சைகருடசேவையில் கலந்துகொண்டு அனைத்து பெருமாள்களுக்கும் கல்கண்டு திராட்சை அல்லது பழங்கள் நிவேதனம் செய்து வழிபட்டால் அசுவமேத யாகம் செய்த புண்ணியத்தை பெறலாம் என்பது ஐதீகம்.

நவநீத சேவை: தஞ்சையில் ஜூன் 7ம் தேதி காலை 6 மணிக்கு வெண்ணாற்றங்கரையில் நவநீத சேவை 18 பெருமாள் கோவிலில் இருந்து நவநீத கிருஷ்ணன் அலங்காரத்தில் புறப்பட்டு காலை 7.30 மணி முதல் 11 மணி வரை தஞ்சை நான்கு வீதிகளிலும் வலம் வருவார். நவநீத சேவையில் கலந்துகொண்டு பெருமாளுக்கு வெண்ணெய் சாத்தி வழிபட்டால், குழந்தைபேறு கிட்டும். பிரசாத வெண்ணெய் சாப்பிட்டு குழந்தைபேறு கிடைத்தபின் தஞ்சை மேலவீதியில் அமைந்துள்ள நவநீத கிருஷ்ணன் கோவிலில் துலாபாரம் செய்வது வழக்கம். வீட்டில் மங்கலங்கள் நிலைத்திடவும் நிறைந்திடவும் மகப்பேறு வரமும் விழைவோரும் தஞ்சாவூர் கருட சேவையில் கலந்துகொண்டு பெருமாள் அருள் பெற திட்டமிடுங்கள். ஓம் நமோ நாராயணாய நமஹ.

– தாரிணி தியாகராஜன், மயிலாடுதுறை.

---

## வயோதிகம் - ஓய்ந்து போவதற்கில்லை

– Dr. D. Kalyanakumar, Trichy - 18.

வயோதிகம் என்றால் முதலில் நினைவுக்கு வருவது – வயது + அதிகம். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் எல்லா மனிதர்களும் வயதானவர்கள் தான். சிலரை மட்டும் வயதானவர்கள் என்று பிரித்தல் தகாது. எந்த அளவிற்கு வயோதிகர்கள் என்று மட்டும் அளக்கலாம். இறைவனின் பேரருள் இருந்தால் மட்டுமே ஒருவர் முதுமை பருவத்துக்குள் நுழைய முடியும். வயோதிகம் என்பது ஒரு வியாதியோ, குறையோ அல்ல. அது தவிர்க்க முடியாத ஒரு பருவம். எனவே, மனம் அதற்கு என்றும் தயாராக இருக்க வேண்டும். இது ஒரு வகையில் சார்பு நிலைப் பார்வைதான். ஒரு விளையாட்டு வீரருக்கு 40 வயதானால் அவர் வயோதிகராக அறியப்படுவார். அவருக்கு விருப்பம். திறமை இருந்தாலும் அதற்கு எதிராக அவருடைய வயது வந்து நிற்கும். ஆனால் அந்த வயதில் ஒரு அரசியல்வாதி இளைஞராகக் கருதப்படுவார். இது சமூகத்தின் பல நிலைகளுக்குப் பொருந்தும்.

முதுமையைப் பற்றி பேசினாலே மரணத்தைப் பற்றிய விவாதமும் தவிர்க்க முடியாதது. முதுமை வாழ்வு என்பது மரணத்தை எதிர்நோக்கும் ஒரு காத்திருப்பு இல்லை. அது நாம் வந்த வழியை ரசித்தலும் எஞ்சிய நாளை ஆனந்தித்தலும் ஆகும். இத்தகைய நிலை எல்லோருக்கும் வாய்க்காமல் போகலாம். இந்த உலகம் நிலையற்றது. எனவே நாம் செய்ய முடிந்ததெல்லாம் திட்டமிடலும், மனதைப் பக்குவப்படுத்தி வைத்தலுமே. முதுமைக்கான திட்டமிடல் வேண்டும். சார்பின்றி வாழத் தயாராகுதல். வாரிசுக் குழப்பங்களை தீர்த்து விடல் போன்றவை மனதை சச்சரவின்றி இலகுவாக வைத்திருக்க உதவும். மனஅழுத்தம் என்பது உடல் சக்தியை உறிஞ்சிவிடும். இதை அண்டவிடாமல் தடுப்பது மிக அவசியம். 'வயசாகலாம், தோல் சுருங்கலாம்... மனசும் சந்தோஷமும் சுருங்கிடக்கூடாது'.

'Aging with dignity and grace' என்று ஆங்கிலத்தில் ஒரு சொல்லாடல் உண்டு. வயதிலும் அழகு உண்டு. அந்த புற மற்றும் அக அழகைப் போற்ற முடிந்தாலே வாழ்வு வசந்தமாய் இருக்கும். வயோதிகம் என்பது ஒவ்வொரு மனிதனும் கடந்தே தீர வேண்டிய பாதை, ஒரு வளர்நிலைச் சடங்கு (Rite of passage). விதை காயானால், கனிந்து குழைதல் விதி என்பதை உணர்ந்திட்டால், அந்த மனப்புரிதல் ஏற்பட்டால், அந்த இயற்கை வரத்தை, நிலையை அனுபவிக்கும் ஒரு மனப்பக்குவம் ஏற்பட்டு விடும். அதுவே ஒரு சிறந்த வாழ்வின் அடையாளம். ''முதுமை, வேதனையும் வருத்தமும் தருமா என்றால், இல்லவே இல்லை. உறுதியாக இல்லை. உடல் முதுமை அடையும்போது உள்ளத்தை இளமையாக வைத்துக்கொண்டால் போதும்... வேதனைக் கோடுகள் முகத்தில் படியாது. வெறுமை நிழலும் வாழ்க்கையில் விழாது என்பதே நிஜம்''.

முதுமை என்பது தவிர்க்க முடியாத சுமை என்கிற மனோபாவம்தான் இன்று பலருக்கும் இருக்கு. ஆனா, அது அப்படியல்ல. மாங்காய் புளிப்பாக இருக்கும். மாம்பழம் இனிப்பாக இருக்கும். அதுமாதிரி சில விஷயங்கள் இளமையைவிட முதுமையில் சுவையாக இருக்கும். அதை நாம புரிஞ்சுக்கணும். உணரணும். குழந்தைப் பருவம் போல முதுமைப் பருவமும் கொண்டாடப்பட வேண்டிய ஒன்று. பிறப்பும் இறப்பும் நம் கையில் இல்லை. ஆனால், இடைப்பட்ட வாழ்க்கை நம் கையில்தான். அறிந்தே செய்த பாவங்களுக்குப் பரிகாரம் தேடுங்கள்.

## திருச்சிற்றம்பலம்

**என் ஆரா அமுதே, விட்டுடுதி கண்டாய்... உத்தரகோசமங்கை அரசே!**

"மண் முந்தியோ, மங்கை முந்தியோ" என்று போற்றப்படும் மிகத் தொன்மையான, மூவாயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த சிவத்தலம் திருஉத்தரகோசமங்கை. இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள இத்தலத்திற்கும், சைவ சமயக் குரவர்களில் ஒருவரான மாணிக்கவாசகப் பெருமானுக்கும் இடையே உள்ள பக்திப் பிணைப்பு உலகியல் எல்லைகளைக் கடந்தது. மாணிக்கவாசகர் தனது திருவாசகத்தில் சுமார் 38 இடங்களில் இத்தலத்தைப் பாடிப் பரவியுள்ளார்.

**1. உத்தரகோசமங்கைக்கு மாணிக்கவாசகரின் வருகை**

திருப்பெருந்துறையில் சிவபெருமானே குருவடிவாக வந்து ஆட்கொண்டார். பின்பு குருநாதர் மறைந்தபோது மாணிக்கவாசகர் சொல்லொணாத் துயரம் அடைந்தார். அப்போது அசரீரியாக ஒலித்த இறைவன், "நீ உத்தரகோசமங்கைக்கு வா, அங்கு உனக்கு மீண்டும் காட்சி தருவோம்" என்று அருளினார். அதன்படியே, தன் குருநாதரைத் தேடி உருகிய நெஞ்சத்தோடு மாணிக்கவாசகர் இத்தலத்தினை வந்தடைந்தார்.

**2. அக்னி தீர்த்த ரகசியமும் ஆயிரம் முனிவர்களும்**

இலங்கையின் அரசி மண்டோதரியின் பக்திக்கு மெச்சி சிவபெருமான் அவளுக்குக் காட்சி தரச் சென்றபோது, உத்தரகோசமங்கையிலிருந்த வேத ஆகமநூல்களைப்பாதுகாக்கும்பொறுப்பை அங்கிருந்த முனிவர்களிடம் ஒப்படைத்தார். அப்போது தோன்றிய சோதனை அக்னிக்கு அஞ்சி 999 முனிவர்கள் தீர்த்தத்தில் விழுந்து உயிர் துறந்தனர். ஆனால், ஒரே ஒரு முனிவர் மட்டும் ஆகம நூல்களைத் தன் உயிரினும் மேலாகக் கருதி, அக்னியைப் பொருட்படுத்தாமல் காத்து நின்றார். அந்த அசாத்திய பக்தி கொண்ட முனிவரே மறுபிறவியில் மாணிக்கவாசகராக அவதரித்தார் என்பது இத்தலத்தின் வரலாறு. மறைந்த 999 முனிவர்களுக்காக சகஸ்ரலிங்கமாகவும் (ஆயிரம் லிங்கங்கள்), எஞ்சிய அந்த ஒரு முனிவருக்காகத் (மாணிக்கவாசகர்) தனி ஒரு லிங்கமாகவும் இறைவன் இத்தலத்தில் எழுந்தருளினார்.

**3. "நாயகி–நாயகன்" பாவனை பேரன்பு**

உத்தரகோசமங்கை மங்களநாதரின் மீது மாணிக்கவாசகர் கொண்டிருந்த அன்பு சாதாரண பக்தியைக் கடந்தது. அது ஒரு தலைவனுக்காக ஏங்கும் தலைவியின் காதல் போன்ற உன்னதமான "நாயகி–நாயகன்" பாவனை பக்தி ஆகும். இறைவனைத் தன் உயிருக்கு நிகரான காதலனாக, உண்ண உண்ணத் தெவிட்டாத "ஆரா அமுதாக" பாவித்து, தன் பதிகங்களில் உருகியுள்ளார். உலக சுகங்கள், பதவி, உறவுகள் அனைத்தையும் முழுமையாக மறந்து, மங்களநாதரின் திருவடிகளை மட்டுமே தஞ்சமாகக் கொண்டு அவர் பாடிய பாடல்கள், இன்றும் இத்தலத்தின் மாறாத பக்திப் பேரன்பை உலகிற்கு பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

**4. விட்டுடுதி கண்டாய் – பிரிவாற்றாமைத் துயர்**

"இறைவா! என்னை இந்த உலகத் துயரங்களில் தனியே விட்டுவிடாதே" என்று கெஞ்சி, உருகிப் பாடிய பதிகம் நீத்தல் விண்ணப்பம் ஆகும். "வலைப்பட்ட மானின்" கண்கள் போலவும், "முதலை வாயில் அகப்பட்ட உடும்பு" போலவும் இந்த உலக இன்ப துன்பங்களில் தான் சிக்கித் தவிப்பதாகக் கூறி, "உத்தரகோசமங்கைக்கு அரசே... என்னை விட்டுடுதி கண்டாய்" (என்னை விட்டிடாதே) என்று ஒவ்வொரு பாடலின் முடிவிலும் கதறுகிறார்.

சிறப்புப் பதிகமும் பொருளும்: நீத்தல் விண்ணப்பம்

கடையவ னேனைக் கருணையி னாற்கலந்
தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல்
வேங்கையின்தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்
பிரான்என்னைத் தாங்கிக்கொள்ளே...!

கடையவனேனைக் கருணையினாற்கலந் தாண்டுகொண்ட விடையவனே: தகுதியே இல்லாத, எல்லாரிலும் கடையனாகிய என்னை, உன்னுடைய அளப்பரிய கருணையினால் என்னோடு கலந்து ஆட்கொண்ட விடைப்பாகனே (காளை வாகனத்தை உடையவனே)!

விட்டிடுதிகண்டாய் விறல்வேங்கையின்தோல் உடையவனே: வலிமை மிக்க புலியின் தோலை ஆடையாக உடுத்தியவனே! என்னை இந்த உலகப் பாசத்தில் தனியே விட்டிடாதே! மன்னும் உத்தரகோசமங்கைக்கரசே சடையவனே: நிலைபெற்று விளங்கும் தலமான திருஉத்தரகோசமங்கையின் பேரரசனே! சடைமுடியைக் கொண்ட பெருமானே!

தளர்ந் தேன்எம்பிரான் என்னைத் தாங்கிக்கொள்ளே: உன்னைப் பிரிந்து நான் மனதாலும் உடலாலும் மிகவும் தளர்ந்துவிட்டேன். என் எம்பிரானே, நான் கீழே விழுந்துவிடாமல் உன்னுடைய பேரன்பால் என்னைத் தாங்கிக் கொள்ள வேண்டும் என்று அழுது அடியிடுகிறார்.

“அழுது அடி அடைந்த அன்பர்” என்று சைவ உலகம் மாணிக்கவாசகரைப் போற்றுகிறது. அவர் அழுததும், உருகியதும், தன் அமுதான திருவாசகப் பாடல்களான நீத்தல் விண்ணப்பம், திருப்பொன்னூசல் தந்ததும் இந்தத் திருஉத்தரகோசமங்கை திருத்தலத்தில்தான். தன் அமுதான திருவாசகப் பாடல்களால் மங்களநாதரை உருகி உருகி வழிபட்ட மாணிக்கவாசகரின் பக்தித் தழல், இன்றும் இத்தலத்திற்கு வரும் ஒவ்வொரு பக்தரின் மனதிலும் பக்திப் பரவசத்தை ஊட்ட வல்லது.

ஒளிர்கின்ற நீள்முடி உத்தர கோசமங்கைக்கரசே...!!!

திருச்சிற்றம்பலம்

– சிவ மை. அகிலா

திருத்துூங்கானைமாடம் (பெண்ணாகடம்)

9715698424

---

## செயற்கை நுண்ணறிவு (AI)

– எதிர்கால உலகின் புதிய புரட்சி

இன்று உலகம் மிக வேகமாக மாறிக்கொண்டிருக்கிறது. மின்சாரம், இணையம், ஸ்மார்ட்போன் ஆகியவை மனித வாழ்க்கையை மாற்றியமைத்தது போல, தற்போது Artificial Intelligence (AI), செயற்கை நுண்ணறிவு உலகையே மாற்றி அமைத்து வருகிறது. முன்பு மனிதர்கள் மட்டுமே செய்ய முடியும் என்று நினைத்த பல வேலைகளை, இன்று AI மிக வேகமாகவும், துல்லியமாகவும் செய்து வருகிறது. எளிமையாக, “மனிதன் போல சிந்தித்து, கற்றுக்கொண்டு, முடிவெடுக்க உதவும் கணினி தொழில்நுட்பமே AI” எனலாம்.

AI என்றால் என்ன? AI என்பது கணினி மற்றும் மென்பொருள்களுக்கு ‘சிந்திக்கும் திறன்’ கொடுக்கும் ஒரு தொழில்நுட்பம். நீங்கள் அலைபேசியில் பேசும்போது வரும் voice assistant; Google Translate; Chat GPT; YouTube Recommendation; Face Recognition; Self Driving cars; Medical Diagnosis Systems என அனைத்தும் AI பயன்பாடுகளே!

**AI வேலை செய்வது எப்படி ?**

AI மூன்று முக்கிய அம்சங்களின் அடிப்படையில் செயலாற்றும்.. 1) Data (தகவல்கள்), 2) Learning (கற்றல்) 3) Decision Making (முடிவு எடுக்கும் திறன்). AI அதிக அளவில் படித்து, கற்றுக்கொண்டு, அதன் அடிப்படையில் முடிவுகளைத் தருகிறது. தற்காலத்தில் உருவெடுக்கும் முக்கிய தொழில்நுட்பங்களானவை, 1) இன்று உலகம் பேசும் Emerging Technologies; Artificial Intelligence (AI); மனித சிந்தனையைப் போன்ற கணினி செயல்பாடு 2) Machine Learning; கணினி தானாக கற்றுக் கொள்வது 3) Robotics; மனித வேலைகளை செய்யும் இயந்திரங்கள் 4) Internet of Things (IoT); அனைத்து சாதனங்களும் இணையத்துடன் இணைவது 5) Cloud Compuing; இணையத்தின் மூலம் தகவல் சேமித்தல் 6) Cyber Security; டிஜிட்டல் பாதுகாப்பு 7) Block Chain; பாதுகாப்பான டிஜிட்டல் பரிவர்த்தனை முறை 8) Data Science; தகவல்களை ஆய்வு செய்து முடிவு எடுக்கும் தொழில்நுட்பம்.

**AI–பயன்பாடு பல்வேறு துறைகளில் :**

***மருத்துவம்:*** நோய் கண்டறிதல்; ஸ்கேன் ஆய்வு; மருந்து கண்டுபிடிப்பு.

***கல்வி:*** Personalized learning ; ஆன்லைன் ஆசிரியர்கள்; வகுப்புகள்; Smart Evaluation

***வங்கி:*** மோசடி கண்டுபிடித்தல்; Customer Service, Chatbots.

***தொழிற்சாலைகள்:*** Automation; Quality checking.

***விவசாயம்:*** மண் ஆய்வு; பயிர் கண்காணிப்பு; நீர் மேலாண்மை.

***ஊடகம்:*** Content Creation; Video Editing; மொழிபெயர்த்தல்.

AI துறை அடுத்த 20–30 ஆண்டுகளுக்கு மிகப் பெரிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்று உலகம் முழுவதும் நம்பப்படுகிறது. ஆகையால் பள்ளி மாணவர்கள் உயர்நிலை வகுப்புகளில் கவனம் செலுத்த வேண்டிய பிரிவுகள் கணிதம், அறிவியல், கணினி அறிவியல், Logical Thinking and Communication skills. கல்லூரியில் கல்வி கற்க தேர்ந்தெடுக்க கூடிய பாடப் பிரிவுகளானவை: பொறியியலில்: AI; Data

Science; Computer Science; Machine Learning; Robotics; Cyber Security; Information Technology ஆகும். இளங்கலை படிக்க விரும்புபவர்கள் B.Sc. AI & ML; BCA; B.Sc. Comp. Science; Data Analytics பிரிவுகளில் ஏதேனும் ஒன்றினை எடுத்து படிக்கலாம். மேற்படிப்புகளில் M.Tech AI; MBA in Business Analytics; M.Sc. Data Science எடுத்து படிக்கலாம்.

**AI கற்க உதவும் முக்கிய திறன்களானவை:**

1) Programming (Python முக்கியம்); 2) Mathematics; 3) Statistics; 4) Problem Solving; 5) Communication; 6) Creativity.

AI என்பது IT மாணவர்களுக்கு மட்டும் அல்ல; இன்று அது Commerce, Arts, Agriculture, Medicine, Law, Media என எல்லாத் துறைகளிலும் பயன்படுத்தப்படுகிறது.

**பொதுமக்கள் AI ஐ எப்படி பயன்படுத்தலாம்?**

***1) விவசாயிகள்:*** AI மூலம் வானிலைத் தகவல், மண்தர ஆய்வு, உர பரிந்துரை, பூச்சி நோய் கண்டறிதல், சந்தை விலை கணிப்பு போன்றவற்றை தெரிந்து கொள்ள முடியும். பயன்களாக செலவு குறையும்; விளைச்சலும் லாபமும் அதிகரிக்கும்.

***2) இல்லத்தரசிகள்:*** AI உதவியுடன் சமையல் குறிப்புகள், உடல்நல ஆலோசனை, குழந்தைகள் படிப்பு உதவி, குடும்ப செலவு திட்டமிடல், ஆன்லைன் சிறு வியாபாரம் போன்றவற்றை சிறப்புடன் கையாளலாம். ஒரு இல்லத்தரசி AI உதவியுடன் YouTube Channel அல்லது Online Business தொடங்கலாம்.

***3) சிறு வியாபாரிகள்:*** AI மூலம் Digital Marketing, Digital Banking, Customer support, Bill Preparation, Inventory Management, Social Media content போன்றவைகளை மேற்கொள்ளலாம்.

***4) ஆசிரியர்கள்:*** பாடக்குறிப்பு தயாரித்தல், தேர்வு வினாத்தாள் உருவாக்குதல்; மாணவர் மதிப்பீடு என பயன்பெறலாம்.

***5) மூத்த குடிமக்கள்:*** AI உதவியுடன் உடல் பரிசோதனை நினைவூட்டல், மருந்து நினைவூட்டல், மொழிபெயர்ப்பு, தகவல் தேடல், பொருட்கள் வாங்குதல் போன்றவைகளை மேற்கொள்ளலாம்.

***AI-யின் நன்மைகள்:*** 1) வேகமான வேலை, மனிதர்களை விட விரைவாக செயல்படும்; 2) துல்லியம், பிழைகள் குறையும்; 3) நேர சேமிப்பு, மீண்டும் மீண்டும் செய்யும் வேலைகளை எளிதாக்கும்; 4) புதிய வேலை வாய்ப்புகள், புதிய துறைகள் உருவாக வழி வகுகிறது.

***AI-யின் சவால்கள்:*** 1) வேலை மாற்றங்கள், சில பழைய வேலைகள் குறையலாம்; 2) தனியுரிமைப் பிரச்னைகள், Data பாதுகாப்பு அவசியம் 3) தவறான தகவல்கள், AI கொடுக்கும் தகவல்களை சரி பார்க்க வேண்டும்.

AI பயன்படுத்தும் போது, எல்லாத் தகவல்களையும் உடனே நம்ப வேண்டாம்; மனித சிந்தனை இன்னமும் முக்கியம்; ஒழுக்கத்துடன் பயன்படுத்த வேண்டும்; குழந்தைகள் மிகவும் பாதுகாப்பாக பயன்படுத்த வேண்டும். வருங்காலங்களில் AI மருத்துவர்கள்; AI ஆசிரியர்கள்; Smart Class; வாகன ஓட்டி இல்லாத வாகனங்கள்; Intelligent Farming போன்றவை சாதாரணமாகிவிடும். AI-ஐக் கண்டு பயப்பட தேவை இல்லை. அதை சரியாக கற்றுக்கொண்டு, நேர்வழியில் பயன்படுத்த வேண்டும்.

செயற்கை நுண்ணறிவு என்பது வெறும் தொழில்நுட்ப மாற்றம் அல்ல; அது மனித வாழ்வின் புதிய பரிணாமம். இன்றைய குழந்தைகள் AI உடன் வளரப் போகிறார்கள். ஆதலின் மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்; பெற்றோர், ஆசிரியர்கள் புரிந்து கொள்ள வேண்டும்; பொதுமக்கள் பயன்படுத்த தெரிந்துகொள்ள வேண்டும். AI மனிதனை மாற்ற வரவில்லை; வேலைகளை எளிதாக்கவே வந்துள்ளது. AI ஐ சரியாக பயன்படுத்தும் மனிதர்களே எதிர்காலத்தை வழிநடத்தப் போகிறார்கள். இன்று உலகமெங்கிலும் பல பிரபலமான AI கருவிகள் (Tools) பயன்பாட்டில் உள்ளன. அவை யாவன; 1) Chat GPT 2) Google Gemini 3) Microsoft Capilot 4) Claude AI 5) Perplexity AI 6) Grok AI 7) Canva AI 8) Midjourney 9) DALL-E 10) Grammarly AI. இவைகள் மூலம் தகவல்கள் அறிதல்; மொழிபெயர்ப்பு; கட்டுரைகள் எழுதுதல்; படங்கள் உருவாக்குதல்; Presentation தயாரித்தல்; Coding உதவி; கல்வி மற்றும் ஆராய்ச்சி; வணிக வளர்ச்சி போன்ற பல வேலைகளை எளிதாக செய்யலாம். எந்த ஒரு தலைப்பையும் இந்த AI கருவிகள் மூலம் ஆழமாக, ஆராய்ந்து அறியலாம். AI உலகத்தைப் புரிந்து புத்திசாலித்தனமாக பயன்படுத்துவோம்!

இக்கட்டுரை AI உதவியுடன் தயாரிக்கப்பட்டது. AI-க்கு நன்றி!

T.M. நடராஜன் M.B.A.
**9952911133**

# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | **செல்வன் E. ஒளிநிலவன்** |
| படிப்பு | M.B.B.S., |
| வேலை | மருத்துவர் ராம்மோகன் லோகியா மருத்துவமனை, டெல்லி<br>Rs. 16,00,000/PA |
| பிறந்த தேதி | 13.09.1997 |
| உயரம் | 175 cm |
| நட்சத்திரம் | திருவோணம் |
| கோத்திரம் | விளந்துட |
| பூர்வீகம் | சிறகிழந்தநல்லூர் |
| தகப்பனார் | **V. இளஞ்செழியன்,**<br>ஆசிரியர் (பணி மூப்பு) |
| தாயார் | **சி. சாந்தி** (சீர்காழி)<br>ஆசிரியை அரசினர் மேல்நிலைப் பள்ளி புவனகிரி |
| முகவரி | 150, சடகோபன் நகர்,<br>சிதம்பரம் - 608 001.<br>Cell : 94432 07434<br>E-mail : rec2k8@gmail.com |
| விருப்பம் | M.B.B.S. முடித்த உயரமான, அழகான பெண். |



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் தங்க வெங்கடேசன்** |
| படிப்பு | BCA, |
| வேலை | சிங்கப்பூர்<br>Rs.1,27,000/PM |
| பிறந்த தேதி | 18.10.1998 |
| நட்சத்திரம் | அஸ்தம் |
| கோத்திரம் | விஸ்வராய |
| பூர்வீகம் | சேப்பாக்கம், கடலூர் (DT) |
| தகப்பனார் | **கோவி தங்கராஜ பிள்ளை** |
| தாயார் | **மீனாட்சி** |
| முகவரி | சேப்பாக்கம், வடக்கு தெரு,<br>வேப்பூர் (வ),<br>கடலூர் (மா) - 606 302.<br>Cell : 90475 38074, 88837 77536 |



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் A. சிவராஜ்** |
| படிப்பு | DME, B.Tech., |
| வேலை | Plant Engineer - Team Member,<br>Dr. Reddy's Laboratories Ltd.<br>Visakhapatnam<br>Rs. 6,80,000/LPA |
| பிறந்த தேதி | 03.11.1996 |
| உயரம் | 178 cm |
| நட்சத்திரம் | பூசம் 3ம் பாதம் |
| கோத்திரம் | காங்கேய |
| பூர்வீகம் | விளத்தொட்டி, திருச்சிற்றம்பலம் |
| தகப்பனார் | **K. அருணாச்சலம்** (விவசாயம்) |
| தாயார் | **A. ராஜலெட்சுமி** (இல்லத்தரசி) - கீழையூர் |
| முகவரி | 151/1, வெள்ளாளர் தெரு,<br>விளத்தொட்டி, திருச்சிற்றம்பலம்,<br>மயிலாடுதுறை - 609 204.<br>Cell : 9488337540 (Whatsapp)<br>86819 97540 |
| விருப்பம் | பணியில் உள்ள வரன் / பணிக்கு செல்ல விருப்பமுள்ள வரன். |



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் R. வினோத்** |
| படிப்பு | M.Sc. (ELE) |
| வேலை | LECS Coimbatore<br>as Senior Engineer<br>Rs. 6 Lakhs/PA |
| பிறந்த தேதி | 08.07.1987 |
| உயரம் | 185 cm |
| நட்சத்திரம் | அனுஷம் |
| கோத்திரம் | மாயவுட |
| பூர்வீகம் | உட்கோட்டை, அரியலூர் Dt. |
| தகப்பனார் | **R. ராஜகோபால்,** மேலாளர்<br>நவீன அரிசி ஆலை, குத்தாலம் |
| தாயார் | புலவர் **வசந்தா**<br>இல்லத்தரசி |
| முகவரி | 27/2, உத்திர தெற்கு வீதி,<br>குத்தாலம் - 609 801.<br>மயிலாடுதுறை Dt.<br>Cell : 9894416777(W), 9894519777 |
| விருப்பம் | மறுமணம் / முதல் மணம் |



# மணமகள் தேவை

பெயர் செல்வன் **S. RAVEEN KUMAR**
படிப்பு M. Tech., VLSI.,
வேலை Senior Engineer
MNC @ Chennai
Rs. 48 lakhs per Annum
பிறந்த தேதி 21.11.1993
உயரம் 175 cm
நட்சத்திரம் Sathayam
கோத்திரம் Kanagarayar
பூர்வீகம் Madurai



தகப்பனார் **A. Sankar**
Retd Director of School Education
தாயார் **P. Vasanthi**
Retd Head Mistress Govt HSS School
முகவரி Plot No. 28 & 29, VGN Highness,
Srinivasapuram, Iyyappanthangal,
Chennai-600056.
Cell : 7845914635/ 9488094635
விருப்பம் Employed or Employable Good looking girl belongs to respectable family

---

பெயர் செல்வன் **P. GOKUL**
படிப்பு DME, B. Tech (MECH)
TDConnex Private Limited
Sr. Logistics Executive, Chennai
Rs. 5,20,000/-
பிறந்த தேதி 16-03-1999
உயரம் 6 ft"
நட்சத்திரம் Sathayam
கோத்திரம் Kalingaraya
பூர்வீகம் Kesingan



தகப்பனார் **C. Pattabiraman**
தாயார் **P. Kavitha** (Manalmedu)
முகவரி No 68 Vellala Street, Kesingan,
Athur (PO),
Mayiladuthurai (Tk, Dt) - 609 204
Cell : +91 94869 08895,
+91 63690 07128

---

பெயர் செல்வன் **K. KAILASH**
படிப்பு B.E. (Mechanical), MBA (Pursuing)
வேலை HTC Global Services,
IT Professional, Chennai
₹17 Lakhs per annum
பிறந்த தேதி 23-12-1999
உயரம் 182 cm
நட்சத்திரம் Thiruvathirai – 2nd Paatham
கோத்திரம் Vilanthuda
பூர்வீகம் Sirakizhanthanallur
(Chidambaram TK)
தகப்பனார் **B. Karthikeyan Pillai**
(Retired / Pensioner)
Senior Accountant, Audit Department
தாயார் Late **P. Kalaiselvi**
Section Officer,
Department of Zoology
முகவரி Kandhanchavadi,
Chennai – 600096
Cell : 7695855865




hotel saradharam
chidambaram
STAY IN THE HEART OF CHIDAMBARAM!
UNMATCHED LOCATION ADVANTAGE!
Hotel Saradharam
OPPOSITE CHIDAMBARAM BUS STAND
Just Cross the Street!
WALKABLE TO RAILWAY STATION
Less than 1 km Away
WALKABLE TO LORD NATARAJA TEMPLE
Quick & Hassle-free Access
OUR ROOM CATEGORIES
Economy Non-A/C
Deluxe A/C
Premium A/C
Executive A/C
PERFECT FOR EVERY GROUP
Marriage & Family Groups
Pilgrimage Tour Groups
Self-Kitchen Tour Groups
Corporate Delegations
THE SARADHARAM ADVANTAGE
Complimentary Breakfast
Free High-Speed Wi-Fi
Huge Secure Parking
24x7 Hot & Cold Water
Seamless GST Billing
BOOK YOUR GROUP STAY TODAY!
+91 94425 91475
+91 94425 91466
Call directly to check availability and get special group discounts!
#HotelSaradharam #StayinteartofChidambaram
www.hotelsaradharam.com

# இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்:
**10–05–1950**

மறைவு:
**12–07–2024**

தெய்வத்திரு **N. வசந்தா** அவர்கள்

சிதம்பரம் வட்டம் தெற்கு விருதாங்கநல்லூர் G. நடராஜன் பிள்ளை அவர்களின் மனைவி **N. வசந்தா** அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு நாள்

கணவர் : **கோ. நடராஜன் பிள்ளை** (ஆசிரியர் ஓய்வு)

மகன் : **ந. முருகன்**

மருமகள் : **இந்திராணி முருகன்**

மருமகன் : **S. பிரகாஷ்**

பேரன் : **K.P. தினேஷ்**

பேத்தி : **P. நிவேதா**

மற்றும் **உறவினர்கள்**


MARUTHI®
LET THE SUN
PAY YOUR
EB BILL
29 YEARS OF EXCELLENCE
INSTALL SOLAR
ROOFTOP SYSTEM
GET ₹0
ELECTRICITY
BILL
KEY FUTURE
BEST RETURN ON INVESTMENT - 19% TO 26%
NON POLLUTING - REDUCES GLOBAL WARMING.
EXCESS POWER GENERATED CAN BE SOLD.
28 YEARS PANEL WARRANTY.
CALL US
98418 28077
www.maruthipower.com
ANANDHAM SELVAKUMAR - CEO

Posted at Egmore RMS, Pathrikachanel, Chennai - 08.
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH( C) / 405 /2025 - 2027 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/2025-2027
Date of Publication : 15th of Every Month
15th / 16th July 2026

CHOZHA HOTELS

# HOTEL KANAKABHISHEGAM

## First Hotel From The Temple

***"We are truly honored that Mr. Arjunamoorthy (Leader of the Indian People's Progress Party) chose to stay at Hotel Kanakabhishegam & Amirtham Restaurant. His presence was a privilege for us, and we are grateful for the opportunity to serve him with our signature hospitality. We thank him sincerely for his inspiring leadership and wish him continued success.***



***At Hotel Kanakabhishegam, we remain committed to hosting leaders, shaping memories, and delivering excellence to every guest.***

Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

**Published by : K. SHANMUGAM,** on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 72/88, Kamaraj Colony 8th Street, (Palayakaran Street) Kodambakkam, Chennai, Tamil Nadu - 600 024. **Editor : S. ANBALAGAN**